675

# பூந்தமிழ் வாசகம்

## 7



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 AUG 1957
MADRAS

675
5-11

613

TB
031(7)
N53
132172

...வெங்கடராமன் கம்பெனி
...ஷர்ஸ் :: கும்பகோணம்

# பூந்தமிழ் வாசகம்

## ஏழாம் புத்தகம் – ஏழாம் வகுப்பு

[கல்விஇலாகா 26—6—'51-ல் வெளியிட்டுள்ள புதிய பாடதிட்டத்துக்கிணங்கத் தயாரிக்கப்பட்டது]

வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை
பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி

Approved by the Text-Book Committee, Madras
[Vide page 25 (Part I-B) of the Fort St. George Gazetted 19—5—54]

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் * கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை 14 அணா=87 ந பை

10
3(Y)
N53

# முன்னுரை

தமிழ் நாட்டு உயர்தர ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கெனச் சென்னை அரசியலார் வெளியிட்டுள்ள பாட திட்டத்துக்கிணங்க இப் பூந்தமிழ் ஏழாம் வாசகம் தயாரித்ததாகும்.

இதனுள், தமிழ் மக்களின் நற்பண்புகளையும், தமிழ் மொழியின் தனிச் சிறப்புகளையும் நன்கு உணர்த்தும் வகையிலும், இளைஞர்களின் பொது அறிவை வளர்க்கும் முறையிலும், பாடங்கள் மாணவர் தகுதிக்கேற்பத் தெள்ளிய தமிழ் நடையில் உரைநடைப் பகுதியில் அமைந்துள்ளன.

செய்யுட் பகுதியில் மாணவர்கட்குக் கடவுட்பற்று, நல்லொழுக்கம், அறிவு வளர்ச்சி, மொழிவளம் இவை நன்கு அமையும் வகையில் துதிப்பாக்கள், நீதிச்செய்யுட்கள், கதைகள், வருணனைப் பகுதிகள், பல்சுவைப் பாக்கள் முதலியன இடம் பெற்றுள்ளன. இவை எளியனவாய், இனியனவாய் மாணவர் நிலைக்கு ஏற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பெற்றனவாம்.

ஒவ்வொரு பாட முடிவிலும் மாணவரின் சுய முயற்சியைத் தூண்டும்பொருட்டுச் சொல்வளம், கருத்துணர்தல், கட்டுரை எழுதுதல் இவைபற்றிய பயிற்சிகள் இணைக்கப்பெற்றுள்ளன.

இப்புத்தகவரிசையுள் தமது நூல்களிலுள்ள செய்யுட்களை எடுத்தாளுதற்கு உரிமை வழங்கிய பேரறிஞர்கட்கு எங்கள் உளமார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

இந்நூல் வரிசை தமிழ் மாணவ உலகுக்குப் பெரிதும் பயன்படுமாறு திருவருள் துணைபுரிக!

திருச்சிராப்பள்ளி,
8—6—1953

தி. பட்டுச்சாமி ஓதுவார்
கோ. இரத்தினம் பிள்ளை

ஆவணக்காப்பக
132172.

## உள்ளுறை

### [உரைநடைப் பகுதி]


| எண் | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இறைவன் மாண்பு | ... | 1 |
| 2. | நமது தாய்மொழி | ... | 4 |
| 3. | ஏகம்பவாணன் | ... | 9 |
| 4. | சின்கோனு மரம் | ... | 13 |
| 5. | நான் கண்ட குமரி முனை | ... | 17 |
| 6. | கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை | ... | 22 |
| 7. | ஊசி செய்தல் | ... | 28 |
| 8. | ஈகை | ... | 33 |
| 9. | வட துருவம் கண்ட பியரி | ... | 38 |
| 10. | ஆனினம் | ... | 46 |
| 11. | நக்கீரர் (நாடகம்) | ... | 53 |
| 12. | வானொலி | ... | 61 |
| 13. | சுதந்திர வீரர் கட்டபொம்மன் | ... | 68 |
| 14. | அழகுக் கலைகள் | ... | 76 |
| 15. | தாயின் மணிக்கொடி | ... | 84 |
| 16. | ஊன்றிக் கருத்துணர்தல் | ... | 90 |
| 17. | சியவன முனிவர் | ... | 93 |

## [செய்யுட் பகுதி]


எண் | | பக்கம்
---|---|---
I. | துதி மலர் : |
| கடவுள் வணக்கம்—தேவாரம்—திவ்யப் பிரபந்தம்—திருப்புகழ்—ஏசுநாதர்—நாட்டு வாழ்த்து ... | 97—99
II. | நீதி மலர் : |
| 1. திருக்குறள் 2. நன்னெறி 3. திரிகடுகம் 4. சதகம் ... | 99–107
III. | கதை மலர் : |
| 1. விருந்தோம்பல் 2. புத்தரும் குழந்தையை இழந்த தாயும்... | 108–110
IV. | வருணனை மலர் : |
| 1. மயில் 2. வெண்ணிலா ... | 111
V. | பல வகைப் பாமலர் : |
| 1. ஆடு ராட்டே 2. ஆடையின் பெருமை 3. உழவு 4. வாழ்க்கைப் பயன் ... | 112–113
| குறிப்புரை ... | 114–123



தியாகராஜ சுவாமிகள்

# பூந்தமிழ் வாசகம்

## ஏழாம் புத்தகம்

## 1. இறைவன் மாண்பு

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசகர்

உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் ஆக்கி அளிக்கும் அநாதியான தலைவனே இறைவன் அல்லது கடவுள். கடவுள் நாம் காணும் இயற்கைப் பொருள் களினிடத்து ஊடுருவி நின்று அவற்றை இயக்குகின்றார். இறைவனது மாட்சியை முழுவதும் நம் வாக்கினால் விவரிக்கவும், மனத்தினால் நினைக்கவும் இயலாது. ஆனால், இயற்கை மாண்பைக் கண்டு இறைவன் மாண்பை ஒரளவு நாம் உணர்தல் கூடும்.

கடவுள் இவ்வுலகத்தை மட்டுமின்றி வானத்தில் தோன்றும் ஞாயிறு, திங்கள், எண்ணிறந்த நட்சத்திரங்கள் முதலிய கோடானுகோடி புவனங்களையும் படைத்துள்ளார். ஆன்றோர் கூறியவாறு கடைகால், தூண், சுவர் முதலியன இன்றியே அந்தரத்திலாடும் பம்பரம் போன்ற இப்பூவுலகாகிய பெரும் மாளிகையை நாம் வசிப்பதற் கேற்றதாக அமைத்துள்ளார். தாங்குங்கால்களின்றி

வானமாகிய மண்டபம் வளைத்து, வயிர மணி போன்ற நட்சத்திரங்களை அதில் மின்னச் செய்துள்ளார். இரு பெருஞ் சுடர்களாகிய சந்திர சூரியர்களை, எண்ணெயுந் திரியுமின்றி ஒளிரும் இரு பெரும் விளக்குகளாக ஏற்றி வைத்திருக்கிறார். பசும் புற்களினுலாகிய இரத்தினக் கம்பளங்களைப் புவிமீது விரித்துள்ளார். மதுரமான கனிவகைகளையும், மணங்கமழும் மலர்களையும் அளிக்கும் மரஞ்செடி கொடிகள் செறிந்த காடுகளைச் சிங்காரத் தோட்டங்களாக நிருமித்திருக்கிறார். மலைகளாகிய உன்னதச் சிங்காதனங்களையும் அருவி, நதி, ஏரி முதலான நீராடு துறைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். கடலும் மேகமுமான இனிய வாத்தியக்காரர்களையும், அன்னம், மயில் முதலிய நடனப் பெண்களையும், குயில், வானம்பாடி முதலிய இசைவாணர்களையும், கார்மேகமான பனிநீர் தெளிப்பவனையும், வாயுவாகிய ஆலவட்டம் வீசுபவனையும், அக்கினியாகிய சமையற்காரனையும் ஊதியம் பெறுத ஊழியக்காரர்களாய் நமக்கு நியமித்துள்ளார்.

இன்னும் கூர்ந்து நோக்குவோமாயின், இவ்வுலகமே நமக்கு ஒரு பெரிய கல்விச்சாலையாக விளங்குகின்றது. பூமியின்கண் திகழும் மலைகள், கடல்கள், நதிகள் முதலியனவும், வானத்தில் உலாவும் சூரிய சந்திர நட்சத் திரங்களும், மென்மையாக வீசும் மந்தமாருதமும், இன்னும் காணப்படுகின்ற ஒவ்வோர் இயற்கைப் பொருளும் இறைவன் மாண்பை நமக்கு எடுத்து உபதேசிக்கும் குருமூர்த்திகளாக விளங்குகின்றன.

கடவுள் எங்கும் நிறைந்தவர். எழில்மிக்க மலர்களின் மணத்திலும், பறவைகளின் இன்னிசையிலும், சுடர்களின் ஒளியிலும், குழவிகளின் மழலை மொழியிலும், நீரோடை

களின் நிலைத்த ஓசையிலும் அவரது இனிய வடிவத்தை உணரலாம். அரசன் முதல் ஆண்டி ஈருகவும், யானை முதல் எறும்பு ஈருகவுமுள்ள இருதிணைப் பொருள்களிலும் அவர் நீக்கமற நிறைந்து விளங்குகின்றார். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற முதுமொழிக்கிணங்க நமது இதயத்தின் ஒவ்வொரு துடிப்பிலும், பேசும் ஒவ்வொரு பேச்சிலும், சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சிலும் அவரது அருள் சுரந்தவண்ணம் இருக்கின்றது. இவ்வாறு நம்முள்ளே கலந்துள்ள அவ்விறைவனைக் காண நாம் ஓடியாடி அலைய வேண்டுவதில்லை. எல்லாப் பொருள்களிடத்தும் இறைவனைக் கண்டு இன்புறுதலே சாலச் சிறந்ததாகும். ஆதலால், நாம் இறைவன் படைப்பாகிய எல்லா உயிர்களிடத்தும் அன்பைச் செலுத்தி வழிபடுவோமாக!

## பயிற்சி

[இயற்கை வனப்பில் இறைவன் மாண்பைக் கண்டு மகிழும் வகையினை விளக்குவது இப்பாடம்.]

அருஞ்சொற்கள்: *வளி – காற்று; ஊன் – உடல்; கோன் – தலைவன்; நின்றனை – நின்ற உன்னை; அளிக்கும் – காப்பாற்றும்; அநாதியான – ஆதியில்லாத; ஊடுருவல் – நுழைதல்; மாண்பு - பெருமை; புவனம் – உலகம்; ஆன்றோர் - பெரியோர்; கடைகால் - அடிப்படை - அஸ்திவாரம்; ஒளிரும்- பிரகாசிக்கும்; நிருமித்து - உண்டாக்கி; உன்னத - உயர்ந்த; இசைவாணர் - சங்கீத வித்துவான்; ஊழியக்காரர் - வேலைக்காரர்; மந்தமாருதம் - தென்றற்காற்று; எழில் - அழகு; குழவி - சிறு குழந்தை; இருதிணைப் பொருள் - உயர்திணை அஃறிணைப் பொருள்கள்.*

கருத்துணர்தல்:

1. இறைவன் மாண்பை எவ்வாறு உணர்தல் கூடும்?
2. இறைவன் நமக்காகச் செய்துள்ள நன்மைகளை விவரி.

3. இறைவன் மாண்பை எடுத்து உபதேசிக்கும் குருமூர்த்திகளாக இருப்பன யாவை ?

4. இறைவனைக் காணும் வழி யாது ?

கட்டுரை :

பாடத் தலைப்பிலுள்ள திருவாசகப் பாடலின் பொருளை உன் சொந்த நடையில் எழுதுக.

---

## 2. நமது தாய்மொழி

நம் மனத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறர் நினைக்கும் கருத்துக்களை நாம் அறியவும் மொழி அல்லது பாஷையே ஏதுவாய் இருக்கிறது.

உலகத்தில் மனிதன் தோன்றிய காலந்தொட்டே மொழி ஏற்பட்டுள்ளது என்று சொல்ல முடியாது. ஆதிகால மனிதன் ஏனைய பிராணிகளைப் போலவே சத்தஞ் செய்து ஒலிக் குறிப்பால் சிறிதளவு தன் உள்ளக் கருத்தைப் பிறருக்குத் தெரிவித்து வந்தான். பின்னர், சைகை, முகக் குறி முதலியவற்றாலும் தன் எண்ணத்தைப் பிறருக்கு வெளியிடலானான். தனிப்பட்டு அலைந்து திரிந்த மனிதர் நாளடைவில் ஒன்று கூடி வாழத் தலைப்பட்ட பொழுது மொழி ஏற்படலாயிற்று. தம் நுண்ணறிவினாலும் நீண்டகால முயற்சியினாலும் மனிதர் கண்டுபிடித்துள்ள வாழ்க்கைச் சாதனங்களுள் மொழியும் ஒன்றாகும்.

மனிதருக்குப் பேசுந் திறமையுண்டு; ஏனைய பிராணிகளுக்கு இத்திறமையில்லை. ஆதலால், மனிதரை விலங்குகளினின்று வேறுபடுத்தும் அறிகுறிகளில் மொழி ஒன்றாகும். ஒருவர் நினைவுகளை மற்றொருவர் அறிய

மொழியே காரணமாக இருப்பதால், அது சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத கருவியாக இருக்கிறது. மேலும், நமது முன்னோர்கள் தமது கருத்துக்களை மொழியின் மூலமாகவே எழுதி வைத்திருப்பதால் அவைகளை அறிந்து நம் எண்ணங்களைப் பெருக்கிக்கொள்ளவும் அது பயன் படுகிறது.

சுருங்கக் கூறின், மொழியானது மனிதரை விலங்குகளினின்றும் வேறுபடுத்தும் ஓர் அறிகுறியாகவும், அவர்களது சமூக வாழ்க்கைக்கும், நாகரிக மேன்மைக்கும், அறிவு வளர்ச்சிக்கும், கல்விக்கும் இன்றியமையாத சாதனமாகவும் இருக்கின்றது. மேலும், அறநெறியைப் பின் பற்றவும், இறைவனை வழுத்தவும் மொழி பெரிதும் துணை புரிகின்றது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, ஆங்கிலம் முதலிய நூற்றுக்கணக்கான மொழிகள் உலகில் பேசப் படுகின்றன. குழந்தை பிறந்தது முதல் தன் தாய் தந்தையரிடமும் சுற்றுப்புறத்தாரிடமும் அது கேட்டுப் பழகும் முறையே அதன் தாய்மொழி எனப்படும். தமிழ் நாட்டில் வசிக்கும் நாம் பிறந்தது முதல் பேசி வருவது தமிழ் மொழியே. ஆதலால், தமிழ் நமக்குத் தாய்மொழி, நமது தாய்மொழியாகிய தமிழின் பெருமையை ஆராய்ந்து பார்ப்பது நமது கடமையல்லவா?

உலகில் நிலவும் எண்ணிறந்த மொழிகளை நன்கு ஆராய்ந்து பார்ப்போமாயின், அவற்றுள் ஒரு சில மொழிகளே பண்டைக்காலந்தொட்டு வழங்கிவரும் மொழி களாகக் காணப்பெறுகின்றன. காலத்தால் முற்பட்ட மொழிகட்கே பெருமை மிகுதியும் உண்டு. பல மொழி களையும் ஆராய்ந்து, அவை தோன்றிய காலத்தை கணக்கிட

வல்ல மொழி யாராய்ச்சியாளர்களாலும் நம் தமிழ்மொழியின் காலத்தை கணக்கிட இயலவில்லை. இந்தியாவிற்குத் தெற்கில் இருந்த நிலப்பகுதியே உலகில் மிகப் பழமையான நிலப்பகுதி என்றும், அப்பகுதியிற்றான் மக்கள் முதன்முதல் தோன்றினர் என்றும் வரலாற்று வல்லுநர் கூறுகின்றனர். அவர்கள் குறிப்பிடும் பகுதி குமரி முனைக்குத் தெற்கில் இருந்து, கடலால் கொள்ளப்பட்ட பண்டைத் தமிழகமே யாகும். இவற்றை எல்லாம் நோக்கும்பொழுது, உலகில் முதலில் தோன்றிய மொழி நம் தாய் மொழி என்பது எவரும் ஒப்ப முடிந்ததாகும். எவ்வாறாயினும், நம் தமிழ்மொழி கால ஆராய்ச்சிக்கு உட்படாத அத்துணைப் பழங்கால மொழி என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். இம்மொழி இனிமையுடையது பற்றியே இது தமிழ் என அழைக்கப்படுவதாக அறிஞர் கூறுகின்றனர். பல்வேறு மொழிகளோடு தமிழை ஒப்பிட்டு உண்மை கண்டுணர்ந்த நம் பாவலர் பெருமான் பாரதியாரும், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்றனர். தமிழ் மொழி பேசுதற்கு இனிமை வாய்ந்தது; எளிமை பொருந்தியது; பொருட்செறிவு மிகுதியும் கொண்டது; இலக்கண வரம்பைப் பெற்றது. பழங்காலப் புலவர்கள் இதனைத் தனித்துக் கூறாமல் செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், கன்னித்தமிழ் எனப் பலவாறாக அடைமொழி கொடுத்தே அழைப்பாராயினர்.

நம் தமிழ்மொழி பண்டைக்காலத்தில் தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்ற முச்சங்கங்

களாலும் வளர்க்கப்பட்டது. தமிழ்நாட்டு மூவேந்தர்களும், சிற்றரசர்களும், வள்ளல்களும் தமிழ்மொழியைக் கண்ணேபோல் காத்து வந்தனர். இறைவனாலும், அவனருள் பெற்ற புலவர் பலராலும் இம்மொழி பொன்னே போல் போற்றப்பட்டு வந்துள்ளது. ஆதலால், நம் தீந்தமிழ் ஒரு தெய்வ மொழியே யாகும்.

நம் தமிழ் மொழியில் எண்ணிறந்த நூல்கள் இருக்கின்றன. சங்க கால நூல்களினால் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை விவரங்களை நன்கு அறிகின்றோம். தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி போன்ற அருள் நூல்களினால் கடவுள் பக்தியும், இம்மை மறுமைப் பேறுகளும் எய்தலாகும். திருக்குறள், நாலடியார், ஆத்திசூடி முதலிய நீதிநூல்கள் நமக்கு நல்லொழுக்கத்தை நல்குவனவாகும். பாரதியார் பாக்கள் போன்றன நமக்கு நாட்டுப் பற்றையும் சுதந்திர உணர்ச்சியையும் எழுப்பவல்லன.

இவ்வாறு பண்டு முதல் இன்றளவும் எத்துறையிலும் சிறந்து விளங்கும் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியை நாம் என்றும் போற்றி வளர்த்தல் வேண்டும். தாய்மொழியின் தூய்மையைப் பாதுகாத்தல் தமிழ் மக்களது கடமையாகும். ஆதலால் கூடிய வரையில் தனித் தமிழில் எழுதவும் பேசவும் முயலுதல் வேண்டும். பிறமொழி பயின்ற தமிழ் அறிஞர்கள் அவ்வம்மொழிகளில் உள்ள உயர்ந்த கலைகளையெல்லாம் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும். 'தமிழ் மொழியில் இல்லாத கலை இல்லை' என உலகோர் போற்றும் வகையில் தமிழை வளர்த்தல் வேண்டும். "தமிழ் என் தாய்மொழி; என் தாய்மொழியின் நலமே எனது நலமாகும்" என்ற பெருமித எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுதல் வேண்டும்.

"வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

## பயிற்சி

[தமிழின் பெருமைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் மாணவர்கட்குத் தாய்மொழிப் பற்றை வளர்க்கும் நோக்குடையது இப்பாடம்.]

அருஞ்சொற்கள்: ஏது-காரணம். இன்றியமையாத-மிக முக்கியமான. வழுத்துதல் - துதித்தல். நிலவும்-விளங்குகின்ற. வரலாற்று வல்லுநர்-சரித்திர ஆராய்ச்சியாளர். வரம்பு - எல்லை, கட்டுப்பாடு. செம்மை + தமிழ்-செந்தமிழ். பசுமை + தமிழ் – பைந்தமிழ். வண்மை + தமிழ்-வண்டமிழ். தண்மை + தமிழ்-தண்டமிழ். கன்னித் தமிழ் – என்றும் இளமை வாய்ந்த தமிழ். அடைமொழி-ஒன்றைச் சிறப்பிக்கும் பொருட்டுச் சேர்த்து வழங்கப் படும் சொல். வள்ளல்-இரப்போர்க்கு இல்லையென்னாது கொடுப்பவர். தீம் + தமிழ்–தீந்தமிழ். நல்க-கொடுக்க.

கருத்துணர்தல்:

1. மொழி நமக்கு எவ்வகையில் பயன்படுகிறது?
2. மொழி ஏற்பட்ட வரலாற்றை வரைக.
3. தாய்மொழி என்பது என்ன?
4. தமிழ் மொழியின் தொன்மையை விளக்குக.
5. தமிழ் மொழிக்கு வழங்கப்படும் அடைமொழிகளை எழுதுக.
6. தமிழ் மெழியில் உள்ள நூல்களின் தன்மைகளை விவரிக்க.
7. தமிழ் மக்களின் கடமைகள் யாவை?

கட்டுரை:

'நம் தாய்மொழியின் வளர்ச்சிக்கு நீ யாது செய்வாய்?' என்பது பற்றி நூறு சொற்களில் ஒரு கட்டுரை வரைக.

## 3. ஏகம்பவாணன்

நிலவளம், நீர்வளம் பொருந்திய தமிழ் நாட்டில் முன்னொரு காலத்தில் வாணன் என்ற வேளாளர் ஒருவர் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர் ஆயிரம் ஏர்கள் வைத்து வேளாண்மை செய்து பெரும் பொருளீட்டிப் பெருஞ் செல்வராய் வாழ்ந்துவரும் நாளில், அச்சீமானுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. வாண முதலியார் மன மகிழ்ந்து சோதிடர்களை அழைத்து, அக் குழந்தைக்குச் சாதகம் கணிக்க வேண்டினர். அவர்களும் அம்மகவு பிறந்தபொழுது உள்ள கிரகங்களின் நிலைகளை நன்கு ஆராய்ந்து, குழந்தையின் பெற்றோர்க்கு விரைவில் மரண காலம் நேரிட இருப்பதை அறிந்து, வருத்தத்துடன் தெரிவித்தனர். அது கேட்டு வாண முதலியாரும், 'எல்லாம் இறைவன் செயல்; வருவது வந்தே தீரும்' என்று எண்ணித் தேறியிருந்தனர்.

சின்னாளில் சோதிடர் அறிவித்தவாறே சிறுவனது தாய் காலஞ்சென்றனள். முதலியார் தமக்கும் இறுதிக்காலம் நெருங்கியிருப்பதையும், பிற்காலம் தமது மகனுக்கு ஆதரவில்லாதிருப்பதையும் தெளிந்து உணர்ந்தார். அதனால், தம்மிடத்து நெடுங்காலமாகப் பணியாளனுயிருந்துவரும் உண்மையுள்ள உத்தமனுகிய ஏகன் சாம்பானிடத்தில் அக் குழந்தையையும், பிற சொத்துக்களையும் ஒப்புவித்து அவனை நோக்கி, "தோட்டத்தில் பூமிக்குள் அளவற்ற திரவியம் புதைத்து வைத்துள்ளேன். அதனையும் நீயே கைக்கொண்டு என் குழந்தையை நின் குழந்தை போல் வளர்ப்பாயாக" எனக் கூறினர். பிறகு, சில நாட்களில் அவர் உயிர் துறந்தனர். அப்பண்ணையாள் அவருக்குச் செய்யவேண்

டிய ஈமச்சடங்குகளை யெல்லாம் அக்குழந்தையைக் கொண்டே செய்வித்தனன்.

பின்னர், சிறுவன் ஏகன் சாம்பானால் வேளாளர் குல அறிஞர் ஒருவர்பால் ஒப்படைக்கப்பட்டு அக்குலத் திற்குரிய முறையில் நன்கு வளர்க்கப்பட்டான். கல்விப் பருவம் எய்தவே, ஏகன் அச்சிறுவனைக் கவிச் சக்கர வர்த்தி கம்பர்பால் அனுப்பிக் கல்வி பயிலச் செய்தனன். காலக்கிரமத்தில் அவனுக்கு நற்குண நற்செய்கைகள் வாய்ந்த ஒரு வேளாளர்குல நங்கையை மணம் புரிவித் தனன். பின்னர், தனது தலைவருடைய செல்வங்களில் ஒரு சிறிதேனும் தான் விரும்பாமல், அனைத்தையும் அப்பிள்ளையிடம் ஒப்பித்துப் புதையல் இருக்கும் இடத் தையும் அப்பண்ணையாள் காட்டினன்.

அப்பிள்ளை, ஏகன் சாம்பான் காட்டிய இடத்தி லுள்ள புதையலை வெட்டி எடுக்கச் சென்றான். அப் பொருள் நீண்ட நாட்களாகப் புதைக்கப்பட்டிருந்தமை யால் அதனைப் பூதம் ஒன்று காத்துக்கொண்டிருந்தது. அதனால், புதையலை எடுக்க இயலாமல் அப்பிள்ளை மனந்தளர்ந்து வீடு திரும்பினான். அன்று இரவில் அப் பூதம் அவன் கனவில் தோன்றி, "நான் நெடுங்கால மாகக் கண்ணை இமைகாப்பது போன்று இடைவிடாது பாதுகாத்து வந்த ஏழு கோடி திரவியத்தை நீ எளி தாகக் கைப்பற்றிக்கொள்வதெப்படி? யான் மனமகிழு மாறு தயை, உண்மை, பக்தி முதலிய நற்குணங்களை யுடைய உத்தமன் ஒருவனைப் பலி கொடுத்தாற்றான் யான் காத்திருந்த பொருளை உனக்குத் தருதல் கூடும். அதுவுமின்றி யானும் உனக்கு அடிமையாகி, நீ இட்ட பணியைத் திட்டமாகச் செய்வேன்" என்றது.

சிறுவன் காலையில் விழித்தெழுந்து, தான் கண்ட கனவை ஏகன் சாம்பானிடம் எடுத்துக் கூறவும், சாம்பான் தன்னைப் பலி கொடுத்து அப்பொருளைப் பெறுமாறு வேண்டினன். சிறுவன் அதனைக் கேட்கப் பொருதவனுய்த் துயருற்றுத் தனக்கு அப்பொருள் வேண்டுவதில்லை எனக் கூறி வாளாவிருந்தனன். அன்று இரவில் ஏகன் சாம்பான், "எத்தனை நாள் இருப்பினும் இறுதியில் எவரும் இறக்கத்தானே வேண்டும்? மண்ணிலே முளைத்த பூண்டு மண்ணுக்கே இரையாவது போன்று என் தலைவரால் வளர்க்கப்பட்ட இவ்வுடலை அத் தலைவருக்கே உரிமைப்படுத்துவது முறையாகும். யான் இறப்பதினுல் என் எசமானருக்கு ஏழு கோடி நிதி கிடைக்கின்றதே!" எனச் சிந்தித்து, எவருக்கும் தெரியாமல் புதையலிருக்கும் இடத்திற்குப் போய் அப் பூதத்திற்குத் தன்னைப் பலியாக்கினுன்.

அக்கணமே பூதமானது வாண முதலியாரின் புதல்வன் முன் தோன்றி, "உமது பண்ணையாள் இப்பொழுது எனக்குப் பலியாகிவிட்டமையால், யான் காத்துவந்த பொருளனைத்தையும் உங்களிடம் சேர்ப்பிக்கின்றேன்; யானும் சொன்ன சொல் தவருமல் இன்று முதல் உங்களது உண்மைப் பணியாளனுக இருப்பேன்" என்று கூறி அடிமையாகி நின்றது. சிறுவன் அதனைக் கேட்டு மனமுருகித் தன்னைத் தந்தைபோல் வளர்த்து வந்ததோடு தன் பொருட்டாகத் தன் உயிரையே தியாகம் செய்த ஏகன் சாம்பானுக்குச் செய்யவேண்டிய இறுதிக் கடன்களைத் தன் கையாலேயே செய்து முடித்தனன். ஏகன் செய்த நன்றியை மறவாமலிருப்பதற்காக அவன் பெயரை முதலிலும், தன்னை அறிவுடையவனுகச் செய்த ஆசிரியரான கம்பர் பெயரை இடையிலும், தன்னைப்

பெற்று உதவிய வாணன் பெயரை இறுதியிலும் வைத்து ஏகன் + கம்பர் + வாணன் = ஏகம்பவாணன் எனத் தன் பெயரை மாற்றி அமைத்துக்கொண்டான். தந்தையார் தேடி வைத்திருந்த பெருஞ் செல்வத்தையும் கைக்கொண்டு நல் வாழ்க்கை நடத்தலாயினன்.

ஏகம்பவாண முதலியார் செல்வத்திற் சிறந்து விளங்கியதோடு தம்மைத்தேடிவரும் புலவருக்கும் இரவலருக்கும் வரையாது வழங்கும் வள்ளலாகவும் திகழ்ந்தார். ஒரு சமயம் தம்மை அவமதித்துச் சென்ற சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் செருக்கை அகற்றக் கருதினர். தமக்கு அடிமையாக இருந்து பணி செய்யும் பூதத்தைக் கொண்டு அம்மூவேந்தரையும் தனித்தனியே எடுத்துவரச் செய்து சிறைப்படுத்தி, அவர்களது செருக்கை அடக்கினர்.

இவ்வாறு மூவேந்தர்களாலும், சிற்றரசர் பலராலும் வணங்குதற்குறிய நிலையில் ஏகம்பவாணர் வாழ்ந்து வந்தார். அவரது வள்ளன்மையைப் புலவர்கள் பலரும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

## பயிற்சி

[பண்டைக்காலத் தமிழ் வள்ளல் ஒருவரின் வரலாற்றைக் கூறுவது இப்பாடம்]

அருஞ்சொற்கள்: *மகவு—குழந்தை. சில + நாள்-சின்னுள். ஈமச்சடங்கு-இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்கு. நங்கை--சிறப்புடைய பெண். இரவலர்-யாசகர். செருக்கு—கர்வம்.*

கருத்துணர்தல்:

1. *வாண முதலியார் ஏகன் சாம்பானிடம் கூறியது என்ன?*

2. ஏகன் சாம்பான் சிறுவனை வளர்த்த வகையினைக் கூறுக.

3. பூதம் சிறுவன் கனவில் தோன்றிக் கூறியது என்ன?

4. ஏகன் சாம்பான் தன்னைப் பூதத்திற்குப் பலியாக்கியது ஏன்?

5. சிறுவன் தன் பெயரை ஏகம்பவாணன் என வைத்துக்கொண்டதன் காரணம் யாது?

கட்டுரை :

ஏகன் சாம்பானுடைய நல்லியல்புகளை விளக்கி ஒரு பத்தி வரைக.

## 4. சின்கோனு மரம்

மாந்தரது உயிரை உண்ணும் கொடிய நோய்களுள் மலேரியா என்னும் மலைச் சுரம் மிகக் கொடியது. இதனால் நமது நாட்டில் ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் மாண்டுபோகின்றனர். இக்கொடிய நோயை விளைப்பதற்குக் காரணமாகிய பிராணி, சிறு கொசுவேயாம். மனிதர் மலைச் சுரத்திற்குத் தப்பிப் பிழைக்கக் கொசுக்களைப் பெருகவிடாமல் தடுப்பதும், அப்பிராணிகள் நம்மைக் கடிக்காதபடி காத்துக்கொள்வது மின்றி இந்நோய்க்கு மருந்தாகிய கொயினுவையுந் தேடிக் கொள்ளவேண்டும்.

கொயினுவெனும் அரிய மருந்து சின்கோனு என்ற மரத்தின் பட்டையிலிருந்து எடுக்கப்படும் வெண்மையான துகளாகும். சின்கோனு மரம் தற்பொழுது நமது நாட்டில் நீலகிரி, மேற்கு மலைத் தொடர்கள், வடமேற்குப் பிரதேசங்களிலுள்ள மேட்டுப் பாங்கான நிலங்கள், இமய மலைச்சாரல் முதலிய பலவிடங்களில் பயிர் செய்யப்படுகிறது.

விதை விதைத்தும், கிளைகளை வெட்டி நட்டும் இம்மரத்தைப் பயிர் செய்தல் கூடும். பயிர் செய்யுமுன் மலைச்சாரலில் உள்ள காடுகளை வெட்டித் திருத்த வேண்டும். போதிய அளவு காற்றும் வெளிச்சமுமின்றி இம்மரங்கள் செழித்து வளரா. நிலத்தைப் பண்படுத்தி விதைகளை ஊன்றிய பிறகு பதினுருவது நாள் முளை தோன்றும். ஓர் அவுன்ஸ் விதையினின்று சுமார் 20.000 செடிகள் முளைக்கும். செடிகள் ஓங்கி வளரத் தொடங்கும் பொழுது கிளைகளைத் தறிப்பதும், பட்டைகளைக் காப்பதும் தேவையாகும்.

கொயினு மருந்து மலைச் சுரத்திற்கு மருந்தாவதோடு வேறு பல சுரங்களுக்கும் பிணிகளுக்கும் மருந்தாக உதவுகின்றது. ஆதலால், வைத்திய முறையில் பெரிதும் கையாளப்படுகின்ற மருந்துகளுள் இது தலைசிறந்து விளங்குகின்றது. கொயினு மரத்தின் இலைகளும் ஒரு சிறிது மருந்தாக உபயோகப்படுகின்றன. இவ்வரிய ஔடதம் மலைச் சுரத்தை நீக்குமென்று மனிதன் அறிந்த விதம் ஒரு கதை போலிருக்கிறது.

தென் அமெரிக்காக் கண்டத்திலுள்ள பெரு வென்னும் நாட்டில் வானோங்கிய மரங்களடர்ந்த காடுகள் பலவுள. அக்காடுகளொன்றில் பழங்குடி மக்கள் சிலர் வாழ்ந்துவந்தனர். அவர்கள் தமது கிராமத்திற்கருகி லுள்ள ஓர் ஏரியிலிருந்து உண்பதற்கும் சமைத்தற்கும் தண்ணீர் எடுத்துக்கொள்வது வழக்கம். இங்ஙன மிருக்கையில் ஒரு நாள் இரவிற் பெரும் புயற் காற் றடிக்கவே, அவ்வேரியின் கரையோரமாக வளர்ந்திருந்த சில மரங்கள் சாய்ந்து அவ்வேரியினுள் விழுந்துவிட்டன.

இது நிகழ்ந்த சில நாட்களுக்கெல்லாம் அவ்வேரியின் நீர் எட்டிக்காய் போலக் கைக்கத் தொடங்கிற்று. ஆதலால், ஊரார் அப்பொய்கையிலிருந்து தண்ணீர் எடுப்பதைத் தவிர்த்துச் சிறிது தொலைவிலிருந்த ஒரு குளத்திலிருந்து நீர் எடுத்துவரலாயினர்.

இங்ஙனமிருக்கையில், அவ்வூரில் இருவர் மலேக் காய்ச்சல் கண்டு இறக்குந்தறுவாயில் இருந்தனர். அவ்வூர் மருத்துவர்கள் அவர்களைக் கைவிட்டுவிட்டனர். பிணியாளிகள் இருவரும் சுரத்தின் கொடுமையால் தாக மேலிட்டு, அருந்த நீரகப்படாமல் நகர்ந்து நகர்ந்து சென்று அவ்வேரியை அணுகித் தமது தாகமடங்க அக்கைப்பு நீரை அருந்தினர். அதை அருந்தியபொழுது அவர்களுடைய நீர் வேட்கை சற்று அடங்கிற்று. அதனல் அவர்கள் வேண்டும்போதெல்லாம் அந்நீரைப் பருகி வந்தனர். சின்னுட்கள் செல்லவே அவ்விரு பிணி யாளரும் சுரம் நீங்கிச் சுகமடைந்தனர். இதைக் கண்ட அவ்வூரார் அவ்வேரியின் நீர் சுரத்தை நீக்கும் நல்ல மருந் தெனத் தெரிந்துகொண்டார்கள்.

ஐரோப்பியர்கள் அமெரிக்கா தேசத்தைக் கண்டு பிடித்தபொழுது அவர்கள் பெரு நாட்டாரிடமிருந்து அம்மருந்துப் பொய்கையின் வரலாற்றையறிந்து, அதை ஆராய்ந்து நோக்கினர். நோக்கியவளவில் அதில் விழுந்த மரங்களே அந்நீர் கைப்பதற்குக் காரணமென்றும், அம்மரங் களின் பட்டையிலுள்ள சாரமே பிணிகளைத் தவிர்ப்ப தென்றும் அறிந்துகொண்டனர். அம்மரங்களே சின்கோனு மரங்களாம். பின்னர் வெகு விரைவில் கொயினு மருந்து உலகமெங்கும் பரவலாயிற்று.

சற்றேறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன் இந்திய அரசாங்கத்தார் ஓர் ஐரோப்பிய வைத்தியரைத் தென் அமெரிக்காவிற்கனுப்பிச் சின்கோனு மரத்தின் நாற்றுக்களை யும் விதைகளையும் கொண்டுவரச் செய்தனர். இப்பொழுது இம்மரம் நமது நாட்டு மரம்போலப் பலவிடங்களிலும் பயிரிடப்பட்டு வருகின்றது. சின்கோனு மரத்தினின்று சர்க்காருக்கு அதிக வருமானங் கிடைக்கின்றது. அரசாங்கத்தார் கொயினு மருந்தை வைத்தியசாலைகளில் உபயோகிப்பதோடு தபாலாபீசுகளிலும் அதை விற்கும்படி ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். கடவுள் மாந்தர்க்களித் துள்ள எண்ணிறந்த கொடைகளுள் இம்மரமும் ஒன்ருகுமல்லவா?

## பயிற்சி

[இது தாவர நூல் சம்பந்தமான பாடம்.]

கருத்துணர்தல் :

1. சின்கோனு மரம் இப்போது நம் நாட்டில் எங்கெங்குப் பயிரிடப்படுகின்றது?

2. சின்கோனு மரம் பயிர் செய்யப்படும் வகையினை எழுதுக.

3. 'கொயினு மருந்து மலைச் சுரத்திற்கு ஏற்ற மருந்து' என்பதை மனிதன் முதன் முதல் எவ்வாறு அறியலானுன்?

கட்டுரை :

நம் நாட்டில் உள்ள கொயினு மரம் ஒன்று தன் வரலாற்றைக் கூறுவது போல் ஒரு பக்கத்தில் எழுதுக.



கன்னியா குமரிக் கோயிலும் குளமும்

## 5. நான் கண்ட குமரி முனை

கன்னியா குமரி,
1—10—54.

அன்புள்ள முருகா !

வாழியர். வளம் பெறுக. நான் இன்று காலை திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்டு மோட்டார் வண்டியில் இவண் வந்து சேர்ந்தேன். இங்குள்ள கற் சாலைகள் மேடுபள்ளமின்றி நன்னிலையிலிருப்பதால், இடையிலுள்ள ஐம்பத்து நான்கு கல் பயணமும் இன்பகரமாகவே இருந்தது. சாலையின் இருபுறத்திலும் நான் இதுவரையில் கண்டிராத இயற்கைக் காட்சிகள் மனத்திற்கு மகிழ்ச்சியளித்தன. உயர்ந்த குன்றுகளும், தாழ்ந்த பள்ளத்தாக்குகளும், கமுகு, வாழை, பலா, மிளகுக் கொடிகள் முதலியன செறிந்த சோலைகளும், நிலவளம் நீர்வளம் மலிந்த கழனிகளும், தாமரைத் தடாகங்களும், நீரோடைகளும் வழி முழுதும் காணப்பட்டன.

நமது பாரத நாட்டின் தென் கோடியில், "வட வேங்கடம் தென் குமரி" எனப் புலவர் புகழுமாறு தமிழகத்தின் எல்லையாய் அமைந்துள்ள கன்னியா குமரி முனையை இன்று கண்ணாரக் கண்டேன். என் உள்ளத்தில் எழுந்த களிப்பையும் குதூகலத்தையும் என்னென்று கூறுவேன்! எதிரே கடல். இங்குத் தரை முடிகிறது; கீழைக் கடலும் மேலைக் கடலும் ஒருங்கே கூடுகின்றன. தெற்கில் காண்பது இந்து மகா சமுத்திரம். கடலுக் கருகில் கன்னியாகுமரியின் கோயில். இவைகளைக் காணும்பொழுது கவலை நீங்கி மனத்திற்கு ஓர் அமைதி உண்டாகின்றது. இதனால், இம்முனையைப் புண்ணியத்

தலமாக இந்துக்கள் கருதுகின்றனர். இங்கே வருபவர்கள் தங்கியிருப்பதற்கு வசதியான சத்திரங்கள் பல உள. நான் மகாராஜா சத்திரத்தில் தங்கியிருக்கிறேன். செல்வர்கள் கடற்கரையில் வசிப்பதற்கு மாளிகைகள் கட்டியிருக்கிறார்கள். கடலோரத்தில் மீன் பிடிக்கும் பரதவர்கள் சிறு சிறு குடிசைகள் அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர்.

நமது நாட்டில் இமயமலை முதல் இக் கன்னியாகுமரி வரையுள்ள பல இடங்களிலிருந்தும் நாள்தோறும் பலர் இங்கு வந்து கடலில் நீராடிக் கன்னியம்மனை வணங்கி மன அமைதி பெற்றுத் திரும்புகின்றனர். இவ்வூர்க் கோயிலிலுள்ள கன்னியா குமரியம்மையின் திருவுருவம் உள்ளத்தைக் கவரும் பேரழகு வாய்ந்தது. பூசை நிவேதனங்கள் மிக்க பக்தியுடனும் ஆசாரத்துடனும் நடைபெறுகின்றன. குமரியம்மன் திருமணம் ஆகப்பெறாமல் கன்னிக் குமரியாக இருக்கின்றாள். இவ்வம்மை இங்கெழுந்தருளியிருக்கும் காரணத்தாலேயே இம் முனை குமரி முனை யென்றும், இவ்வூர் கன்னியா குமரி யென்றும் பெயர்பெற்றன.

மாலையிலே கடற்கரையோரமாக உலாவச் சென்றபொழுது, எங்கும் காணாத ஓர் அதிசயங் கண்டேன். கடற்கரையில் அழகான பல நிற மணல்கள் காணக் கிடக்கின்றன. அவைகளில் சில குங்குமம் போலச் செம்மணலாகவும், சில மைபோலக் கருமணலாகவும், சில அரிசி போலவும், குருணைகள் போலவும் உருவம் அமைந்தும் உள. இக்கல்லரிசிகள், குருணைகள், பல நிற மணல்கள் இவற்றைப் பற்றி ஒரு கதை கூறுகின்றனர். முன்னொரு காலத்தில் குமரியம்மனுக்குத் திருமணப்

பேச்சு நிகழ்ந்ததாம். பின்னர், மணம் நின்றுவிடவே, அதற்காகச் சேகரிக்கப்பட்ட குங்குமம் செம்மணலாகவும், கண்ணுக்கான அஞ்சனம் கருமணலாகவும், அரிசி கல்லரிசியாகவும் மாறி இப்பொழுதும் காணப்படுகின்றன என்பர்.

மேற்கூறிய திருமணத்தைப்பற்றி இங்குள்ளோர் பின்வருமாறு கூறுகின்றனர்: கன்னியா குமரிக்கு மேற்கே 6 மைல் தூரத்தில் சுசீந்திரம் என்ற ஊர் இப்பொழுதுமிருக்கிறது. அங்கே ஒரு பெரிய சிவன்கோவிலுள்ளது. அதிலுள்ள சிவபெருமான் பெயர் தாணுமாலயன். அவர் கன்னியா குமரிக்கு வந்து குமரியம்மனைக் கண்டு தம்மை மணஞ் செய்துகொள்ளும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு அவ்வம்மை, "நீங்கள் நாளை விடிவதற்குள் கணுவில்லாத கரும்பும், கண்ணில்லாத தேங்காயும், அன்றே விதைத்து, அன்றே விளைந்து, அன்றே அறுத்த நெல்லின் அரிசியும் கொண்டுவந்து தருவீராயின் உம்மை நான் மணம்புரிந்து கொள்ளுவேன்" என்று மறுமொழி பகர்ந்தனள்.

சிவனுர் அவ்வாறே செய்வதாகக் கூறிச் சென்று அவற்றைத் தமது தெய்வத்தன்மையால் ஆக்கிக்கொண்டு, மறுநாள் விடிவதற்குள் கன்னியாகுமரியை நோக்கி வந்தார். இவர்களது திருமணம் நிறைவேறின், உலகிற்குப் பல தீமைகள் விளையுமென்றெண்ணிய திருமால், வழியிலிருக்கிற ஒரு பாறையின் மேல் ஒரு சேவலைப்போல் நின்று கூவினுர். அதனைச் செவியுற்ற சிவபெருமான் பொழுது விடிந்துவிட்டதாக நம்பி கன்னியாகுமரிக்குப் போனுல் கலியாணம் நடைபெருதென்று தம் ஊரை நோக்கித் திரும்பிவிட்டனராம். இதற்குச் சான்ருக, சுசீந்திரத்திலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் வழியில்

ஒரு பாறையில் இப்போதும் சேவலின் காலடிபோலவும், பரமசிவனின் திருவடி போலவும் அடையாளங்கள் இருக்கின்றன. இந்த அடிச் சுவடுகளின் முன்னுள்ள பாறையில் தட்டினால் வெண்கலச் சத்தம் கேட்கின்றது. அவ்விடத்திலேயே குமரியம்மனுக்கு அவர் கொண்டு போன செல்வங்களையெல்லாம் மறைத்து வைத்திருக்கிறார் என்ற ஓர் ஐதிகம் வழங்குகின்றது.

முன் காலத்தில் கன்னியா குமரியம்மன் மூக்கில் அணியாக ஒரு நாகரத்தினம் இருந்தது. அதன் ஒளியும் விலையும் அளவிட முடியாதன. அவ்வொளி கடலில் பல மைல்களுக்கப்பாலும் வீசியது. அதுகண்டு பல மாலுமிகள் அதைக் கலங்கரை விளக்கமோ என மயங்கு வராயினர். அதனால் இக் கோயிலின் கிழக்கு வாயில் எப்பொழுதும் அடைக்கப்பெற்றிருக்கிறது என்பர். இப் போது அந் நாகமணி இல்லை.

எதிரிற் காணும் இந்து மகா சமுத்திரமாகிய நீர்ப் பரப்பு சரித்திர காலத்திற்குமுன் பெரு நிலப்பரப்பாக இருந்ததென்றும், அதற்குக் குமரிநாடு அல்லது 'இலமூரியா' என்று பெயர் வழங்கிற்றென்றும், இந்த மாநிலத்திற்றான் முதன் முதல் மக்கள் தோன்றி நாற்றிசையும் சென்று குடி யேறினரென்றும் அந் நாட்டைக் கடல் கொண்டதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கிழக்குச் சமுத்திரமும் மேற்குச் சமுத்திரமும் இம் முனையில் கூடுவதற்கறிகுறியாகக் காலையில் கதிரவன் கடலில் உதித்துத் தோன்றுவதையும் மாலையில் அவன் சமுத் திரத்தில் மறைவதையும் காணலாம். மேலும் பௌர்ணமி தினம் மாலை வேளையில் இவ்விடத்தில் நின்றுகொண்டு

நோக்குவோருக்குக் கிழக்கே நிறைமதி கடலினின்றெழு வதும், மேற்கே ஞாயிறு கடலிற்குள் அதே தருணத்தில் மறைவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அன்புடைத் தம்பீ! கன்னியாகுமரிக் காட்சியைக் காணுத கண், இருந்தும் பயனில்லே. அடுத்த விடுமுறை யின்போது நாம் குடும்பத்துடன் வந்து கண்டு களிப் போமாக! திருநிறைச்செல்வி கண்ணகிக்கு விளேயாடு வதற்குப் பல்வகைக் கிளிஞ்சல்களும், சோழிகளும், கல் லரிசிகளும் வரும்போது கொண்டுவருகின்றேன். வாழியர். நலம்.

உன் அன்புள்ள அண்ணன்,
அம்பலவாணன்

## பயிற்சி

[கடிதமெழுதும் முறையில் அமைந்துள்ளது இப்பாடம்.]

*அருஞ்சொற்கள்: கல்+சாலே–கற்சாலே (மண்+சாலே–மட்சாலே). கழனி–வயல். வேங்கடம்–திருப்பதி மலே. குதூ கலம்–மன உற்சாகம், பரதவர்–செம்படவர். அஞ்சனம்–மை. குருணே–நொய்யரிசி. நிறைமதி–பூரண சந்திரன். சுசிந்திரம்–இந்திரனல் பூஜிக்கப்பட்ட ஊர். தாணுமாலயன்–(ஸ்தாணு+மால்+அயன்) சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவரும் சேர்ந்து உருவானவர். வாழியர்–வாழ்வாயாக.*

*கருத்துணர்தல்:*

*1. திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும் சாலேயின் மருங்கேயுள்ள இயற்கைக் காட்சிகளே விவரிக்க.*

*2, கீழைச் சமுத்திரமும் மேலேச் சமுத்திரமும் கன்னியா குமரியில் ஒன்றுகூடுகின்றன என்பதற்கு அறிகுறிகள் யாவை?*

*3. குமரியம்மனேப்பற்றி வழங்கும் கதையினேச் சுருக்கி வரைக.*

*கட்டுரை:*

*நீ கண்டுள்ள ஒரு நல்லிடத்தின் சிறப்புக்களே விவரித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.*

## 6. கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை

நம் தமிழ்நாட்டில் அவ்வப்பொழுது பல கவிஞர்கள் தோன்றி தம் பாமாலைகளால் தமிழன்னையை அலங்கரித்து வந்துள்ளனர். அவர்களுடைய பாடல்கள் சுவை மிக்கனவாய், எளிய இனிய தமிழ் நடையில் அமைந்து, மக்களைப் புத்துணர்ச்சி பெற்றெழும்படிச் செய்கின்றன. அத்தகைய புலவர் மணிகளுள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை யவர்கள் ஒருவராவர்.

நமது கவிமணியவர்கள், திருவாங்கூரைச் சேர்ந்த தேரூர் என்னும் கிராமத்தில் வேளாள மரபைச் சார்ந்த சிவதாணுப் பிள்ளை என்பாருக்கு அருமைத் திருமகனாராக, 1876-ம் ஆண்டில் தோன்றினர். பிள்ளை யவர்கள் இளமையில் தம்மூரிலுள்ள தொடக்கப் பள்ளியில் தமிழும் மலையாளமும் பயின்றனர். பின்னர், கோட்டாறு என்னும் பதியில் உள்ள ஆங்கிலப் பள்ளியிற் சேர்ந்து பயின்று 'மெட்ரிகுலேஷன்' தேர்வில் வெற்றி பெற்றார். பிறகு, நாகர்கோயிலிலுள்ள கல்லூரியிற் சேர்ந்து படித்து வரும்பொழுது படிப்பை இடையில் நிறுத்திவிட நேர்ந்தது. பின்பு, திருவனந்தபுரத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து போதனமுறைப் பயிற்சி பெறலானார்.

பிள்ளையவர்கள் தமிழறிஞர் வழிவந்தவராதலின், இயல்பாகவே தமிழில் ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருந்தனர். தம் இளமைப் பருவத்தே, தேரூர்க்கருகேயுள்ள வாணன் திட்டு என்னும் இடத்திலிருந்த சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் துறவி ஒருவரிடம் ஐந்து ஆண்டுகள் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்தனர்.

போதனுமுறைப் பயிற்சி பெற்ற நமது கவிமணி யவர்கள், 1901-ஆம் ஆண்டில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டனர். முதலில் கோட்டாறு நடுநிலைப்



பள்ளியிலும், பின்னர் நாகர்கோயில் போதனுமுறைப் பயிற்சிச் சாலையிலும், அதன் பின்னர், திருவனந்தபுரத்திலுள்ள பெண்களுக்கான போதனுமுறைப் பயிற்சிச் சாலையிலும் துணையாசிரியராக சமஸ்தான சர்க்கார் பணியில்

அமர்ந்தனர். இவர் தம் அறிவின் திறத்தையும் தமிழ்ப் புலமையையும் நன்குணர்ந்த அரசியலார், பிள்ளையவர்களைத் திருவனந்தபுரம் பெண்பாலர்க்கான அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்த்தினர். அதன் பிறகு பிள்ளையவர்கள் திருவனந்தபுரத்திலிருந்த பெண்கள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்றுப் பணியாற்றி, 1931-ம் ஆண்டில் வேலையினின்றும் விலகி ஓய்வு பெற்றனர். அன்று முதலாகச் செந்தமிழ்க் கவிகளியற்றும் சீரிய தொண்டிலீடுபட்டுத் தமிழ்ப்பணியாற்றி வந்தனர்.

பிள்ளையவர்கள், 'மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்ற கொள்கையையுடையவராதலினாலே தான், தாம் வகித்துவந்த ஆசிரியத் தொழிலிலிருந்தும் விலகி ஓய்வுபெற்றுக் கொண்டார் எனலாம். கல்வி இலாகா தலைவர் ஒருநாள் பிள்ளையவர்கள் பெண்கள் கல்லூரியில் வேலைபார்த்து வரும்பொழுது அவண் வந்தனர். அவர் பிள்ளையவர்களைக் கண்டு, "ஆண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பதவி காலியாக இருக்கிறதே? நீங்கள் அதற்கு விண்ணப்பம் அனுப்பவில்லையா?" எனக் கேட்டனர். அதற்குப் பிள்ளையவர்கள், "நான் ஏன் விண்ணப்பிக்க வேண்டும்? அது மலையாள விரிவுரையாளரின்கீழ் அமைந்த பதவியாயிற்றே? சுதந்திரமாக இங்கு வாழ்வதை விட்டு அடிமை வாழ்க்கைக்கா சீட்டு வாங்குதல் வேண்டும்?" என விடையளித்தனர். கல்வி அதிகாரி, "பெண்கள் கல்லூரியில் பெண்களையே அமர்த்த வேண்டும் எனப் பல்கலைக் கழகம் முடிவு செய்துள்ளமையால் ஒருவேளை உங்களை இங்கிருந்து மாற்ற நேரிடும்" எனச் சற்று வெறுப்பாகக் கூறவும், பிள்ளையவர்கள்

எழுந்து, "ஒருவேளை என்பதென்ன? இப்பொழுதே செய்யுங்கள்; அதற்குமுன் என் விடுதிச் சீட்டையும் பெற்றுக்கொள்ளுங்கள்" எனக் கூறி உடனே தமது விடுதலைச் சீட்டை எழுதித் தந்து வேலையினின்றும் வெளியேறினர். மானமென்பதொன்றையே மாண்புடைக் கலனுகப் பெற்ற பிள்ளையவர்கள் இவ்வாறு அரசியல் வேலையினின்றும் விலகியது தமிழர்கள் செய்த தவப் பேறேயாகும். பிள்ளையவர்கள் அவ்வாறு சர்க்கார் பணியினின்றும் விலகி அமைதியுடன் விளங்கிய காலத் திற்றான் சிந்தைக்கினிய, செவிக்கினிய, நாவுக்கினிய கவிதைகள் எல்லாம் தோன்றலாயின.

கவிமணியவர்கள் இளமையிலேயே செய்யுளியற்றும் ஆற்றல் பெற்றிருந்தனர். அக்காலத்திலேயே, புனைப்பெயர் கொண்டு பல பாடல்களை வெளியிட்டனர். கவிமணி இளமையில் அழகம்மை ஆசிரிய விருத்தம், சுசிந்தை மாலை முதலிய நூல்களை இயற்றினர். இவர் **மலரும் மாலையும்** என்ற நூலைச் "செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியருக்கு உரியதாகுக" என்று உரிமைப் படுத்தியுள்ளது போற்றத்தக்கது. கருணைக் கடல், **பாரசீகக் கவியமுதம்** என்பன கவிமணியின் கவிதை களிற் சிறந்தனவாகும்.

இவருடைய கவிதைகள் அனைத்தும் எளிமையும் இனிமையும் வாய்ந்தவை; தெவிட்டா இன்பம் தருவன. கற்போர் உள்ளத்தைக் கவர்வன. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 1940-ல் சென்னை மாநகரில் புலவர் பெருங்கூட்டம் ஒன்றைக் கூட்டி, பிள்ளையவர்கட்குக் கவிமணி என்னும் பட்டம் சூட்டிச் சிறப்பித்தனர்.

கவிமணியவர்கள் நல்லியல்புகள் பலவும் வாய்ந்தவர்; தமிழ் இலக்கியங்களை மட்டுமின்றி ஆங்கிலப் பேரறிஞருடைய கவிதைகளையும் எப்பொழுதும் படித்து இன்புறும் தன்மையர்; 'ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோரின்' இலக்கணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்கியவர். எளிய வாழ்க்கை, தன்னடக்கம், பணிவு, இன்முகம், இனிய சொல் என்பனவே அவர்தம் அணி கலன்கள்; குழந்தைகளின் உள்ளம் போன்ற வெள்ளை யுள்ளமுள்ளவர்; யாவரிடத்தும் கருணை நிறைந்தவர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள், நாகர் கோயிலுக்கு அண்மையிலுள்ள புத்தேரி என்னும் சிற்றூரில் பல ஆண்டுகள் வதிந்து, தமிழ்த் தொண்டாற்றி, 1954-ல் இறைவன் திருவடியை எய்தினர். இவரையும் இவரது கவித்திறனையும் வியந்து நம் அரசவைக் கவிஞர் நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளையவர்கள் பின்வருமாறு பாராட்டியுள்ளார்:

1. கோழி குலவிவரும் கிளிகொஞ்சும்
   குழந்தை எழுந்து துள்ளிக் களிமிஞ்சும்
   ஏழை எளியவர்கள் யாவருக்கும்
   இன்பம் கொடுக்க அவன் பாவிருக்கும்.

2. நோய்நொடி யாவையும் விட்டோடி
   நூறுவய தும்சுகக் கட்டோடு
   தாய்மொழி வளர்த்தவன் கவிகாணும்
   தனிவரம் தெய்வம் தரவேணும்.

## பயிற்சி

[தற்காலப் புலவர் ஒருவரது வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுவது இப்பாடம்.]

அருஞ்சொற்கள் : புதுமை + உணர்ச்சி-புத்துணர்ச்சி. துறவி-சந்நியாசி. ஐயந்திரிபற-சந்தேக விபரீதமில்லாமல். சீரிய-உயர்ந்த. சிறிய, சீரிய : வேறுபாடு காண்க. விடுதிச் சீட்டு - இராஜிநாமா. புனைப்பெயர் - கற்பனைப் பெயர். அணிகலன் - ஆபரணம். பா - பாட்டு. ஆன்று அவிந்து அடங்கிய - கல்வி கேள்விகளில் நிறைந்து அடக்கத்துடன் இருக்கின்ற. சான்றோர் - மேலோர். எடுத்துக் காட்டு - உதாரணம். வதிந்து – வசித்து.

கருத்துணர்தல் :

1. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் இளமையில் பெற்ற கல்விமுறையினை எழுதுக.

2. பிள்ளையவர்கள் மானத்தையே பெரிதாக மதிப்பவர் என்பது எதனால் விளங்குகின்றது?

3. கவிமணியவர்களின் கவிகள் எத்தன்மையானவை?

4. கவிமணியவர்களின் நல்லியல்புகளைக் கூறுக.

5. நாமக்கல் கவிஞர் கவிமணியவர்களைப் பாராட்டிய பாக்களின் பொருளை வரைக.

கட்டுரை :

பாடத்தில் காணப்படும் பத்திகட்கு ஏற்ற தலைப்புக்கள் குறிக்கவும்.

## 7. ஊசி செய்தல்

சுந்தரன்: அம்மா, அக்காள் என்னை அடிக்கத் துரத்திக் கொண்டு ஓடிவருகிறாள்.

அன்னை: என்ன கமலா, குழந்தையை ஏன் துரத்து கிறாய்?

கமலம்: இதோ பார், என் தாவணியை! அவன் என்னைப் பிடிக்க வரும்பொழுது நான் விரைவாக ஓடி ஒளியப் போனேன். அப் பொழுது ஆணியில் மாட்டிக் கொண்டு என் தாவணி கிழிந்து விட்டது. என்னம்மா செய்கிறது?

அன்னை: சரி, சரி; குழந்தையை விட்டுவிடு. இந்தா, ஊசியும் நூலும். உடனே அதைத் தை.

கமலம்: எனக்குத் துணி தைக்கத் தெரியாதே! கூட இருந்து சொல்லிக் கொடுங்கள்.

அன்னை: அங்குஸ்தானை வலது கை நடுவிரலில் மாட்டிக் கொண்டு ஊசியில் நூலைக் கோத்துக்கொள்.

கமலம்: கோத்துவிட்டேன் அம்மா.

அன்னை: ஒட்டுத் துணியைக் கத்தரித்துக் கிழிந்த இடத்தில் பரப்பிப் பிடித்து, நகராமலிருக்கக் குண்டூசிகளைக் குத்திவை.

கமலம்: அவ்விதமே செய்துள்ளேன். இனிமேல் தைப் பதைப் பாருங்கள்.

சுந்தரன் : அன்னையே! இந்த ஊசிகள் பளபளப்பாக வும், கூர்மையாகவும் இருக்கின்றனவே. அவைகளை எப்படிச் செய்கிறார்கள்?

கமலம் : அணுவுக்கு நான்காக இவ்வளவு மலிவாகவும் கிடைக்கின்றனவே!

அன்னை : பண்டைக்காலத்தில் முட்களையே ஊசி களாகப் பயன் படுத்தி வந்தார்கள். பின்



னர் இரும்புக் கம்பிகளைக் கல்லில் தேய்த் துக் கூராக்கி, மிகுந்த பிரயாசையுடன் ஊசிகள் தயாரித்தனர். ஆதலால் விலையும்

அதிகமாகவே இருந்தது. சீனர்களே முதன் முதல் எஃகிலிருந்து ஊசியைச் செய்ததாகப் பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள்.

சுந்தரன்: இந்த ஊசியெல்லாம் சீனவிலிருந்தா வந்தவை?

அன்னை: இல்லை, இல்லை. இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் செய்யப்பட்டு வந்தவை.

கமலம்: அங்கே கையினலா செய்கிறார்கள்?

அன்னை: அப்படியில்லை, ஊசி செய்யும் பெரிய தொழிற் சாலைகள் இருக்கின்றன. ஊசிப் பருமனுள்ள எஃகு கம்பிகளைச் சுருள் சுருளாக வாங்கி. இரண்டு ஊசியளவு நீளமுள்ள துண்டுகளாக எந்திரங்களின் உதவியால் கத்தரிக்கிறார்கள். சிறிது வளைந்திருக்கும் இத்துண்டுகளை நேராக நிமிர்த்திப் பதினயிரக்கணக்கில் பெரிய உலைகளி லிட்டுப் பழுக்கக் காய்ச்சுகிறார்கள். பழுக்கப் பழுக்க இருக்கும் இக் கம்பித்துண்டுகள் இரும்பு மேசை மீது பரப்பப்பட்டு இரும்பு உருளைகளால் பன்முறை தேய்க்கப் படுகின்றன.

சுந்தரன்: கம்பிகளைப் பின்பு எவ்வாறு கூராக்குகின்றனர்?

அன்னை: எந்திரத்தின் உதவியால் இரு நுனிகளையும் சாணைக்கல்லில் தேய்த்துக் கூராக்குகிறார்கள். இது ஆபத்தான வேலை. எஃகுப் பொடிகள் பறந்து வந்து வேலை செய்வோரின் நாசித்

துவாரங்களிலும் நுரையீரலிலும் சென்று உயிருக்கு ஆபத்தான நோயை விளைவிக்கும்.

கமலம்: இந்தப் பேராபத்தைத் தடுக்க வழியில்லையா ?

அன்னை: உண்டு. இக்காலத்தில் அத்தூள்கள் தொழிலாளர் பக்கம் வராமல் மின்சார விசிறிகளால் ஒதுக்கப்படுகின்றன. எல்லாத் துண்டு




களையும் மின்சாரச் சம்மட்டியால் அழுத்தி ஒவ்வொரு துண்டின் நடுவிலும் காதுக்கான குழிவு அமைக்கிறார்கள்.

சுந்தரன்: இப்பொழுது நூல் கோக்க முடியுமா ?

அன்னை: அவசரப்படாதே. குழிவு விழுந்த இடத்தில் கூரிய துறப்பணத்தால் காதுத்துளைகள் இடப்படும். பின்னர், துளைகளிலுள்ள ஓரச் சிலும்புகளை அரத்தால் அராவிச் சுத்தஞ் செய்வார்கள்.

சுந்தரன்: இரட்டை ஊசிகளாக அல்லவா இருக்கும் ?

அன்னை : ஆமாம். இரட்டை ஊசிகளை மெருகு தேய்த்து தனி ஊசிகளாகத் துண்டித்து, எண்ணிப் பொட்டணங்களாகக் கட்டி விற்பனைக்குத் தயாராக எந்திரங்களே செய்துவிடும்.

கமலம் : இத்துணை வேலைகொள்ளும் ஊசி மலிவா யிருப்பது எப்படி ?

அன்னை : இது நல்ல கேள்வி ! எந்திரங்கள் மூலம் ஒரே நாளில் இலட்சக்கணக்கான ஊசிகள் செய்ய முடிவதால் மலிவாகக் கிடைக்கின்றன.

கமலம் : ஊசித் தொழிலின் வரலாற்றைக் கேட்டுக் கொண்டே செய்த தையல் வேலை சரியாக அமைந்திருக்கிறதா ? பாருங்கள் !

அன்னை : நிரம்பவும் சரி !

## பயிற்சி

[ஒரு நவீனத் தொழிலைப்பற்றியது இப் பாடம். இதனுள் உரையாடல் முறையை அறிக.]

கருத்துணர்தல் :

1. ஊசியை முதன் முதலில் எந்நாட்டினர் செய்தனர் ?

2. ஊசி செய்வதில் படிப்படியான ஆறு செயல்களையும் ஆறு சொற்றொடர்களால் சுருக்கிச்சொல்.

3. ஊசிகள் மலிவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

## 8. ஈகை

ஈகை. ஈதல். கொடுத்தல், தருதல் இவை ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களாம். எனினும், ஒரு பொருளு மிலாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப் பதையே பிறர்க்குக் கொடுத்தல் அல்லது ஈகை என்று அறிஞர் கூறுவர். இதனாற்றான் "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்று திருவள்ளுவரும் நவின்றுள்ளார். "ஈகையாவது, வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல்" என்று பரிமேலழகர் விளக்கியிருக்கிறார். தான தருமங்கள் ஏழைகட்கு வழங்கப்பட்டாற்றான் அவை ஈகையாகும்.

ஈகையை ஓர் அறச்செயலாக எச்சமயத்தாரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஈதல், அளிப்போர் ஏற்போர் இருதிறத்தாருக்கும் நன்மை பயக்கக்கூடியது; ஈவோன் பிறர் துயர் துடைப்பதால் இன்பம் எய்துகிறான்; இரப் போன் தன் குறை நிறைவுற்று மகிழ்ச்சியுறுகிறான். இம் மையிற் கொடுத்து வைத்தால் அது மறுமையில் ஒன்றுக்கு நூறாகப் பயனளிக்கு மென்று ஒரு சாரார் கூறுவர். ஆனால் 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்று பொய்யில் புலவர் இடித்துரைக்கின்றார். காந்தியடிகள் அடிக்கடி இறைவன்பால், "எனக்கு அரச வாழ்வோ, சுவர்க்க போகமோ வேண்டாம்; ஆனால் இவ்வுலகில் துன்பப்படுகின்றவரின் துயரங்களைப் போக்க ஆற்றல் அளித்தால் போதும்" என்று வேண்டிக் கொள்வது வழக்கம். ஆதலால், இயல்வது கரத்தல் ஏற்புடைத்தன்று.

முகமலர்ச்சியுடனும், இன்சொல்லுடனும் நாம் மனமுருகி, அன்புடன் அளிப்பதே ஈகையின் உயரிய இலக்கணமாகும். அஃதின்றி, பேருக்காகவும் புகழுக்

காகவும் நன்கொடையளிப்பது மெய்யான ஈகை யாகாது. 'வலக் கையால் கொடுப்பது இடக் கைக்குந் தெரியக் கூடாது' என்று ஏசுநாதர் அருளியுள்ளார். பிறர் அறியா வண்ணம் இரப்போர்க்கு ஈவதே சாலச் சிறந்தது. சுவாமி விவேகானந்தர், "ரோஜாமலர் நறுமணம் நல்குவது போல ஐயமிடு; இரவலர், நாம் நன்மை புரிந்து ஈடேற வாய்ப்பு அளிக்கின்றனர்; ஆதலால், அவர்பால் நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டவர்கள். நாம் வணங்கிப் பணிவுடன் நல்குவதை எளியவர் நிமிர்ந்து நின்று அனுமதித்து ஏற்றுக்கொள்வதே முறை. இறைவன் ஏழை எளியவர்களிடமே பெரிதும் குடிகொண்டிருக்கிருரென்பதை நினைவில் வை" எனக் கூறியுள்ளார்.

நமது பாரதநாடு தொன்றுதொட்டு ஈகையிற் சிறந்து விளங்குவது யாவரும் அறிந்ததே. இரவலர்க்கு வரையாது அளிக்கும் வள்ளல்கள் பலர் பெரும் புகழ்பெற்று இங்கு வாழ்ந்து வந்துளர். அவர்களில் முதன்மையாக விளங்கியவன் பாரதப் போரில் மிகவும் புகழ்பெற்ற கர்ணனே யாவன். இதுபற்றி, "கர்ணனுக்குப்பின் கொடையுமில்லை; கார்த்திகைக்குப்பின் மழையுமில்லை" என்னும் பழமொழி வழங்குகிறது.

போர்க்களத்தில் அர்ச்சுனனும் கர்ணனும் தனியே நின்று மிக்க மும்முரமாகப் போர் செய்தனர்; விசயன் எண்ணிறந்த அம்புகளைக் கர்ணன் மீது எய்தான். ஆனால் கர்ணன் சளையாது சமர் புரிந்ததால் அர்ச்சுனனும் கைசோர்ந்து எதிரியின் திறமையை வியந்து, அவனை எங்ஙனம் வெல்லுவது என்று மனந்தளர்ந்தான். அதையுணர்ந்த கண்ணன் அர்ச்சுனனுக்குத் தெய்வப் பார்வையை அருளி, "கர்ணனை உற்று நோக்கு" என்ருன். தான் ஏவும்

கணைகளையெல்லாம் 'தருமம் தலைகாக்கும்' என்னும் முதுரையை நிலைநாட்ட வேண்டி அறக்கடவுள் எதிர் நின்று தடுத்துக் கொண்டேயிருந்ததை அர்ச்சுனன் கண்ணுற்ருன். அவன் மனம் உடைந்து விட்டது. உடனே கண்ணன், "கர்ணன் செய்த தருமங்களின் பலனை அவனிடம் இரந்து பெற்ருல் அறக்கடவுள் அவனை விட்டு விலகும். அதன் பின்னரே அவன் எளிதில் தோல்வி யுறுவான் என்று ஓர்ந்தான்.

கிருட்டினன் குள்ளமான மூப்பு மேலிட்ட வேதியன் உருக்கொண்டு, களைப்புற்றிருந்த கர்ணனை அணுகி, "ஓ கர்ணு! எளிய அந்தணனுகிய யான் தவஞ்செய்து வாழ்பவன்; வறுமையால் வாடுகின்றேன். எனக்கு ஏதேனும் இப்பொழுது தரவல்லயோ?" என்ருன்; அது கேட்ட கர்ணன், "நான் உயிர் போகுந்தருணத்தில் இருக்கின்றேன். எதனைக் கொடுக்க முடியுமோ அதனைக் கேளுங்கள்; திண்ணமாய்த் தருவேன்" என்ருன். உடனே வேதியர், "ஐய, நீ இதுவரை செய்த தருமங்களின் பலனை எனக்கு அளி; யான் அதனைக் கொண்டு உய்வேன்" என்ருர். தன்னுல் கொடுக்கக்கூடியதையே அந்தணர் விரும்பிக் கேட்டதற்காக மனமுவந்து, தான் செய்த தருமத்தின் பயனை நீர்வார்த்துத் தானமாக அளித்தான். அதன்பிறகே அர்ச்சுனன் கர்ணனைக் கொல்ல முடிந்தது. இங்ஙனம் உயிர்க்குயிராகிய தனது அறத்தின் பயன் அனைத்தையும் அளித்த கர்ணனது ஈகைத் திறத்தை என்னென்று புகழ்வது!

"நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலும்
இல்லையென மாட்டார் இசைந்து"

என்பதற்கு உற்ற உதாரணமாகும் குமணன் வரலாறு. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியும், மயிலுக்குப்

போர்வையளித்த பேகனும் ஈகைத்தன்மைக்கு எடுத்துக் காட்டாவார்கள். அண்மையில் வாழ்ந்திருந்த இராஜா சர். அண்ணுமலை செட்டியாரின் வள்ளன்மையைப் பலரும் அறிவர்.

நமது ஈகைக்குணத்தைச் செயல்முறையில் காட்ட எண்ணிறந்த வழிகள் உள. ஏழை எளியவர்களை மிகுதியாக உடையது நமது இந்தியா தேசம். இலட்சக்கணக்கானவர்கள் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இன்றித் தவிக்கிருர்கள். இவர்களிற் பெரும்பாலோர் பிச்சை ஏற்றே உயிர் வாழ்கின்றனர். வறுமையால் வருந்தும் பிணியாளர், தள்ளாத முதியோர், அங்கக்குறைவுள்ளவர், அநாதைக் குழந்தைகள் இவர்களின் நிலைமையும் இரங்கத்தக்கதே. இக்காலத்தில் பிச்சை எடுப்போரின் எண்ணிக்கை பெருகிக்கொண்டேயிருக்கிறது. வீடுதோறும் சென்று ஐயமேற்பதுடன் இவர்கள் கோயில்கள், கடைவீதிகள், வண்டி நிலையங்கள் முதலியவிடங்களிலும் பிச்சைக்கு வந்து நிற்கின்றனர். நம்மால் இயன்றவரை இவர்களுக்கு உணவு, உடை அளித்தும், காசுபணம் ஈந்தும் உதவிபுரிதல் நமது கடமையாகும். ஈகையின் சிறப்பினை உணர்ந்து, பிறர் துயர் துடைப்பதையே வாழ்க்கையின் இலட்சிய மாகக் கொண்டு ஒழுகுதல் கடனுகும்.

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று."

பயிற்சி

(இளைஞர்களை ஈகையில் ஈடுபட ஊக்குவது இப் பாடம்.

அருஞ்சொற்கள் : *துடைத்தல் - போக்குதல். தொன்று தொட்டு - பண்டைக்காலமுதல். கணை - அம்பு. கிருட்டினன் -*

கிருஷ்ணன். நல்கூர்ந்தார் - வறியவர், ஏழைகள். எடுத்துக் காட்டு - உதாரணம்.) இலட்சியம் - குறிக்கோள். நச்சப்படாதவன் - (வறியவற்கு ஒன்றும் கொடாமையால் அவரால்) விரும்பப்படாதவன். நச்சு மரம் - எட்டி மரம்.

கருத்துணர்தல் :

1. எது ஈகையாகும்?

2. காந்தியடிகளின் பிரார்த்தனை என்ன?

3. ஈகையைப்பற்றி ஏசுநாதர் யாது கூறியுள்ளார்? விவேகானந்தர் யாது கூறியுள்ளார்?

4. கர்ணனை ஏன் அருச்சுனனால் வெல்ல முடியவில்லை?

5. அருச்சுனன் கர்ணனை வெல்லுவதற்குக் கிருட்டினன் செய்த உபாயம் யாது?

6. தமிழ் நாட்டு வள்ளல்கள் மூவரின் பெயரைக் கூறுக. அவர்கள் ஒவ்வொருவரும் முறையே இயற்றிய சிறப்பான ஈகை யாது?

7. ஈகைக் குணத்தைச் செயல்முறையில் நாம் எவ்விதம் காட்டலாம்?

கட்டுரை :

1. பேகன், பாரி, குமணன் இவர்களது வள்ளன்மையை விவரித்துத் தனித்தனி ஒரு பத்தி எழுதுக.

2. பிச்சைக்காரன் ஒருவன் வீட்டிலுள்ள எசமானியைப் பார்த்து, "அம்மா! ஐயம் இட்டு உண் என்று ஔவையார் சொல்லியபடி செய்யுங்கள்" என்றான். அதற்கு அவள், "அதே மூதாட்டி ஏற்பது இகழ்ச்சி என்று சொல்லியதை மறக்காதே" என்றாள். அதைச் செவியுற்ற வழிப்போக்கன் ஒருவன் 'தையல் சொற் கேளேல் என்று கூறியிருக்கிறாளே" என்றான்.

இந்த உரையாடலின் நயத்தை விளக்கி ஒரு பத்தி வரைக.

# 9. வட துருவங் கண்ட பியரி

புதுமை கண்டு மகிழ்தல் மக்களின் இயல்பாகும். உலகத்திலுள்ள பற்பல நாடுகளையும் கண்டறிய வேண்டு மென்கிற வேட்கை அவர்கள் உள்ளத்தில் எழுவது இயற்கை. இவ்வேட்கையின் காரணமாகச் செயற்கரிய செய்யும் துணிவுடைய தீரர் பலர் நாடு காணும் முயற்சியில் ஈடுபட்டு, முன்னர் அறியப்படாதிருந்த அமெரிக்கா, ஆப்பிரிக்கா கண்டத்தின் உள் நாடுகள், துருவப் பிரதேசங் கள் முதலிய நிலப் பகுதிகளைக் கண்டறிந்து உலகிற்கு உதவியுள்ளனர். இத்தகைய தீரர்களுள் அஞ்சாநெஞ்சம் படைத்த பியரி என்பவரே வடதுருவப் பகுதிகளை முதன் முதல் கண்டறிந்தவராவர்.

இராபர்ட் பியரி என்பவர் 1855-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளிற் பிறந்தவர். மாலுமியாகிப் புதுப்புது நாடுகளைக் கண்டறியவேண்டும் என்ற பேரவா இளமையிலேயே அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. அதனால் அவர் கப்பல் ஒன்றில் மாலுமியாக அமர்ந்து, பின்னர் அமெரிக்கக் கப்பற் படை யில் பணியேற்றுத் தம் தளரா ஊக்கத்தினாலும், சலியா உழைப்பினாலும் மேன்மேலும் முன்னேறிப் படைத்தலைவர் பதவியை ஏற்றனர். இவர் புவியின் வடகோடிப் பிரதேசங் களைச் சுற்றிப் பார்த்து, அதுவரை எவரும் கண்டு அடிச் சுவடு வைக்காத வடதுருவத்தை அடைதல் வேண்டு மென்ற எண்ணங்கொண்டனர்.

வடதுருவத்தை நோக்கிச் செல்லும் செலவு மிகவும் அரியதொன்றாகும். துருவத்தை யடுத்த பிரதேசங்கள் மிக மிகக் குளிர்ச்சி பொருந்தியனவாக இருக்கும். தாங்கொணாப் பனிக்காற்று வலுவாக அடிக்கும். ஆங்குள்ள கடலும்

நிலப்பகுதியும் ஆண்டு முழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும்; திக்குத் திசைகள் அறியமுடியா. வருடத்தில் சில மாதங்களில் சூரியனைக் காணவே முடியாது. கோடையில் இருபத்து நான்கு மணி நேரமும் அடிவானத்தில் வடதுருவ ஜோதி என்ற ஒருவித மின்னல் ஒளி வீசிக்கொண்டிருக்கும். குளிர் மிகுந்த இடமாதலின் ஆங்கே பயிர் பச்சைகள் ஒன்றும் வளரா. எவ்வித உணவும் கிடைக்காது. அங்கு வாழும் எஸ்கிமோ சாதியார் சிலெட்ஜ் என்ற உருளையில்லா வண்டிகளிலும், காயாக் என்ற படகுகளிலும் சென்று, சீல், வால்ரஸ், வெள்ளைக் கரடி முதலியவற்றை வேட்டையாடி, அவற்றின் ஊனை யுண்டு வாழ்வார்கள்; அவற்றின் தோலை உடல் முழுவதும் ஆடையாகப் போர்த்துக்கொள்வார்கள். இவ்வாறு பலவித இன்னல்களும் இடையூறுகளும் நிறைந்திருந்ததால் வட துருவப் பயணம் எவர்க்கும் இயலாத செயலாக இருந்தது.

1873-ல் நான்சென் என்ற பெரியார் ஒருவர் வட துருவத்தைக் காண முயன்றார். ஆனால் அவர் கிரீன்லாந்து வரையிலுமே சென்றார். அதற்கப்பால் செல்ல அவரால் இயலவில்லை. என்றாலும், தாம் சென்ற கடற்செலவைப் பற்றிய விரிவான குறிப்பு ஒன்று எழுதிவைத்திருந்தார். அஃது ஒரு நூலாக வெளிவந்திருந்தது. அந்நூலைப் பியரி படிக்க நேர்ந்தது. தாமும் கிரீன்லாந்தைப் போய் பார்த்து, அதனைப்பற்றிய முழு விவரங்களையும் அறிய விழைந்தார். ஆதலால் கைதேர்ந்த கப்பலோட்டிகள் சிலருடன் 1886-ல் வட எல்லையை நோக்கிப் பயணமானார். இடைவழியிலே காய்ச்சலால் உடல் நலிவுற்றுத் தமது எண்ணம் நிறைவேறாமல் தாயகம் திரும்பினார். ஆள்வினையுடைய

பியரி மறு ஆண்டில் மீண்டும் தம் பயணத்தைத் தொடங்கிக் கிரீன்லாந்தை யடைந்து அங்கிலப் பகுதி முழுவதையும் சுற்றிப் பார்த்து, அஃது ஒரு பெருந் தீவு என்பதை உலகறியச் செய்தார். இதனால் அவர் பெயர் பாரெங்கும் பரவியதுடன் அமெரிக்க அரசாங்கமும் அவரைப் பெரிதும் பாராட்டியது.



வடதுருவப் பிரதேசம்

இராபர்ட் பியரி வடதுருவத்தைக் காணவேண்டு மென்று, தாம் ஆவல் கொண்டிருப்பதை நண்பர் பலரிடம் தெரிவித்தார். அவர்கள் அவ் விருப்பத்தை ஆமோதித்தனர். அமெரிக்கக் குடியரசின் அக்காலத் தலைவர் ரூஸ்வெல்ட் என்பாரும் மனமுவந்து பியரிக்கு எல்லாவித உதவியும் ஆதரவும் அளிக்க இசைந்தார். கடுங் குளிர்ப் பிரதேசங்களில் பன்னாட்கள் பயணம் செய்வதற்குத் தேவையான உணவு, உடை, தளவாடச் சாமான்கள், இயந்திரக் கருவிகள் முதலியவற் றுடன் 1908-ம் ஆண்டு ஜூலை-மீ பியரியின் வடதுருவ யாத்திரை தொடங்கப்பெற்றது. பாப்பார்ட் லேட், மாட் ஹான்சன் என்ற அறிஞர்களும் உடன்

சென்றார்கள். அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட், கப்பல் புறப்பட்ட துறைமுகத்திற்கு வந்து வாழ்த்தி வழி அனுப்பினார்.

பியரியின் கப்பல் ஜூலை மாதம் இறுதியில் கிரீன்லாந்தின் மேற்குக் கரையை யடைந்தது. அங்கு அவருடைய பழைய நண்பர்களான அந் நாட்டு எஸ்கிமோயர் மிகக் களிப்புடன் பியரியை வரவேற்று உபசரித்தனர். பியரியின் எண்ணத்தையறிந்த எஸ்கிமோயர் பெருமகிழ்ச்சியுற்று அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததோடு அவர்களிற் பலர் பியரியோடு உடன்செல்ல முன்வந்தனர். பியரி அவர்களில் கைதேர்ந்த சிலரைப் பொறுக்கியெடுத்துத் தம்மோடு அழைத்துச் செல்ல அவர்களது மனைவி மக்களின் சம்மதத்தையும் பெற்றனர். இவ்வாறாக, அந் நாட்டு மக்கள் 69 பெயர்களுடனும் நன்கு பழக்கப்பெற்ற எஸ்கிமோ நாய்களையும், பனிக் கட்டிப் பிரதேசத்தில் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய இதர சாதனங்களையும் உடன்கொண்டு பயணத்தை மேலும் தொடங்கலானார்.

பியரியின் கப்பல் வடக்கு நோக்கிச் சென்று ஈட்டா என்னும் துறைமுகத்தை நண்ணியது. ஆங்கு அதன் வருகைக்காக அமெரிக்காவிலிருந்து நிலக்கரியும் உணவுப் பொருள்களும் ஏற்றிவந்த எரிக் என்ற கப்பல் காத்துக் கொண்டிருந்தது. அதனின்று தமக்குத் தேவையான வற்றை எடுத்துக்கொண்டு, பயணத்தை மீண்டும் ஆரம்பித்தார். கிரீன்லாந்துக்கும் கிரேட்லாந்துக்கும் இடையிலுள்ள ஜலசந்தியின் வழியாகச் சென்று கிரேட் லாந்தின் கரையிலுள்ள ஷெரிடன் என்ற முனையை அடைந்தனர். அங்கிருந்து வடதுருவம் சுமார் 540 மைல்

தூரத்திலுள்ளது. மாரிக்காலத்தை அவ்விடத்திலேயே கழிப்பதென முடிவு செய்தனர். ஒரு நொடியில் அங்கே ஓர் எஸ்கிமோ கிராமம் அமைக்கப்பட்டது. இதுவரையில் கப்பல் தட்டிலேயே அதிக நடமாட்டமின்றி இருக்கும் படி நேர்ந்த எஸ்கிமோ மாலுமிகளும் நாய்களும் தமது இச்சைபோல் வெளியிற் சென்று பனிக்கட்டியில் விளையாடவும் ஓடவும் ஆரம்பித்தனர்.

வரவரக் குளிர் மிகுதியாயிற்று. பின்னர், குளிர்காலம் முடிந்து இளவேனிற்காலம் தொடங்கியதும் பனிக்கட்டிகள் உருக ஆரம்பித்தன. பியரி பிரயாணத்தைத் துவக்கிக் கொலம்பியா முனை என்னுமிடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். இம்முனையினின்று வடதுருவத்தைப் போய்ச் சேர வேண்டுமாயின் கடலைக் கடந்துதான் செல்லுதல் வேண்டும். அவ்விதம் செல்வதில் பல பேராபத்துக்கள் உண்டு. கடலின் மேற்பாகம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். அதன்மீது சிலெட்ஜ் வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது பனிக்கட்டி உருகி உடைந்து போகுமாயின், அந்தோ! அதன்மேற் செல்லுவோர் பல்லாயிரம் அடி ஆழத்தில் ஆழ்ந்து, வாழ்க்கையின் இறுதியைக் காணவேண்டியதுதான். சில இடங்களில் குன்றுகள் போன்ற பனிக்கட்டிகள் செங்குத்தாக நிற்கும். அவற்றின் மீது கப்பல்கள் மோதிச் சேதமுறுவதும் உண்டு.

பியரி கொலம்பியா முனையிலிருந்து நான்கு எஸ்கிமோக்களையும், மாட் ஹான்சனையும் அழைத்துக்கொண்டு மேலும் பிரயாணத்தை மேற்கொண்டார். ஒவ்வொன்றும் பல முள்ள எஸ்கிமோ நாய்களால் இழுக்கப்பட்ட சிலெட்ஜ் வண்டிகளில் அவர்கள் ஏறிச்சென்றனர். செல்லச் செல்ல பனிக்கட்டிகள் மேடு பள்ளமின்றிச் சமவெளிபோல்

இருந்தமையால் நாள் ஒன்றுக்குச் சுமார் முப்பது கல் தூரம் கடந்து சென்றனர். ஒவ்வொரு நாளும் காலை 6-மணிக்குப் பயணத்தைத் தொடங்கி 8 அல்லது 9–மணிக்கு ஓரிடத்தில் பனிக்கட்டி வீடு ஒன்று அமைத்து, அதில் தங்குவார்கள். மண்ணெண்ணெய் அடுப்பைப் பற்ற வைத்துத் தேயிலைப் பானம் தயாரிப்பார்கள். ரொட்டி முதலிய சில உணவுப் பண்டங்களைப் புசித்துத் தேநீர் அருந்திப் பின்பு சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வார்கள்; பின்னர் மீண்டும் பயணத்தைத் தொடங்கு வார்கள். இடைவழியில் ஆங்காங்குப் பனிக்கட்டி வீடு அமைத்து, அதில் படுத்து உறங்குவார்கள்.

இவ்வாறு அரும்பாடுபட்டும், குளிரின் கொடுமை யைத் தாங்கியும் யாத்திரை செய்து 1909-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் நாள் வட துருவத்திற்கு மூன்று கல் தொலைவிலுள்ள ஓரிடத்தைப் பியரி அடைந்தனர். வட துருவத்திற்கு அவ்வளவு அண்மையில் தாம் வந்திருப் பதை அவர் அறிந்தாரில்லை, இடைவேளை உணவிற்குப் பிறகு தாம் கொண்டு வந்திருந்த கருவிகளைக் கொண்டு சோதித்தபோதுதான் உண்மையை உணர்ந்தார். பின்னர், பியரி உற்சாகத்துடன் மேலும் சென்று, வடதுருவத்தை அடைந்தார்.

தாம் அடைந்து கண்ட இடம் வடதுருவம் என்று காட்ட அங்கு எவ்வித அடையாளமும் இல்லை. எங்கே பார்த்தாலும் கண்ணைப் பறிக்கும் படியாகப் பனியும் பனிக்கட்டியுமே நிறைந்திருந்தன. பியரி தம்மிடமிருந்த கருவிகளைக் கொண்டு கணக்கிட்டு அதுதான் வடதுருவம் என ஐயமறத் தெளிந்து உணர்ந்தனர். தம் தாய்நாட்டுக் கொடியான அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கொடியை ஆங்கு

நாட்டினர். தமது முயற்சியால் தமக்கு வெற்றியளித்த இறைவனை வாயார வாழ்த்தி வணங்கினர். கடந்த இருபது ஆண்டுகளாகத் தாம் கொண்டிருந்த எண்ணம் நிறை வேறினமை கண்டு அகமகிழ்ந்தார்.

பிறகு. துருவத்தைச் சார்ந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தனர். ஆங்கே ஒரு பனி வீடு கட்டி ஒரு நாள் தங்கியிருந்தனர். கவனித்துப் பார்ப்பதற்கு ஒன்றும் அதிகம் இல்லாமையால் மறுநாளே. அதாவது ஏப்ரல் மாதம் 7-ஆம் நாளே அவ்விடத்தை விட்டுப் புறப்படத் தீர்மானித்தனர். ஒரு தாளில் தாம் வடதுருவம் கண்டு பிடித்த விவரத்தை வரைந்து. அதனை ஒரு கண்ணாடிக் குப்பியில் பத்திரப்படுத்தி, அக்குப்பியை வடதுருவத்திற் கருகில் பனிக்கட்டிகளுக்குள்ளே புதைத்து வைத்தனர். தாம் நாட்டிய தமது தாயகக் கொடிக்கு வணக்கஞ் செய்துவிட்டு, மற்றவர்கள் பின்தொடரத் தெற்கு முகமாகத் தம் தாய்நாடு நோக்கித் திரும்பினர்.

வழியில் பியரி விரைந்தே சென்றனர். ஏனெனில். வேனிற் காலம் வரின் சமுத்திரத்தின் மேற்பரப்பிலிருக்கும் பனிக்கட்டி உருகிவிடும். அதன் பிறகு பயணஞ் செய்வது இயலாது. பியரி பதினறு நாட்கள் பயணஞ் செய்து கொலம்பியா முனையை அடைந்தார். அங்குத் தங்கியிருந்த மற்றவர்களுடன் புறப்பட்டு ஷெரிடன் முனையை நண்ணினர். தமக்காகக் காத்துக்கொண்டிருந்த "ரூஸ்வெல்ட்" என்னும் கப்பலில் ஏறி மேலும் பிரயாணத்தைத் தொடங்கலாயினர். இடையே கிரீன் லாந்தின் கரையில் தன் நண்பர்களான எஸ்கிமோயரை இறக்கிவிட்டுப் பியரி தமது தாயகம் திரும்பினர்.

பியரியைக் கண்ட அமெரிக்க மக்கள், அவருக்கு நல்வரவேற்பளித்து மரியாதை செய்தனர். ஐக்கிய நாட்டு அரசினரும் அவருக்குக் கௌரவப் பட்டங்கள் பல சூட்டிச் சிறப்பித்தனர்.

1920-ம் ஆண்டில் பியரி தமது புகழுடம்பை நிலை நிறுத்திப் பூதவுடம்பை நீத்தார். புதிய நாடு காணும் ஆவலோடு கப்பலேறி ஆழ நெடுங்கடலில் நெடுந்தொலை சென்று, கணக்கற்ற இன்னல்களுக்குட்பட்டு வடதுருவம் கண்டுதவிய வீரர் பியரியின் துணிகரச் செயலின் வரலாறு நமக்கு வழிகாட்டியாக இலகுமல்லவா ?

### பயிற்சி

**[நாடு கண்டறிந்த நல்லார் ஒருவர் வரலாற்றைக் கூறுவது இப்பாடம்.]**

**அருஞ்சொற்கள் :** *வேட்கை - விருப்பம்; பார் - பூமி; செலவு - பயணம்; ஊன் - மாமிசம்; நலிவு - துன்பம்; அண்மை - சமீபம்; நண்ணினர் - அடைந்தார்; இலகுதல் - விளங்குதல்.*

**கருத்துணர்தல் :**

1. *வடதுருவப் பயணம் எளிதானதன்று. ஏன் ?*
2. *பியரியின் முதற் கடற் செலவு யாது? ஏன் அது முற்றுப் பெறவில்லை ?*
3. *வடதுருவப் பிரதேசத்தில் உண்ணவும் உறங்கவும் யாது செய்தனர் ? எவ்வித வண்டியில் ஏறிச் சென்றனர் ?*
4. *நான்சன் — சிறு குறிப்பு வரைக.*

**கட்டுரை :**

*நீ செய்து வந்துள்ள ஓர் இரயில் பிரயாணத்தை விவரித்து ஒரு பக்க அளவில் எழுதுக.*

# 10. ஆனினம்

"பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்த
பசுமிக நல்லதடீ பாப்பா!"

ஆ, ஆன் என்னும் சொற்கள் பொதுவாகப் பசுக்களைக் குறிக்கும். ஆனினம் என்பதில் ஆக்கள் மட்டுமன்றி எருதும் எருமையும் அடங்கும். மாடுகளைக் கால்நடைகள் என்றும் கூறுவர். தமது உடல் நலத்துக்கான தீம்பாலைத் தந்தும், உழவுத் தொழிலுக்குப் பயன்பட்டும், பொருளீட்டுவதற்குச் சாதனமாகியும், மற்றும் பல வகைகளிலும் அவை உதவுகிறபடியால் ஆனினத்தின் பராமரிப்பு நம் நாட்டில் ஓர் அறப்பணியாகக் கருதப்பட்டு, மதச்சார்பு பெற்று விளங்குகிறது. "வாழ்க ஆனினம்" என்று வாழ்த்துகிறது தமிழ் மறை. பசுக்கள் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதனவென்பதை நன்கு உணர்ந்த இந்துக்கள் அவற்றைப் பூசனைக்குரிய புனிதப் பிராணிகளாகக் கருதுகின்றனர். இது குறித்தே பொங்கற் பண்டிகைக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் விழா தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. தேவ லோகத்திலுள்ள காமதேனு என்னும் தெய்வப் பசு 'வேண்டுவோருக்கு வேண்டுவன ஈய வல்லது' என்பர்.

வீடு, மனை, நிலபுலன்கள், காசு, பணம் இவை அசையாச் செல்வம்; ஆனினம் அசையும் செல்வம். ஆதலால் மக்கட் செல்வத்திற்கு அடுத்தபடியாக மாடுகளையும், கன்றுகளையும் குடியானவர்கள் செல்வமாக நினைத்து அவைகளைக் கண்ணுங் கருத்துமாகப்

பரிபாலித்து வருகிறார்கள். நமது மொழியில் மாடு என்னும் சொல்லுக்குச் செல்வம் என்று பொருள். இதற்குக் காரணம் மிகப் பழமையான காலம் முதல் மனிதர்களுக்கு மாடே செல்வமாக இருந்ததென்பதே. எளிய குடும்பத்தினர் பசுக்களையும் எருமைகளையும் வாங்கி வளர்த்து, அவைகளினின்று கிடைக்கும் பால், நெய், தயிர் இவைகளை விற்று அவ்வருவாயைக் கொண்டு சீவனம் செய்கின்றனர். வாடகை வண்டி இழுக்கும் எருதுகள் மூலம் பலர் பிழைக்கின்றார்கள்; கால் நடைகளை வாங்கி விற்று இலாபம் பெறுவதுமுண்டு. ஆனினம் ஓம்பல் குடும்ப வருவாய்க்குக் காரணமாயிருப்பதால் விவசாயி களுக்கும் மற்றவர்களுக்கும் அஃது ஓர் இலாபகரமான துணைத் தொழில் ஆகும்.

ஆனினத்தில் முதன்மையையும்முக்கியத் தன்மையை யும் பெற்று விளங்குவது பசுவேயாகும். பசுவின் பாலில் 'வைட்டமின்கள்' எனப்படும் உயிர்ச் சத்துக்கள் உள்பட உடலுக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் இருக்கின்றன. ஆதலால் அஃது ஒரு சிறந்த உணவுப் பொருள். பசும் பால் எளிதில் சீரணமாவதால் குழந்தைகளுக்குத் தாய்ப் பாலைப்போல் அதனைக் கொடுக்கலாம். அது முதியோருக் கும் நோயாளிக்கும் உகந்த உணவாகும். மேலும், ஒவ்வொருவரும் போதிய அளவு பாலைப் பருகுவதால் தேகாரோக்கியம் பெறுவதுடன் வியாதிகளை அணுக விடாமல் தடுக்கக்கூடும். தனிப் பாலாக அருந்துவதுடன் அதைக் காய்ச்சிப் பிரைகுத்தித் தயிராக்கிக் கடைவதால் வெண்ணெயும் மோரும் கிடைக்கின்றன. வெண் ணெயைக் காய்ச்சி நெய் எடுக்கிறோம். இந்தப் பாற்

பொருள்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் உடல் நலத்திற்கு நன்மைப் பயப்பதாகும்.

இக் காலத்தில் பாலின் சத்தை ஆதாரமாகக்கொண்டு அநேகவித ஆகாரங்கள் தயாரிக்கிறார்கள். கடைகளில் விற்கும் டப்பிப் பால், பால் மால்ட், பனிக்கட்டிப் பாலாடை (ஐஸ் கிரீம்) முதலிய பாற்பண்டங்கள் பாலிலிருந்து செய்தவையே. தற்கால ஆராய்ச்சியின் பயனாகப் பாலைக்காய்ச்சி, பாற்பொடி பண்ணி விற்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இப் பாற் பொடியைத் தண்ணீரிற் கரைத்தால் அது மறுபடியும் பாலாகும். பாலிலுள்ள கேஸின் என்ற சத்திலிருந்து நேர்த்தியான பவுண்டன் பேனா, சோப்புப் பெட்டி, சீப்பு, கொண்டை ஊசி முதலிய சாமான்கள் செய்யப்படுகின்றன. இஃது ஒரு விந்தையே!

எருமை, பசுவைவிட அதிகமாகப் பால் கொடுக்கும். எருமைப் பாலில் கொழுப்புச்சத்து அதிகமாதலால் அஃது எளிதிற் சீரணமாகாது. ஆதலால், அதனைத் தனிப் பாலாகப் பருகாமல், அதிலிருந்து வெண்ணெய், தயிர், மோர் எடுத்து, அவற்றை உணவுடன் கலந்து புசித்தல் வேண்டும்.

ஏரைப் பூட்டி நிலங்களை உழுவதற்கும், வண்டிகளை இழுப்பதற்கும், கபிலை ஏற்றத்தினால் தண்ணீர் இறைப்பதற்கும், செக்கு சுற்றுவதற்கும் எருதுகள் பயன்படுவதைப் பார்த்திருப்பீர்கள். கால்நடைகளின் எரு வயல்களுக்குச் சிறந்த உரமாவது உங்களுக்குத் தெரியும்.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்" என்பது ஒரு முதுமொழி. அதனைப் போன்றே ஆவினங்கள் இறந்த பிறகும் அவற்றின்

உடலுறுப்புக்கள் பலவாறு நமக்குப் பயன்படுகின்றன. பசுவின் குடலிலிருந்து மருந்துப் பொருளாகிய கோரோசனை எடுக்கப்படுகிறது. செருப்புகள், பெட்டிகள், பைகள் முதலிய பலவும் மாட்டின் தோலினுல் செய்யப்படுகின்றன. சீப்புக்கள். கத்திப் பிடி. பொத்தான். சிமிழ்கள் முதலியன செய்யக் கொம்புகள் பயன்படுகின்றன. குளம்பிலிருந்து வச்சிரப்பசை தயார் செய்யப்படுகிறது. கால் நடைகளின் எலும்பைப் பொடி செய்து நிலத்துக்கு உரமாக உபயோகிக்கலாம்.

எண்ணிறந்த பொருள்களும் பயன்களும் அளிக்கும் வாயில்லாச் சீவன்களாகிய மாடு வகைகளைச் சீரிய முறையில் பராமரிக்கவேண்டுவது நமது கடமை அல்லவா? நம் நாட்டுக் கால்நடைகளின் நிலைமை மிகவும் இரங்குதற்குரியது. நமது மாடுகள் போதிய ஆகாரமின்மையாலும். சரியான பராமரிப்பு இன்மையாலும் பெரும்பாலும் இளைத்து. வலிமை குன்றி. நோய்வாய்ப்பட்டு இருக்கின்றன. இதனுல். அவைகள் கொடுக்கும் பலனும் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றது.

கால்நடைகளை வைத்து வளர்ப்பதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அவற்றின் உணவு அல்லது தீவனம் பற்றியதாகும். அவற்றின் தீவனம் நல்ல சத்துக்கள் அடங்கியதாயிருத்தல் அவசியம். புல், வைக்கோல், சோளத் தட்டை, தவிடு. பிண்ணுக்கு. பருத்திக்கொட்டை. உப்புச் சத்துக்கள் முதலியன மாடுகளுக்குத் தேவையான உணவாகும். தானியக் கழுவு நீரில் தவிட்டுச் சத்துக்கள் கலந்திருப்பதால் அந்நீரும் அவற்றிற்கு ஏற்றதேயாகும். வைட்டமின் சத்துக்களுடன் தேவையான மற்றைய எல்லாச் சத்துக்களும் நிரம்பிய தீவனம் பசும்புல் ஒன்றுதான்.

எனவே, கிராமங்களில் மாடுகள் மேய்வதற்கெனப் புற்றரையும் மந்தைவெளியும் தனியாக ஒதுக்கிவிடப்படுதல் வேண்டும்.

நமக்குச் சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும் எவ்வாறு இன்றியமையாதனவோ அவ்வாறே ஆனினங்கட்கும் அவை தேவையாகும். ஆகையால் மாடுகளைக் கட்டும் தொழுவங்கள் போதிய இடமுள்ளவையாகவும், காற்றோட்டமும் சூரிய ஒளியும் பெறக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

கால்நடைகள் காலரா, சுரம், கோமாரி, தொண்டையடைப்பான் முதலிய தொற்று நோய்களால் பற்றப்பட்டுத் துயருறுதலும் உண்டு. அக்காலங்களில் அவை உணவு உட்கொள்ளமாட்டா; அசை போடா; நாசித் துவாரங்கள் உலர்ந்து போகும். இவையே பொதுவான நோய்க் குறிகள். அப்பொழுது அக்கால்நடைகளை மற்றவற்றுடன் சேர்த்துக் கட்டாமல் தனித்துக் கட்டுதல் வேண்டும். கால்நடை மருத்துவச்சாலையில் அவைகட்குத் தக்க சிகிச்சை அளிப்பதும் தேவையாகும்.

இக்காலத்தில் காப்பி, தேநீர் முதலிய பானங்களுக்குப் பால் பேரளவில் வேண்டப்படுவதால் அதற்குக் கிராக்கி ஏற்பட்டு அது கிடைப்பது அரிதாக இருக்கின்றது. இதனால் தனி வீடுகளில் கறவை மாடுகளை வைத்து வளர்த்து, பால் விற்பதால் எல்லோருக்கும் போதிய அளவு பால் கிடைப்பதில்லை; ஆதலால், பெரிய ஊர்களில் பலர் தனிப்பட்ட முறையிலும், கூட்டுறவு முறையிலும் பல மாடுகளைப் பண்ணையாக வைத்து வளர்த்து, வீடுகள் தோறும் சென்று சுயப்பாலாக விற்று ஊதியம் பெறப்

TB 031(7) N5

பாற் பண்ணைகள் நிறுவி நடத்தி வருகிறார்கள். பாற் பண்ணைகள் நடத்துதல் வருவாய் தரும் ஒரு குடிசைத் தொழிலாகும்.



ஆலம்பாடிப் பசு ஆலம்பாடி எருது

நெல்லூர், குண்டூர் சில்லாக்களிலும் சென்னை நகரத்திலுமுள்ள ஓங்கோல் அல்லது நெல்லூர் மாடுகள், கோயமுத்தூர் சில்லாவிலுள்ள காங்கேயம் மாடுகள், சேலம் சில்லாவிலுள்ள ஆலம்பாடி மாடுகள், இவை சென்னை இராச்சியத்தில் பெயர் பெற்றவை; உயர்தரமானவை. இந்நாட்டினங்களைத் தவிர இக்காலத்தில் சீமை மாடுகளும் சிற்சில இடங்களில் வளர்க்கப்படுகின்றன. பல ஊர்களிலும் சிறந்த வகைக் காளைகளை வாங்கிவைத்துப் பராமரித்து, இவ்வகை உயர்சாதி மாடுகளை உற்பத்தி செய்ய அரசினரும், பெரும் பண்ணை யுள்ளவர்களும் முற்படுதல் மிக மிகத் தேவையாகும்.

நமது நாட்டின் செல்வ வளர்ச்சிக்கும் உணவுப் பெருக்கத்திற்கும் ஆவினங்கள் இன்றியமையாதன. ஆதலால் ஆ ஓம்புதலைத் தேசப்பணியாகக் கருதி, ஆவினங்

132172

களின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட முற்படுவோமாக!

"பால் பல ஊறுக; பகடு சிறக்க"

## பயிற்சி

[ஆனினம் பராமரித்தல் என்னும் துணைத்தொழில் பற்றியது இப்பாடம்]

அருஞ்சொற்கள் : தீம்பால் - இனிய பால்; தமிழ் மறை-தேவாரம்: பால் பல ஊறுக - பாலைத் தரும் ஆனினங்கள் பலவாகப் பெருகிப் பாலைத் தருவதாக; பகடு - காளை, எருது; பகடு சிறக்க - எருதினால் உண்டாகும் வேளாண்மை சிறப்படைவதாக.

கருத்துணர்தல் :

1. ஆனினம் ஓம்புதல் அறப்பணியாகக் கருதப்படுவது ஏன்?

2. ஆனினம் பராமரித்தல் ஓர் இலாபகரமான துணைத் தொழிலாகும். எவ்வாறு?

3. பசும்பாலின் மேன்மையை விளக்குக.

4. 'ஆனினம் இருந்தும் பயன் தருகின்றன. இறந்தும் பயன் அளிக்கின்றன.' என்பது எவ்வாறு பொருந்தும்?

கட்டுரை :

'பாலும் பாற் பொருள்களும் என்பது பற்றி ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுக.

# 11. நக்கீரர் (நாடகம்)

(காட்சி—1)

இடம்: *மதுரையில் பாண்டிய மன்னன் அரண்மனைப் பூஞ்சோலை.*

காலம்: *மாலை.*

உறுப்பினர்: *பாண்டிய மன்னன் வமிச சூடாமணி.*
*மன்னன் மனைவி கோப்பெருந்தேவி.*
*(தூரத்தில்,) தோட்டக்காரன்.*
*அமைச்சர்.*

**பாண்டியன்:** தேவி! நமது மதுரை மாநகரில் கோயில் கொண்டிருக்கும் சோமசுந்தரக் கடவுளை இதுபொழுது நாம் காணும் இயற்கைப் பொருள்களின் வனப்பினிடையே மனக் கண்ணால் கண்டு மகிழ்கின்றேன். பார்க்குமிடந்தோறும் நீக்கமற அவர் நிறைந்திருக்கின்றார். ஆ! அதோ பார்! மாலைக் கதிரோன் விண்ணிடை யெங்கும் பொன் ஒளியைப் பரப்புகின்றான். செம்முகில்கள் தங்கத் தீவுகள் போல இலங்குகின்றன.

தேவி: ஆம் அரசே. இதோ பாருங்கள்! இப்பூங்காவிலுள்ள கோட்டுப் பூ, கொடிப் பூ, நிலப் பூ, நீர்ப் பூ ஆகிய நால்வகை மலர்களும் தமது நறுமணத்தாலும் பேரெழிலாலும் இறைவன் மாண்பை எடுத்துக்காட்டி நமது உள்ளத்தைக் கவருகின்றனவே!

**பாண்டியன்:** பத்தினி! அதோ! அம் மரக்கிளைகளில் வந்தடையும் புள்ளினங்களின் ஒலிகளில் இறைவனின் நாத வடிவை உணர்வாயாக!

தேவி: அரசே! இதோ இவ்வாவியின் தெள்ளிய மணி நீரில் மீனினங்கள் மிளிர்வது எவ்வளவு அழகாக இருக்கின்றது!

பாண்டியன்: (தன்னை நோக்கி வீசும் காற்றை நுகர்ந்து திகைத்து): தேவி! நினது பக்கமிருந்து வீசும் மந்த மாருதத்தில் புதியதொரு நறுமணம் கமழ்கின்றதே! இவ்வாசம் எதனால் வீசுகின்றது? நின் கற்றைவார் குழலில் பூக்கள் அணிந்திருக்கிறாயோ?

தேவி: மென்மையான மலர்களை என் கூந்தலிற் சூட்டி அவற்றை வாடி வதங்கச் செய்வதற்கு என் மனம் ஒப்பவில்லை. ஆதலால் பல நாட்களாகவே எவ்விதப் புட்பங்களாலும் என் கூந்தலை அலங்கரித்துக் கொள்வதை நிறுத்தி விட்டேனே.

பாண்டியன்: அதுதான் ஐயுற்றேன். உன் போன்ற உத்தம மகளிர் கூந்தலுக்கு இயற்கையிலேயே இவ்வாசம் உண்டென்று கருதுகின்றேன். இம்மணம் பூக்களிலே ச ஞ் ச ரி க் கு ம் வண்டினங்களுக்கும் தெரியாதுபோலும். என்றாலும், இந்நறுமணம் கூந்தலுக்கு இயற்கையோ, செயற்கையோவென, யான் ஐயுறுகின்றேன். இக்கருத்தை யாவராயினும் அறிந்து பாடல் இயற்றி விளக்குவாராயின் அவர்க்கு நான் ஆயிரம் பொற் காசுகள் பரிசிலாக வழங்குவேன். (தொலைவிலிருந்த தோட்டக் காவலனை விளித்து) காவலா! விரைந்து சென்று நமது அரும்பெறல் அமைச்சரை விரைவில் இவண் அழைத்துவா. (தோட்டக் காவலன் விரைந்தோடுகிறான்.)

அமைச்சர்: (பாண்டியனை அணுகி) பூமியர்கோவே! வணக்கம் பல. தங்கள் கட்டளை யாதோ?

பாண்டியன்: அமைச்சரே! வருக! நமது கோப்பெருந் தேவியின் குழலினின்று பூமணமுமின்றிப் புகை மணமுமின்றிப் புதியதொரு வாசத்தை இன்று உணர்ந் தேன். அது கூந்தலின் இயற்கை மணமா அன்றிச் செயற்கை மணமாவென ஐயுறுகிறேன். ஒரு பாடல் மூலம் எனது கருத்தை உறுதிசெய்வோருக்கு ஆயிரம் பொன் அடங்கிய ஒரு பொற்கிழி வழங்க மனங் கொண்டுள்ளேன். நமது சங்க மண்டபத்தில் அவ்வாறே ஒரு பொற்கிழி தூக்கி நகரெங்கும் இச் செய்தியை உடனே பறைசாற்றுவிப்பீராக! இதுபற்றி நாளை நண்பகலில் நமது புலவர்களைக் கூட்டுமாறு ஏற் பாடும் செய்க.

அமைச்சர்: வேந்தே! தங்கள் ஆணையை உடனே நிறைவேற்றுவேன். வணக்கம்.

## (காட்சி—2)

இடம்: *சோமசுந்தரக் கடவுளின் ஆலயம்.*

காலம்: *காலை.*

உறுப்பினர்: *தருமி (ஆதிசைவ குலப் பிரமசாரி)*

தருமி: (ஆலயத்தில் சோமசுந்தரக் கடவுள் சந்நிதியில் வணங்கி நின்று) பிறை சூடிய பெருமானே! அடியேனுக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை. அடியேன் வேத ஆகமங்கள் எல்லாம் ஓதினேனாயினும் இல்லற வாழ்க்கையைப் பெறுமையினால் உமக்குப் பூசை

செய்ய அருகதை அற்றவனுனேன். நான் வறிஞன்: மணஞ் செய்து கொள்ளுவதற்கு வேண்டும் பொருள் என்னிடம் சிறிதுமில்லை. தேவரீர் எல்லாமறிந்தவர். பாண்டியனுடைய உள்ளக் கருத்தையறிந்து ஒரு செய்யுள் இயற்றித் தந்தருள்வீராயின் யான் அப்பாடலை அரசன்பால் காட்டிப் பொற்கிழியைப் பெற்று என் திருமணத்தை முடித்துக்கொள்வேன். என் மீது அருள்கூர்ந்து இரக்கங்கொள்ள வேண்டுகின்றேன்.

அசரீரி: (தருமியின் காதில் விழுமாறு) இதோ வாயிற்படியிலுள்ள ஓலை நறுக்கில் நீ வேண்டும் செய்யுளை எழுதி வைத்துள்ளேன். அதை எடுத்துச் சென்று உன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்.

தருமி: (ஏட்டைக் கையிலெடுத்து) பெருமானே! வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈயும் தங்கள் கருணைத் திறத்தை என்னென்று இயம்புவேன்! தங்கள் திருவடி மலர்களை வணங்குதலின்றி அடியேன் யாது செய்யவல்லேன்! [வணங்கி ஏகுகிருன்.]

## (காட்சி—3)

*இடம்: சங்க மண்டபம்.*

*காலம்: நண்பகல்*

*உறுப்பினர்: பாண்டிய மன்னர், அமைச்சர், சங்கப் புலவர், நக்கீரர், தருமி*

பாண்டியன்: அமைச்சரே! பறைசாற்றுவித்த வண்ணம் யாரேனும் பாடல் இயற்றி வந்திருக்கின்றனரோ!

அமைச்சர் : வேந்தே! தருமி என்பான் ஒருவன் ஒரு செய்யுள் கொண்டுவந்திருக்கின்றான்.

பாண்டியன் : சரி; அச்செய்யுளைப் புலவர்களிடத்துக் காட்டுக.

புலவர்கள் : (பாட்டைப் படித்துவிட்டு) மன்னர் மன்ன! "பூக்கள்தோறும் தேனைத் தேடிச் செல்லும் அழகிய சிறகினுடைய வண்டே! நீ என் நாட்டு வண்டாதலின் எனக்காகக் கூறாமல் கண்ட உண்மையை எடுத்துச் சொல்வாயாக. இம்மையிலும் மறுமையிலும் என்னை நீங்கா அன்பினளான, மயில் போன்ற அழகிய சாயலினையுடைய இந்நங்கையின் கூந்தலைக் காட்டிலும் நறுமணம் வாய்ந்த நல்ல மலர்கள் நீ அறிந்தவற்றுள் எவையேனும் உண்டோ? நவில்க" என்ற கருத்தமைந்த இச்செய்யுள் சொற்சுவையும் பொருட் சுவையும் அமைந்திருக்கிறது; பரிசு பெறற்குரியதே யாகும்.

பாண்டியன் : (அப்பாடல் தன் மனக் கருத்தோடு ஒத்திருந்ததால் முடியசைத்து, மன மகிழ்ந்து,) இச்செய்யுள் கொண்டுவந்த அந்தணன் ஆயிரம் பொன்னையும் பெறக் கடவன். தருமி! பொற்கிழியை அறுத் தெடுத்துக்கொள்.

நக்கீரர் : (மண்டபத்தின் முன்னர்த் தூங்கிய பொற் கிழியை அறுத்தெடுக்கத் தருமி அணுகும்போது, அவனைத் தடுத்து) நில், நில், இச்செய்யுளில் குற்ற மிருக்கின்றது. பொற்கிழியைத் தொடாதே.

தருமி: (சோமசுந்தரக் கடவுளை உள்ளத்தில் நினைத்து. தனக்குள்ளே) கருணைக்கடலே! ஏழையேனுக்குக் கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே யென்று வருந்துகிறேன். சிற்றறிவினையுடைய புலவர் ஒருவர் உமது கவிக்கும் குற்றம் சொன்னாராயின் உமக்குள்ள பெருமைதான் யாது? நீர் அந்த நக்கீரனை வாதில் வெல்லாவிடில் உலகம் பழிக்குமே! ஆவது செய்தல் உமது கடனாகும்.

சோமசுந்தரர்: (புலவர் வேடந்தாங்கித் தோன்றி, அவையிலுள்ள புலவர்களை நோக்கி) எமது கவிக்குக் குற்றம் கூறியவர் யாவர்?

நக்கீரர்: ஏன்? நானே கூறினேன்.

சோமசுந்தரர்: இச்செய்யுளில் உள்ள குற்றம் யாது?

நக்கீரர்: சொற்குற்றமின்று; பொருட்குற்றம்.

சோமசுந்தரர்: நீ கண்ட பொருட் குற்றந்தான் என்ன?

நக்கீரர்: கூந்தலுக்கு இயற்கை மணம் ஏது? சூடும் பூவினாலும். ஊட்டும் புகையினாலும் செயற்கை முறையினால்தான் அதற்கு வாசம் ஏற்படும். ஆதலின் உமது பா பொருட் குற்றமுடையதாகும்.

சோமசுந்தரர்: பதுமினிபோன்ற உத்தம மகளிரின் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லையென்பது உமது துணிபோ?

நக்கீரர்: ஆம்; ஆம்.

சோமசுந்தரர் : தெய்வப் பெண்மணிகளின் கூந்தலுக்கோ ?

நக்கீரர் : அதுவும் அத்தன்மையதே.

சோமசுந்தரர் : நீர் வழிபடும் உமையம்மையாகிய ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை தானே ?

நக்கீரர் : ஆம்; எவர் கூந்தலாக இருந்தாற்றான் என்ன ? பெண்களின் கூந்தலுக்கு 'இயற்கை மணம் இல்லை' என்பதே எமது துணிபு. [உடனே சிவனார் தமது நெற்றிக்கண்ணையும் சடையையும் காட்டினார்.] புலவரே, நீர் நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே. ஆதலால் சடையைக் காட்டி என்னை வெருட்டுதல் வேண்டாம்.

[சிவபெருமான் உடனே மறைந்தருளினார். குழுமியிருந்த புலவர்கள் உத்தம மகளிரின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்பதை ஏற்றுக்கொண்டனர்; நக்கீரரின் புலமையையும் அஞ்சாமையையும் வியந்தனர். நக்கீரரும் இறைவனை எதிர்த்துப் பேசிய தம் பிழையை உணர்ந்து, அவர்மீது பல பாடல்கள் பாடி உய்ந்தனர்]

'வில்லுக்குச் சேரன் சொல்லுக்குக் கீரன்.'

## பயிற்சி

[மாணவர் நடித்தற்குரியது இந் நாடகப் பகுதி. இது திருவிளையாடற் புராணம் என்னும் நூலிலுள்ள வரலாறு ஒன்றைத் தழுவி எழுதியதாகும். இதில் சங்கப் புலவர் நக்கீரரது புலமையையும் அஞ்சாமையையும் உணரலாம்.]

அருஞ்சொற்கள்: நக்கீரர் - கீரன் என்பது இவரது இயற்பெயர். ந - சிறப்புப்பொருளை உணர்த்தி நின்றது. கோட்டுப் பூ - மரக்கிளைகளில் உண்டாகும் பூ; கொடிப்பூ- கொடிகளில் உண்டாகும் பூ; நிலப்பூ - நிலத்திலுண்டாகும் பூ; நீர்ப்பூ - நீரில் உண்டாகும் பூ; புள்ளினங்கள் - பட்சி வகைகள்; வாவி - குளம்; குழல் - கூந்தல்; அரும் பெறல் - பெறுதற்கரிய; பூழியன் - பாண்டியன்; புகை மணம் - சாம்பிராணி அல்லது அகில் கட்டைப்புகையைக் கூந்தலில் படச் செய்வதால் உண்டாகும் மணம்; கிழி - நிதிப்பொதி; தூங்கிய - தொங்கிய; பதுமினி - சிறந்த இலக்கணமுடைய உத்தம சாதிப் பெண்; பொருட்குற்றம்- பொருள் + குற்றம்.

கருத்துணர்தல்:

1. நால்வகைப் பூக்கள் எவை? ஒவ்வொன்றிற்கும் இரண்டிரண்டு உதாரணம் தருக.

2. பாண்டிய மன்னன் இறைவனது நாத வடிவை எதனுள் உணர்ந்தனன்?

3. கோப்பெருந்தேவியின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்பதை எதனால் அறியலுற்றான்?

4. பாண்டிய மன்னன் தான் கொண்ட கருத்தை உறுதி செய்ய யாது செய்தனன்?

5. தருமி என்பவன் யாவன்? அவன் சோமசுந்தரர் பால் யாது வேண்டினன்?

6. தருமி கொண்டுவந்த செய்யுளில் நக்கீரர் காட்டிய குற்றம் யாது?

7. 'நக்கீரர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்'. இஃது எதனால் விளங்குகிறது?

கட்டுரை:

நக்கீரருக்கும் சோமசுந்தரக் கடவுளுக்கும் நிகழ்ந்த உரையாடலைப் பாண்டிய மன்னன் கோப்பெருந் தேவிக்குக் கூறுவதுபோல் எழுதுக.

## 12. வானொலி

"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்."

என்று எதிர்காலப் பேரறிவுடன் பாடிய அமரகவி பாரதியாரின் வாக்கு இந்நாளில் மெய்யாகிவிட்டது. ரேடியோ அல்லது வானொலிப் பெட்டியின் மூலம் காசியினின்று மட்டுமின்றி, இக்காசினியில் பல இடங்களிலும் நிகழும் பாட்டுக்களையும் பேச்சுக்களையும் இடையே எவ்விதக் கம்பியுமில்லாமல் நமது வீடுகளிலிருந்தபடியே செவியுறுகிறோமல்லவா ? இது விந்தையினும் விந்தையே !

வானொலிக் கருவி தலைப்பட்டுச் சிறிது காலமே யாயினும் வெகு விரைவில் அது சர்வ சாதாரணமாகி வழக்கத்தில் வந்துவிட்டது. இப்பொழுது வானொலிப் பொறிகளை வாங்கி, பெரிய கிராமங்களிற்கூடச் சொந்த வீடுகளிலும் பொதுவிடங்களிலும் வைத்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

ரேடியோவின் உபயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. ரேடியோ மூலமாக இன்னிசைக் கச்சேரிகள், சொற்பொழிவுகள், வானிலை அறிவிப்புகள், தினசரி விலைவாசிகள், உலக வர்த்தமானங்கள், சிறுவர்க்கான கதைகள், பந்தய விளையாட்டுகளின் முடிவுகள் முதலியன வெகு தொலைவிலுள்ளோருக்கும் அதே நிமிடத்தில் தெரிவிக்கப்படுகின்றன. மேலும், இக் கருவியின் உதவியால் சமுத்திரத்திற் செல்லும் கப்பல்கள் ஆகாயத்தில் பறக்கும் விமானங்கள் இவற்றிலிருந்து செய்திகள் பெறவும், அவற்றிற்குச் செய்திகள் அனுப்பவும்

இயலுகிறது. இதனுல் அவ்வூர்திகள் ஆபத்துக்குட்பட்டால் அதைத் தெரிவித்து உதவி பெறவும் முடிகிறது. இவ்வாறு தற்காலத்தில் ரேடியோ பொறி வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சாதனமாக அமைந்திருக்கிறது.

வானெலிக் கருவிகள் மின்-சக்தியின் மூலம் இயங்குகின்றன வென்று உங்கட்குத் தெரியும். ஆனுல் அவற்றின் அமைப்பும் அவை இயங்கும் விதமும் நுணுக்கமும் சிக்கலுமானவை. ஆதலால், அவைபற்றிய சுலபமான விவரத்தை மட்டும் இங்கு அறிவோம்.

ஒலி அலைகளும் மின்சார அலைகளும்: குளக்கரையில் நின்றுகொண்டு ஒரு கல்லைத் தண்ணீரில் போட்டால் வட்டமான அலைகள் உண்டாகிப் பரவுவதைப் பார்த்திருப்பீர்கள். அதேவிதம் ஒலி ஓரிடத்தினின்று மற்ருேரிடத்திற்குப் பரவும் பொழுது கண்ணுக்குத் தெரியாத காற்றில் பல அலைகளைத் தொடர்ந்து உண்டுபண்ணி அவற்றின் மூலம் செல்லுகிறது. இவ்வித ஒலி அலைகள் ஒரு சுவரின் மேல் பட்டால் தடைபட்டு நின்றுவிடும்; அப்புறம் செல்லா. காற்றில்லாத வெற்றிடத்திலும் ஒலி அலைகள் செல்லமாட்டா.

மின்சாரமும் ஒருவித அதிர்வினுல் உண்டாகிறது. ஆனுல் மின்சார அலைகள் காற்றில்லாத சூனியப் பிரதேசத்திலும் செல்லக்கூடியன. காற்றைவிட அதி நுட்பமான ஈதர் என்னும் பரமாகாயம் எங்கும் வியாபித்திருக்கிறது. மின்சாரம் இந்த ஈதரில் அலைகளை உண்டுபண்ணிப் பரவுகிறது. இந்த ஈதர் அலைகள் சுவர் முதலியவற்ருல் தடுக்கப்படாமல் பரவக்கூடியன. இந்த அரிய தன்மையினுல்தான் மின்சாரத்தை வெகுதூரம் அலைகளாகப் பரப்ப முடிகின்றது.

பேசும்பொழுதும், பாடும்பொழுதும் பல ஏற்றத் தாழ்வுள்ள ஒலி அலைகள் உண்டாகும். இந்த ஒலி அலைகளைச் சில விஞ்ஞானக் கருவிகளின் உதவியால் மின்சார அலைகளாக மாற்றி, ஈதர்மூலம் எங்கும் பரவச் செய்கிறார்கள். மிகத் தொலைவிலுள்ள இடங்களில் அம் மின் அலைகளைக் கருவிகளில் வாங்கி வலுப்படுத்தி ஒலி களாக மாற்றிக் காதில் விழச்செய்வதால் அதே பேச்சையும் பாட்டையும் கேட்கிறோம். இதுவே ரேடியோ வேலை செய்வதன் மர்மம். எவ்வித கம்பிகளுமில்லாமல் ஈதர்மூலம் மின்சார அலைகளைப் பரப்பிப் பேச்சுக்களைக் கேட்பதற்கான கம்பியில்லாத் தந்தியை முதன்முதல் கண்டுபிடித்தவர் குக்லி யல்மோ மார்க்கோனி என்னும் இத்தாலிய விஞ்ஞானி ஆவார். கம்பியில்லாத் தந்தி முறையைப் பின்பற்றியே இக்காலத்தில் ரேடியோ மூலம் ஒலி பரப்பப்படுகிறது.

மேலும், வாயுவில் பரவும் ஒலி அலைகள் ஒரு நொடியில் 1,100 அடி தூரம்தான் செல்லும்; ஆனால் ஈதரில் பரவும் மின்சார அலைகள் ஒரு செகண்டிற்கு 1,86,000 மைல் வீதம் செல்லும். அதாவது, மின்-அலைகள் ஒரு நொடிப்பொழுதில் இப்பூமியை ஏழு தடவை சுற்றி வரும். இதனால்தான் ரேடியோ பேச்சுக்களும், பாட்டுக் களும் தொலைவிலுள்ள இடங்களிற்கூட அதே தருணத்தில் காதில் விழுகின்றன.

ஒலி பரப்புதல்: ஓரிடத்தில் சில கருவிகள் வைத்து முதலில் ஒலி அலைகளை மின்சார ஓட்ட மாகவும், மின்சார அலைகளாகவும் மாற்றி எங் கும் பரவச் செய்ய வேண்டும். ஒலி அனுப்ப அமைக்கப்படும் கருவிகளுக்கு ஒலியனுப்புங் கருவி

என்று பெயர். ஒலி அனுப்புமிடம் வானொலி நிலையம் எனப்படும். நமது தமிழ் நாட்டில் ஒரு ரேடியோ நிலையம் சென்னையிலும், மற்றொன்று திருச்சிராப்பள்ளி யிலும் நிறுவப்பட்டுள்ளன.



1. வானொலி நிலையம் 2. ஏரியல் நிலையம் 3. ரேடியோ

ஆகாயவெளியில் பரவிவரும் மின்–அலைகளைக் கிரகித்து, அந்த அலைகளை மின்சார ஓட்டமாகவும், பிறகு அதை ஒலி அலைகளாகவும் மாற்றிக் காதில் விழச்செய்யும் கருவிக்கு ஒலி ஏற்குங் கருவி என்று பெயர். நமது வீடுகளில் வாங்கி வைக்கும் வானொலிப் பெட்டியே ஒலி ஏற்கும் கருவியாகும்.

ஒலி அனுப்பும் ரேடியோ நிலையங்களில் வெளிச் சத்தம் உட்புகாதவாறும் எதிரொலியுண்டாகாதவாறும் கண்ணாடிச் சுவர்களால் அமைக்கப்பட்ட ஒரு தனி அறை உண்டு. பேச்சை அல்லது பாட்டை நிகழ்த்துவோர் அவ்வறையிலுள்ள மைக்ரோபோன் என்னும் ஒரு கருவி

யின் எதிரில் பேசவோ, பாடவோ செய்வர். அப்பொழுது அவரது குரலின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப மைக்ரோ போனில் மின்சார ஓட்டம் உண்டாகி வால்வு என்னும் உபகரணத்தால் சிறிது வலுவுற்று, அங்கிலையத்திலுள்ள ஏரியல் என்னும் உன்னதக் கம்பியிற் பாய்ந்து மின்-அலை களை எல்லாத் திசைகளிலும் பரப்பும்.

மின்-அலைகளைப் பரப்பும் ஏரியல் நிலையம் ரேடியோ நிலையத்திலேயே இராமல் வேறு தனியிடங்களில் அமைக்கப் பட்டிருப்பதுமுண்டு. உதாரணமாக, திருச்சிராப்பள்ளி ரேடியோ நிலையத்துக்கு ஒலிபரப்பும் ஏரியல் நிலையம் திரு வெறும்பூரில் இருக்கிறது. ரேடியோ நிலையத்திலிருந்து வரும் ஒலி அலைகள் மிகவும் வலுவற்றன. வெகு தூரம் செல்வதற்கு ஏற்றவாறு ஏரியல் நிலையத்தில் மின்சார இயந் திரங்கள் மூலம் அவ்வலைகள் பெரிதும் வலுப்படுத்தப் படுகின்றன.

ஒலி ஏற்குங் கருவி: வீடுகளில் வைத்திருக்கும் வானொலிப் பெட்டியே ரேடியோ நிலையங்களிலிருந்து பரப்பப்படும் ஒலிகளை ஏற்குங் கருவி என்று முன்னரே அறிந்தோம். ரேடியோவுக்கு அருகில் உன்னதக் கம்பங் களில் கட்டப்பட்டிருக்கும் ஏரியலில் மோதும் மின்சார அலைகள், அக் கம்பி வழியாக ரேடியோப் பெட்டியிலுள்ள வால்வுகளுக்கு வந்து சேரும். இவ்வால்வுகளால் மின்சார ஓட்டம் வலுவடைந்து, பெட்டியிலுள்ள ஒலிபெருக்கி யின் தகட்டை அசைத்து, ஒலி அதிர்வுகளை உண்டு பண்ணும். இதனால் தொலைவில் நிகழும் பேச்சு நமது செவியில் விழுகிறது.

ரேடியோப் பெட்டியில், பற்பல ரேடியோ நிலையங் களிலிருந்து ஒலி பரப்பப்படும் பேச்சுத் தனித்தனியே

எவ்வாறு கேட்கப்படுகிறது தெரியுமா? பல ரேடியோ நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் மின் அலைகளின் நீளம் ஒரே அளவாயிராது. இந்த மின்—அலைகளின் நீளம் ஒவ்வொரு நிலையத்திற்கும் வெவ்வேருக இருக்கும். உதாரணமாக, திருச்சிராப்பள்ளி நிலயத்திலிருந்து அனுப்பப்படும் அலை 395·8 மீட்டர் நீளமுள்ளது. இதே விதம் பம்பாய், டில்லி, கல்கத்தா, இலண்டன் முதலிய நிலையங்களில் வெவ்வேறு மின்—அலை நீளங்களை உபயோகிக்கிருர்கள்.

மின்சார அலைகளின் நீளங்களைக் காட்டும் எண்கள் ரேடியோ முகப்பில் தெரிகின்றன. ஆதலால் ஸ்விச் என்னும் ஒரு சாவியைத் திருகி, முள்ளை இந்த 395·8 எண்ணுக்கு எதிராகக் கொண்டுவருவதால் திருச்சிராப்பள்ளி நிலைய நிகழ்ச்சிகளைச் செவியுறுகிருேம். முள்ளை 211·3 மீட்டருக்கு எதிராகக் கொண்டுவருவதால் சென்னை நிலைய நிகழ்ச்சிகளைக் கேட்கிருேம்.

மக்களது அறிவு வளர்ச்சிக்கும், உல்லாசப் பொழுது போக்குக்கும் உதவியாகச் சர்வ சன மகிழ்ச்சிக்குக் காரணமாக இக்காலத்தில் வானெலிக் கருவிகள் விளங்குகின்றன. "ரேடியோ ஓர் அற்புதம். அதில் நான் எல்லாம் வல்ல இறைவனின் சக்தியைக் காண்கின்றேன்" என்று மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளது மிகையாகாது.

## பயிற்சி

[விஞ்ஞானக் கலை பற்றியது இப்பாடம். இதில் வரும் கலைச் சொற்களை அறிக ]

அருஞ்சொற்கள்: *காஞ்சி - காஞ்சீபுரம்; காசினி - பூமி; எதிர்காலப் பேரறிவு - தீர்க்கதரிசனம்; வானிலை - வெப்*

பம் குளிர்பற்றிய காலநிலை; ஊர்தி - வாகனம்; அதிர்வு—சலனம்.

கருத்துணர்தல் :

1. மக்களது அறிவு வளர்ச்சிக்கும் உல்லாசப் பொழுதுபோக்குக்கும் வானொலிக் கருவிகள் எவ்வாறு பயன் படுகின்றன?

2. கப்பல்களிலும் ஆகாய விமானங்களிலும் செல்வோருக்கு ரேடியோ எவ்வாறு உதவியளித்தல் கூடும்?

3. குக்லியல்மோ மார்க்கோனி என்பவர் யார்? அவர் கண்டுபிடித்த விஞ்ஞான விந்தை யாது?

4. ஒலி பரப்புவதற்குத் தேவையாகும் இருவகைக் கருவிகள் யாவை?

5. ரேடியோப் பெட்டியில், பற்பல ரேடியோ நிலையங்களிலிருந்து வரும் ஒலிகளைத் தனித்தனி எதனால் கேட்க முடிகிறது?

கட்டுரை :

திருச்சி அல்லது சென்னை நிலைய நிகழ்ச்சிகளைத் தினத்தாள் ஒன்றில் படித்து, என்ன என்ன விஷயங்கள் ஒலி பரப்பப்படுகின்றன என்று எழுதுக.

# 13. சுதந்திர வீரர் கட்டபொம்மன்



"உயர் வீரஞ் செறிந்த தமிழ் நாடு" என்று புலவர் போற்றும் நம் செந்தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு இன்றுவரை வாழையடி வாழையாகப் பற்பல மாபெரும் வீரர்கள் தோன்றி, நாட்டின் சுதந்திரத்திற்காகத் தமது உயிரைக் கொடுத்துப் பொன்றுப் புகழை நிலை நாட்டி யுள்ளார்கள். அவ்வீரப் பெருமக்கள் மரபில் பாஞ்சாலங் குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் ஒருவர்

ஆவார். இவரே அந்நிய ஆங்கில ஆட்சிக்குத் திறை செலுத்த மறுத்து வரிகொடா இயக்கத்தை முதன்முதல் தொடங்கியவர்; வெள்ளையரை எதிர்த்துச் சுதந்திரப் போர் புரிந்தவர்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த தட்டப் பாறைப் புகைவண்டி நிலையத்தினின்று வடதிசைக்கண் ஆறு கல் பயணத்தில் கப்பலோட்டிய தமிழ் வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை பிறந்து வளர்ந்த ஒட்டப் பிடாரம் என்னும் புனிதச் சிற்றூர் அமைந்துள்ளது. அவணிருந்து கிழக்கு நோக்கி மூன்று கல் தொலைவு நடந்து சென்றால் மண்கோட்டைச் . சின்னங்கள் தரை யோடு தரையாக இருப்பதைக் கண்ணுறலாம். இவ்விடமே சரித்திரப் புகழ்வாய்ந்த பாஞ்சாலங்குறிச்சி என்னும் ஊராகும். அஃது இப்பொழுது வெறுந் திடலாகத் தோன்றிய போதிலும் சற்றேறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் மக்கட் செறிவுடனும் கோட்டை கொத்தளங்களுடனும் குறுநில மன்னர்கள் அதைத் தலைமைப் பதியாகக் கொண்டு ஆட்சிபுரிந்த வீர பூமியாக விளங்கியது. இங்கு இறுதியாகச் செங்கோல் செலுத்தியவர் நமது வீரபாண்டிய கட்டபொம்மன் ஆவார்.

சேர, சோழ, பாண்டியர் ஆட்சிக்குப் பின்னர் ஆண்டுவந்த மதுரை நாயக்க வமிசத்தாரால் தமிழ்நாடு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாளையமும் ஒவ்வொரு பாளையக்காரர் ஆளுகையில் இருந்தது. அப் பாளையக்காரர்கள் சிற்றரசர்களுக்குரிய தகுதி வாய்ந்தவர்கள்.

எண்ணூறு ஆண்டுகட்கு முன்பு திருநெல்வேலி சில்லாவில் உள்ள அழகிய வீரபாண்டியபுரம் என்னும்

ஊரையடுத்த நிலப் பகுதியில் பாண்டியமன்னர் மரபில் தோன்றிய ஜகவீரபாண்டியன் என்னும் அரசன் தனி அரசு செலுத்தி வந்தனன். தனக்குப் பிள்ளைப் பேறில்லாமையால் அக்குறுநில மன்னன் தனது அந்திய காலத்தில் நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கட்டபொம்மன் என்ற தன்னுடைய தளபதியிடம் ஒப்படைத்தான். அத்தளபதியின் மனவுறுதியை மெச்சி உற்றாரும் மற்றாரும் அவனைக் 'கெட்டிபொம்மு' என்று அழைக்கலாயினர். இப்பெயரே நாளடைவில் 'கட்டபொம்மன்' எனவாயிற்று.

ஆதி கட்டபொம்மன் அரியாசனம் ஏறியதும் ஒரு நாள் படை வீரர்களுடன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அங்கே அவனது ஏழு வேட்டை நாய்கள் ஒரு முயலைத் துரத்திக்கொண்டு சென்றன. நாய்களுக்கு அஞ்சி ஓடிய முயல் ஓரிடத்தை அடைந்ததும், சட்டென்று திரும்பி நாய்களை எதிர்த்து விரட்டியது. அந்த இடம் பயந்தோடிய முயலுக்கு வீரமூட்டிய விந்தையைக் கண்ட ஆதி கட்டபொம்மன் அதே இடத்தில் கோட்டை கொத்தளங்கள் அமைத்து, அதனையே தனது தலைநகராகக்கொண்டு வாழ்ந்து வரலானான். தனது பாட்டன் பாஞ்சாலன் பெயர் விளங்க அவ்வூர்க்குப் பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரும் சூட்டினான்.

ஆதி கட்டபொம்மன் வமிசத்திலே 47-வது மன்னராக வந்தவரே நமது வீரபாண்டிய கட்டபொம்மன். இவர் 1760-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் நாள் பிறந்தார். இவரது தந்தை ஜகவீரக் கட்டபொம்மன்; தாய் ஆறுமுகத்தம்மாள். இவருக்குத் தளவாய் குமார சாமி, துரைசிங்கம், என்ற இரண்டு தம்பிமார் உண்டு. வீரபாண்டியனைக் கறுத்தையா என்றும், குமார

சாமியைச் சிவத்தையா என்றும், துரைசிங்கத்தை ஊமைத்துரை என்றும் மக்கள் அழைப்பது வழக்கம். வீரபாண்டியன் மனைவியின் பெயர் வீரசக்கம்மாள். இவள், கணவன் பணியே தவமாகக் கொண்டொழுகியவள். கறுத்தையா தமது 30-வது வயதில் 1790-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் நாளில் பாஞ்சாலங்குறிச்சி மன்னராய் முடி சூட்டிக்கொண்டார். 'காகமும் பறவாது கட்ட பொம்மன் சீமையிலே' என்று வழங்கிய முதுமொழி அம்மன்னனது சுதந்திர ஆட்சிக்கு ஒரு சான்றாகும்.

18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னாடு முழுதும் ஆற்காட்டு நவாப்பின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. ஆங்காங்கே இருந்த சிற்றரசர்கள் யாவரும் ஆற்காட்டு நவாப்புக்குக் கப்பம் கட்ட வேண்டுமென்பது ஆணை. ஆனால் கெடுபிடி செய்து கண்டிப்புடன் திறை வசூலிப்பதற்கான ஆற்றலும் வலிமையும் நவாப்புக்கு இராமையால் அக் குறுநில மன்னர்கள் பெரும்பாலும் சுதந்திர வாழ்வு நடத்திவரலாயினர்.

அதுபோழ்து நாடோடிகளாக வாணிப நிமித்தம் இந்தியாவுக்கு வந்திருந்த ஆங்கில வர்த்தகர்கள், நாட்டை அடிமைப்படுத்தும் பொருட்டுப் பல வஞ்சகச் சூழ்ச்சிகள் செய்ய முற்பட்டனர். அவர்களது குழுவாகிய கிழக்கு இந்தியக் கம்பெனியாரிடம் ஆற்காட்டு நவாப்பு ஏராளமாகக் கடன் பெற்றிருந்தார். அக்கடனைத் திருப்பித்தர இயலாமையால் அதற்கு ஈடாக நவாப்பு கப்பம் வசூலிக்கும் உரிமையை 1792-ல் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு அளித்தார்.

மேலும் அக்கம்பெனித் துரைமார் நாளடைவில் அரசியல் அதிகாரங்களனைத்தையும் கவர்ந்துகொண்டு

நாட்டை ஆளவும் தொடங்கினர். ஏனைய பாளையக்காரர் வெள்ளையருக்குப் பணிந்து இறை கட்ட ஒப்புக் கொண்டனர். ஆனால் பாஞ்சாலங் குறிச்சியின் மன்னரான வீரபாண்டிய கட்டபொம்முவிடம் அரசிறை கேட்ட போது அவர், 'வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி?' என்று கூறி வரி கொடுக்க மறுத்துவிட்டார். அப்பொழுது ஜாக்ஸன் என்னும் துரை வரிவசூலிக்கும் அதிகாரியாக இருந்தான். அவன் நயத்தாலும் பயத்தாலும் கட்டபொம்முவிடம் கப்பம் பெறப்பெரிதும் முயன்றான். எனினும் அவனது சதிகள் சிறிதேனும் பலிக்கவில்லை.

அதன் பின்னர், இராமநாதபுரத்தில் தங்கியிருந்த ஜாக்ஸன் துரையைச் சந்திக்க, அவனது அழைப்பின் பேரில் கட்டபொம்மு தமது தம்பிமார்களும் பரிவாரங் களும் புடைசூழச் சென்றார். சேதுபதி மன்னருக்குச் சொந்தமான இராமலிங்க விலாசம் என்னும் மாளிகை யில் தங்கியிருந்த ஜாக்ஸன், "வீரபாண்டியர் தனியே வந்தால்தான் பார்க்கமுடியும்" என்று ஆள் மூலம் சொல்லி யனுப்பினான். நெஞ்சுரங்கொண்ட வீர பாண்டியர் அஞ்சாது, தமது படையினரை மாளிகையின் நாற்புறமும் அணிவகுத்து நிறுத்திவிட்டுத் தன்னந்தனியே ஜாக்ஸனை அவனிருந்த அறையில் சந்தித்தனர். துரைமகன் இறை செலுத்திக் கீழ்ப்படிய வீரபாண்டியரை வற்புறுத்தினான். "அந்நியருக்கு அடங்கி வாழ்வதும், திறை கொடுப்பதும் எமது அரச மரபுக்கு இழுக்கு" என்று கூறி, வீரபாண்டியர் அதற்கு இணங்கினாரில்லை. அவரது மனவுறுதியை உணர்ந்த ஜாக்ஸன், "உன்னை இக்கணமே சிறைப்படுத்தியுள்ளேன்; வெளியேறக்கூடாது" என்று கட்டளையிட்டான். "நீ யார்

என்னைச் சிறை பிடிக்க?'' என்று கனன்று சீறினர் கட்டபொம்மு. வாட்போரில் வல்லவரான அவர், தம் மீது பாய்ந்து சிறைப்படுத்த முயன்ற பகைவர்களைத் தமது வாளுக்கு இரையாக்கினர். பாஞ்சாலங்குறிச்சி மன்னர் படையினருக்கும் கம்பெனியாரது படையினருக்கும் நெடுநேரம் சமர் நடந்தது. இதில் கிழக்கிந்தியக் கம்பெனி யின் தளபதி கிளார்க் என்பானை வீரபாண்டியர் வெட்டி வீழ்த்தினர். இறுதியிற் கட்டபொம்மு வெற்றிபெற்றுத் தமது தம்பிமார்களுடனும் எஞ்சிய பரிவாரங்களுடனும் சின்னாட்களில் பாஞ்சாலங்குறிச்சி வந்தெய்தினர்.

வெள்ளையரின் இப்படு தோல்வியை அறிந்த ஆங்கிலக் கம்பெனியார் ஜாக்ஸனைப் பதவியினின்று விலக்கிவிட்டு, அவனுக்குப் பதிலாக லூஷிங்டன் என்ற புதிய கலெக்டரை நியமித்தார்கள். லூஷிங்டன் துரையும் கட்டபொம்முவை அடக்கியாளப் பற்பல வஞ்சகச் சூழ்ச்சிகள் செய்தான். ஆனல் அவன் எண்ணம் கைகூடவில்லை. வீர கட்ட பொம்முவும் அவரது தம்பி ஊமைத் துரையும் அவ் வெள்ளையனைப் படாதபாடு படுத்தினர். அதனல், அவனும் தனது பதவியிலிருந்து நீங்கினன்.

பின்னர், கம்பெனியார் மேஜர் பானர்மன் என்னும் இராணுவ அதிகாரியைத் தென்னாட்டுக்குப் பெரும்படை யுடன் அனுப்பினர். இவன் 1799-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதி பாஞ்சாலங்குறிச்சியின்மீது படையெடுத் துச் சென்று போர் தொடங்கினன். நீண்ட நாட்கள் கடும்போர் நிகழ்ந்தது. இரு சார்பிலும் பலர் மாண்டனர். இறுதியில் வெள்ளையர் படை கோட்டைக்குள் புகுந் தது. அத்தருணம் துணைத் தளபதி காலின்ஸ் என்பான்

கோட்டைவாயிலினுள் நுழையும்பொழுது அவனை வெள்ளையத்தேவன் ஈட்டியால் குத்திக்கொன்றான். இவ் வெள்ளையத்தேவனே கட்டபொம்முவுடன் தோளோடு தோள் நின்று பல வீரச்செயல்கள் புரிந்த உயிர்த்தோழனு வான். வீரபாண்டிய கட்டபொம்முவும் அவருடைய சோதரர்களும் தமது மெய்காப்பாளர்கள் உடன்வர, கோட்டையினின்று நள்ளிரவில் வெளியேறி ஓடி விட்டார்கள்.

கட்டபொம்மு தப்பியோடிவிட்டதை அறிந்த தளபதி பானர்மன் நெஞ்சங் குமுறினான். பாஞ்சாலங்குறிச்சி மன்னனைப் பிடித்துக் கொடுப்போருக்குப் பெரும் பரிசு அளிப்பதாக விளம்பரம் செய்தனன்.

வீரபாண்டிய கட்டபொம்மு புதுக்கோட்டைத் தொண்டைமானின் அரண்மனையில் விருந்தினராகத் தங்கி யிருந்தபோது அம்மன்னன் பானர்மனுக்குச் செய்தியனுப்பி நயவஞ்சகத்தினால் 1799-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதியன்று அவரை ஆங்கிலேயர் கையிற் சிக்கும்படி செய்தான்.

வீரப்போர் புரிந்து, தமிழ் மக்களின் பெருமையை நிலை நாட்டிய கட்டபொம்மன், திருநெல்வேலிச் சீமையிலுள்ள கயத்தாறு என்னுமிடத்தில் ஆங்கிலேயரால் 16-10-1799-ல் தூக்கிலிடப்பட்டார். இப்பொழுதும் அந்தப் பாதையில் கால்நடையாகச் செல்லுவோர் ஒரு கல்லைப் பொறுக்கி யெடுத்து அந்த இடத்திற் போட்டு அவருக்கு வணக்கஞ் செலுத்திய பிறகே தம் வழி ஏகுவர்.

சுதந்திர வீரனாகப் பிறந்து, சுதந்திர வீரனாக வளர்ந்து, சுதந்திர வீரனாக வாழ்ந்து, சுதந்திர

வீரனாகவே மறைந்தார் வீரபாண்டிய கட்டபொம்மன். ஆனால் அவர் புகழ் தமிழ் நாடு உள்ளளவும், தமிழ் மக்கள் உள்ளளவும் மறையாது நிலைத்து நிற்குமன்றோ ?

## பயிற்சி

[தமிழ் நாட்டுச் சுதந்திர வீரர் ஒருவரின் வரலாறாகிய இப்பாடம் இளைஞர்களுக்கு வீரச்சுவை ஊட்டவல்லது]

அருஞ்சொற்கள் : பொன்று - மங்காத; மாவட்டம் - ஜில்லா; குறுநில மன்னர் - சிற்றரசர்; மறம் - வீரம், வலிமை; அரியாசனம்-சிம்மாசனம்; கப்பம்-இறை; திறை-வரிப் பணம்; தளபதி-சேனாதிபதி; சதி-வஞ்சனை, சூழ்ச்சி.

கருத்துணர்தல் :

1. பாஞ்சாலங்குறிச்சிக்கு வழி யாது? அந்த ஊரை ஆதிகட்டப்பொம்மன் தலைநகராக அமைத்துக்கொண்ட வரலாறு என்ன ?

2. ஆங்கிலேயர்கள் ஆற்காடு நவாபிடமிருந்து என்ன என்ன உரிமைகளை எவ்வகையில் பெற்றார்கள் ?

3. கப்பம் கேட்டனுப்பிய ஜாக்ஸனுக்கு வீரபாண்டியர் கூறிய விடை யாது?

4. பாஞ்சாலங்குறிச்சியின் மீது படையெடுத்த இராணுவ அதிகாரி யார்? அப்போரில் கொல்லப்பட்ட ஆங்கிலப் படைத்தலைவன் யாவன்? அவன் யாரால் கொல்லப்பட்டான்?

5. வீரபாண்டிய கட்டப்பொம்மு ஆங்கிலேயரால் எவ்வாறு கைது செய்யப்பட்டார் ?

கட்டுரை :

இராமலிங்க விலாசத்தில் நிகழ்ந்த சமரைப்பற்றி வீரபாண்டிய கட்டபொம்மு தமது நண்பர் ஒருவரிடம் சொல்லுவதுபோல் எழுதுக.

# 14. அழகுக் கலைகள்

ஒரு நாட்டின் வரலாற்றையும், அந்நாட்டு மக்களின் நாகரிகப் பண்பாட்டையும் நமக்கு நன்கு எடுத்துக்காட்டும் வன்மை வாய்ந்தன கலைகளேயாகும். அக்கலைகள் அறிவுக் கலைகள், அழகுக்கலைகள் என இருவகைப்படும். கணித நூல், நில நூல், சரித்திரம் விஞ்ஞானம் போன்றவை நமது அறிவைப் பெருக்குதலின், அவை அறிவுக் கலையின்பாற்படும். கவிதை, இசை, ஓவியம், சிற்பம், நாடகம், நாட்டியம் என்ற இவை நமது உணர்ச்சியைத் தூண்டி, உள்ளத்திற்கு உவகையளிப்பதுபற்றி அழகுக் கலைகள் எனப்படும். இறைவன் அழகே உருவமாக அமைந்தவன். அவனது எழிலே இயற்கை வனப்புகளில் திகழ்கின்றது. அவ்வியற்கை வனப்புகளின் இன்பத்தை நுகரும் மக்கள் உளமகிழ்ந்து, அவற்றின் அழகில் ஈடுபடு கின்றனர். அந்த ஈடுபாடு கவிதையாக எழுந்து இன்னிசை யுடன் பாடப்படுகின்றது. அவ்வழகிய இயற்கைக்காட்சி கள் சித்திரமாக எழுதப்படுகின்றன. சிற்பமும் சித்திரமும் கண்ணால் உணரப்படும் கலைகளாகும்; காதாற் கேட்கப் படும் கலை இசையாகும். கண், காது இவை இரண்டினாலும் அனுபவிக்கப்படும் கலைகள் நாடகமும் நாட்டியமுமாகும். இவ்வழகுக் கலைகள் முழுதும் நிறைந்துள்ள நாடே நாகரிகப் பண்பாடுகள் அனைத்தும் பொருந்திய நன்னாடாகும் எனலாம். வேறு எந்த நாடும் அடைந்திராத அழகுக் கலைச் செல்வங்களை நம் நாடு பண்டுமுதலாகவே பெற்று மிளிர்கின்றது என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

அழகுக் கலைகளில் முதன்மை வாய்ந்தவை கவிதையும் இன்னிசையுமே யாகும். நம் நாடு சிறந்த கவிஞர்களின்

கவிதைகளைப் பெற்று விளங்குகின்றது. பத்துப்பாட்டின் இயற்கை வளமும், கம்பனின் கவிச் சித்திரமும், காளி தாசனின் காவிய அழகும் கற்பவர் உள்ளங்களைக் கவருந் தன்மையனவாம்.

இசைக் கலை சங்கீதமெனவும் வழங்கப்பெறும். இசை வல்லுநர் தம் இனிய குரல் கொண்டு வாய்ப் பாட்டாகவும், இசைக் கருவிகள் மூலம் நிகழ்த்தும் இனிய சங்கீதத்தைக் கேட்டு மகிழாத மாந்தர் உலகில் எவருமே இரார். குழந்தைகள், பசுக்கள், பாம்புகள் முதலியனவும் இசை நயம் அறிந்து இன்பம் துய்க்கு மென்று பெரியோர் கூறுவர். தாய்மார் பாடும் தாலாட் டைச் செவியுறும் மதலைகள் அழுகை நீங்கி உறங்கும். ஏற்றம் இறைப்பவர், படகு வலிப்பவர், உழவர் முதலான தொழிலாளர்கள் தாங்கள் பாடும் நாடோடிப் பாடல்களில் ஈடுபட்டுத் தமது வேலைகளை எளிதில் செய்வார்கள்.

இசையானது மக்கட்கேயன்றி வானவர்க்கும் உவப் பானது. இசைப் பாட்டினால் இறைவன் புகழைப் பாடுதல் சிறந்த திருப்பணி யென்று கருதிச் சைவ சமயத் தலைவர்களும், வைணவ சமயத் தலைவர்களும் பிற அடியார்களும் இசை நலங் கலந்த பாக்களால் இறைவனை வழுத்தியுள்ளார்கள். இறைவனே நாதவடிவமானவ னென்று ஒரு சாரார் கூறுவர்.

தியாகராஜ சுவாமிகள், மகா வைத்தியநாத ஐயர், முத்துசுவாமி தீட்சிதர் முதலான மிக உயரிய சங்கீத வித்துவான்களைத் தோன்றச் செய்த பெருமை நம் நாட்டிற்கு உண்டு; இக்காலத்திலும் சிறந்த இசை வாணர்கள் நம் நாட்டில் தோன்றி அக்கலையை வளர்த்து

வருதல் யாவரும் அறிந்ததேயாம். நவீன இயந்திரங்களாகிய கிராமபோன், வானொலி, பேசும் படம் முதலிய வற்றாலும் நாம் இன்னிசைகளைச் செவியுற்று இன்புறுகிறோம்.

தற்காலத்தில் பலவிடங்களில் சங்கீதக் கழகங்கள் ஏற்பட்டு, சங்கீதப் போட்டிகளும் கச்சேரிகளும் நிகழ்த்தப் படுகின்றன. இசைக் கலையின் சிறப்பினை யுணர்ந்து நமது நாட்டுப் பல்கலைக் கழகங்களிற்கூட இக்கலை, தேர்வுக்குரிய ஒரு பாடமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இசைக் கலை செவி வழியாக இன்பமூட்டுதல் போன்று ஓவியம் அல்லது சித்திரக் கலை விழி வழியாக நமக்கு இன்பமூட்டுகின்றது. மலை, வனம், கடல், நதி, வானம் முதலியவற்றின் இயற்கைக் காட்சிகளையும், விலங்குகளின் வடிவங்களையும், மனிதர், தேவர் முதலிய வர்களின் உருவங்களையும், உள்ளப் பண்புகளையும், காகிதம், துகில், சுவர் முதலியவற்றில் பன்னிற வண்ணங்கள் கொண்டு தூரிகையால் கவின்பெற வரைவது ஓவியமாகும். தற்காலத்தில் ஏற்பட்டிருக்கின்ற புகைப் படங்களும், பேசும் படக்காட்சிகளும் ஓவியக் கலையின் வளர்ச்சியைக் காட்டுவனவாம்.

பல்வேறு பொருள்களின் படங்கள் அப்பொருள்களை நாம் நேரிற் காண்பதுபோல் மகிழ்ச்சியளிப்பதுடன் நமது அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகின்றன. சித்திரங்கள் மூலமாகச் சிறுவர்கள் தாங்கள் பார்த்திராத பொருள்களை எளிதில் அறிந்து கொள்வார்கள். இதனாற்றான் படங்கள் மூலம் பாடங்கள் போதிப்பது கல்வி முறைகளுள் சாலச் சிறந்ததென்று மதிக்கப்படுகிறது.

நம் நாடு பண்டைக்கால முதற்கொண்டே ஓவியக் கலையில் சிறந்து விளங்கும் நாடாகும். தஞ்சைப் பெரிய கோயிலில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இராசராச



*தஞ்சைப் பெரிய கோவில்*

சோழன் காலத்தில் தீட்டப்பட்ட மதில் ஓவியங்கள் இன்னும் மங்காது காட்சியளிக்கின்றன. புதுக்கோட்டையைச் சார்ந்துள்ள சித்தன்னவாயில் சித்திரங்கள் பல நூற்றுண்டுகட்குமுன் எழுதப்பட்டனவாயினும் அவை இன்றும் காண்பவர் கருத்தைக் கவர்கின்றன. அண்மையில் நம் நாட்டில் வாழ்ந்த சிறந்த ஓவியர் மணி இராசா இரவிவர்மாவின் புகழ் உலகெங்கும் நிலவுவதை

நீங்கள் அறிவீர்கள். இன்றும் அவரது கண்கவர் ஓவியப் படங்கள் இல்லாத வீடுகள் நம் நாட்டில் இல்லையென்றே இயம்பலாம்.



சித்தன்னவாயில் ஓவியம்

மரம், மண், கல், உலோகம் முதலிய பொருள்களால் சிலைகளும், பதுமைகளும், விக்கிரகங்களும் செய்யப்படுவது சிற்பக் கலை எனப் பெயர் பெறும். இச் சிற்பக் கலையில் பயின்றவர்கள் சிற்பிகள் எனப்படுவர். ஓவியத்தைப் போல் சிற்ப வேலைப்பாடுகளும் கண்கள் மூலமாக நமக்கு மகிழ்ச்சி தருகின்றன. ஓவியக் கலையினின்று வளர்ந்து வந்ததே சிற்பம் எனலாம். சித்திரங்கள் வரைந்து கருத்துக் களை அமைத்துக்கொண்ட பின்னரே சிற்பவேலை தொடங்கப்படும். சித்திர உருவங்களுக்கும் சிற்ப உருவ களுக்குமுள்ள வேறுபாடுகளை நீங்கள் உணர்வீர்களாக !

நமது தமிழகத்தில் நிறைந்து கிடக்கும் ஆயிரக் கணக்கான அற்புதக் கோவில்களும், வானளாவும் கூட கோபுரங்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் நமது முன்னோர் நமக்காகச் சேகரித்துவைத்துள்ள சிற்ப செல்வங்களேயாம். அவைகளிற் செதுக்கப்பட்டுள்ள சிலைகளும், விக்கிரகங்களும் நம் நாட்டுச் சிற்பிகளின் கை வன்மையையும் நுண்மாண் நுழை புலமையையும் வெளிப் படுத்துவனவாகும். மேனாட்டாரும் அவைகளைக் கண்டு வியந்து புகழ்ந்துள்ளார்கள்.

சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன் செதுக்கப்பட்ட அழகிய சிற்பங்கள் இன்றும் மகாபலி புரத்தில் காட்சியளிக்கின்றன. ஆங்குள்ள பஞ்ச பாண்டவர் இரதங்களும், பகீரதன் தவமும், இன்னுமுள்ள ஏனைய சிற்பங்களும் யாவராலும் கண்டு களித்தற்குரியன வாகும். மேலும் திருச்சிராப்பள்ளி, காஞ்சீபுரம், தஞ்சாவூர், சீரங்கம், மதுரை முதலான இடங்களிலுள்ள இறைவன் திருமாளிகைகள் உயர்ந்த சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தவையாம்.

சிற்ப, ஓவியக் கலைக் களஞ்சியங்களாக விளங்கும் கோவில்களுக்குச் செல்லும்போது, ஆங்குக் காணும் மதில் ஓவியங்களையும், நுணுக்கமான கல் வேலைப்பாடுகளையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். அவைகளிற் சில புராணக் கதைகளை விளக்குகின்றனவாகும். கோபுரங்களிலும், மண்டபங்களைத் தாங்கி நிற்கும் தூண்களிலும், தனிக் கோயில்களின் விமானங்களிலும் எத்துணையோ சிற்பங்கள் செதுக்கப்பட்டிருத்தல் கண் கொள்ளாக் காட்சியாகும். கற்சிலைகளின் எழில் நிறைந்த முகத்திலும், நீண்ட கண்களி லும், புன்முறுவலிலும் உயிர்க்களைத் ததும்புவது உணரத்

தக்கதாகும். கற்றூண்களிலும் மண்டபங்களின் உள் தளங்களிலும் பலவிதப் பூ வேலைகள் இழைக்கப்பெற்றிருப்பவைச் சிற்பக் கலைஞர்களின் கைத்திறனைப் புலப்படுத்துகின்றன. இவைகளெல்லாவற்றையும் நீவிர் கண்டு களிக்கத் தவறாதீர்கள்.

நாட்டியமும் நாடகமும் அழகுக் கலைகளேயாகும். மக்களது உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் முகக் குறிகளாலும், உடலுறுப்புகளின் அபிநயத்தாலும் பிறர் அறியுமாறு வெளிப்படுத்துவதே நாட்டியமாகும். நம் நாட்டுப் பரதநாட்டியம் தனிச் சிறப்பு வாய்ந்தது. யாவராலும் பாராட்டப்படும் கலை என்பதில் ஐயமில்லை.

உரையாடலும், ஆடலும், பாடலும் ஆகிய மூன்று செயல்களும் ஒன்று கலந்து நடிக்கப்படுவது நாடகமாகும். இதனாற்றான் நாடக நிகழ்ச்சிகள் மக்களனைவராலும் பெரிதும் விரும்பப்படுகின்றன. நாடகத்தின் சிறப்பை நன்கறிந்து, கல்விச் சாலைகளில் நாடக மேடையை ஓர் அறிய போதனைக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர். தகுதி வாய்ந்த மாணவர்களைச் சேர்த்து, பயிற்சியளித்து, பாடப் பகுதிகளை நாடகங்களாக நடிக்கச் செய்வதால் அவை பசுமரத்தாணிபோல் நடிப்போர் உள்ளத்திலும், காண்போர் மனத்திலும் ஆழப் பதியும்.

எனவே, மாணவர் மாணவிகளாகிய நீங்கள் அறிவுக் கலைகளைக் கற்றுத் தேர்ச்சிப் பெறுவது மன்றி, அழகுக் கலைகளையும் பயின்று உயரிய திறமை பெற்றுத் திகழ்தல் வேண்டும். அவ்வாறு செய்தாற்றான் கல்வியின் முழுப்

பயனை எய்துவீர்கள். மேலும், நீவிர் அழகுக் கலைகளில் ஆர்வங்கொண்டு, அவைகளை நம் நாட்டில் தழைத்தோங்கச் செய்ய முற்படுவீர்களாக!

## பயிற்சி

**[அழகுக் கலைகளின் சிறப்பை உணர்த்துவதும், அவைகளை வளர்க்கத் தூண்டுவதும் இப்பாடத்தின் இலட்சியங்காகும்.]**

**அருஞ்சொற்கள் :** எழில் - வனப்பு, அழகு; பத்துப் பாட்டு - சங்க கால நூல் தொகுதிகளுள் ஒன்று; துய்த்தல் - அனுபவித்தல்; வலித்தல் - செலுத்தல்; வழுத்துதல் - துதித்தல்; நாதம் - ஒலி; துகில் - துணி; தூரிகை - எழுதுகோல்; கவின் - அழகு; நுண்மாண் நுழைபுலம் - நுண்ணிய பொருள்களிடத்தும் நுழைந்து பார்க்கக்கூடிய நுண்ணறிவு; இறைவன் திருமாளிகை - கோயில்.

கருத்துணர்தல் :

1. நாகரிகப் பண்பாடுகள் அனைத்தும் பொருந்திய நாடு என எதனைக் கூறுதல் வேண்டும்?

2, அறிவுக்கலை, அழகுக்கலை இவற்றின் வேறுபாடு யாது?

3. நம் நாடு இசைக்கலையில் தலைசிறந்ததென்பதை எதனால் அறியலாம்?

4 ஓவியக்கலையின் சிறப்பியல்புகளை வரைக.

5. தமிழகம் சிற்பக் கலையில் சிறந்துள்ள நாடு என்பதனைச் சான்று காட்டி விளக்குக.

6 நாடகக் கலையின் மேன்மையைக் குறிப்பிடுக.

கட்டுரை :

நீ பார்த்து வந்துள்ள ஒரு பழமையான கோயிலின் சிற்பச் சிறப்பினை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

## 15. தாயின் மணிக்கொடி

சுதந்திரம் வாய்க்கப் பெற்ற ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தனிக்கொடி உண்டு. அக்கொடி அந்நாட்டின் நற் பண்புகளையும், இலட்சியங்களையும் புலப்படுத்தும் சின்ன மாகும். அது தேசமக்களிடை ஒற்றுமையையும் நாட்டுப் பற்றையும் வளர்க்குந் தன்மையது. ஒரு நாட்டின் கொடி துகில் அல்லது காகிதத்தால் அமைக்கப்பட்டபோதிலும் அளவில்லா உணர்ச்சியும் உயிரும் பெற்றுத் திகழ்வதாகக் கருதப்படும். ஆதலால், அனைவரும் அதற்கு நன்மதிப்பளித்து, அதை நாட்டின் உயிர்நிலைபோல் போற்றுவர். போர்க்காலங்களில் நாட்டின் கொடியைத் தாங்கிச் செல்வதால் படைஞர்கள் வீரம் ஊட்டப் பெற்று, அதைக் காக்கச் சமர் புரிவர்; உயிரையுங் கொடுப்பர். அமைதி நிலவும்பொழுது தேசீயக் கொண்டாட்டங்களில் அரசாங்கக் கட்டடங்களிலும், ஏனைய அலுவல் நிலையங் களிலும், கல்விச்சாலைகளிலும், பிற சிறப்பான இடங்களி லும் நாட்டுக்கொடியை உன்னதக் கம்பங்களில் உயரத் தூக்கிப் பறக்கவிட்டு வணக்கஞ் செலுத்துவது மரபு. சிறியோரும் பெரியோரும் சின்னஞ்சிறு கொடிகளைத் தமது ஆடைகளைத் தாங்கிப் பெருமிதங்கொள்வர்.

பாரதப் போரில் அருச்சுனன் அனுமக் கொடி யையும், துரியோதனன் அரவக் கொடியையும் தாங்கிச் சென்றதாகப் பழைய வரலாறுகள் கூறுகின்றன. சேவற்கொடி முருகக் கடவுளுக்கு உரித்தானது என்பர். பண்டைத் தமிழகத்தில் சேர, சோழ பாண்டியர்கள் முறையே விற்கொடியையும், புலிக்கொடியையும், கயற் கொடியையும் தமது கொடிகளாகக் கொண்டிருந்தனர்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், 15-ம் நாள் நமது பாரதத் தாய் அந்நியரின் ஆதிக்கத்தினின்று விடுதலை பெற்று முழுச் சுதந்திரமடைந்த நன்னாளாகும். அப் பொன்னாள் முதல் அசோகச் சக்கரம் பொறித்த மூன்னிறக் கொடி இந்தியாவின் அரசியல் சின்னமாக அங்கீகரிக்கப் பட்டு நமது நாடெங்கும் பட்டொளி வீசிப் பறந்து வருகின்றது. புதிய அரசியலமைப்புத் திட்டத்தின்படி நம் இந்தியா குடியரசாக மலர்ந்த 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் நாள் முதல் அம்மூவர்ணக் கொடியே இந்தியத் தாயின் மணிக்கொடியாக மிளிர்கிறது.

நமது பாரத நாட்டுக்கென்று ஒரு கொடியை முதன் முதல் உருவாக்கிக் கொடுத்தவர் திருமதி காமா என்னும் பார்ஸி மாது ஆவார். 1906-ம் ஆண்டில் உருவாகிய இக் கொடி மேலே காவி நிறப் பட்டை, கீழே பச்சை நிறப்பட்டை, இடையே வெண்மை நிறப் பட்டை என மூவர்ணம் கொண்டது. வெண்மைப் பகுதியில் 'தாய் நாட்டுக்கு வணக்கம்' என்று பொருள்படும், 'வந்தே மாதரம்' என்னும் சொல் இந்தி மொழியில் வரையப் பட்டிருந்தது.




1916 ம் ஆண்டில் டாக்டர் அன்னி பெஸண்டு அம்மையார் ஒரு கொடியை அமைத்தளித்தார். இதில் ஐந்து செந்நிறப் பட்டைகள் மாறி மாறி இருந்தன. இதன் இடப்புறம் தலைப்பில் ஆங்கிலேயரது கொடியின் சின்னமும் இடம் பெற்றிருந்தமையால் இது பலராலும் புறக்கணிக்கப் பட்டது.



காந்தியடிகள் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து தலைமை வகித்து அதற்குப் புத்துயிரும் புதிய விழிப்பும் அளிக்கலானார். அவர் 1921-ம் ஆண்டில் விஜயவாடாவில் நடைபெற்ற காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தில் வெண்மை நிற மேற்பட்டையும், பச்சை நிற நடுப்பட்டையும், காவி நிறக் கீழ்ப்பட்டையுமாக ஒரு கொடியமைத்து வழங்கினார். மூன்று பட்டைகளையும் தொடும் இராட்டினம் ஒன்று அதிற் பொறிக்கப்பட்டிருந்தது. அக்கொடி காங்கிரஸ் கட்சிக் கொடியாக அவையினர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். பின்னர், அந்நிய ஆங்கிலேய ஆட்சியுடன், ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கி உத்தமர் காந்தி கத்தியின்றி ரத்தமின்றி புதியதொரு முறையில் அறப்போர் தொடுத்தபொழுது பல்லாயிரக் கணக்கான ஆடவரும் மகளிரும் இம்மூவர்ணக் கொடியை ஏந்தி அப்போரில் ஈடுபட்டனர்.



பத்து ஆண்டுகட்குப் பிறகு 1931-ல் இக்கொடி சிறிது மாற்றியமைக்கப்பட்டது. அஃதாவது, மேலே செந்நிறமும், இடையில் வெண்ணிறமும், கீழே பசுமை நிறமும் இருக்குமாறு அமைத்து, இடையிலுள்ள வெண்மை நிறத்தில் மட்டும் இராட்டை பொலிவு பெறப் பொறிக்கப்பட்டது. 1947-ஆம் ஆண்டில் மேற்கூறிய முந்நிறக் கொடி காங்கிரஸ் கட்சிக் கொடியாக இராமல் சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடியாக அங்கீகரிக்கப்பட்டபோது இராட்டைக்குப் பதிலாக அசோகச்



சக்கரத்தின் உருவம் நீல நிறத்தில் பொறிக்கப்பட்டது. அவ்வாறு செய்ததால் அக்கொடியின் இரு புறத்திலும் ஒரேவித உருவம் ஏற்படலாயிற்று. அஹிம்சா நெறியைக் கடைப்பிடித்த அசோகர் சாரநாத் என்னும் நகரத்தில் நாட்டிய கல் தூணிலே செதுக்கியுள்ள சக்கரமே நமது மூந் நிறக் கொடியிற் காணும் சக்கரமாகும்.

நமது இந்தியத் தாய் முழுச் சுதந்திரம் பெறும் பொருட்டு, மகாத்மா காந்தியின் தலைமையில் நமது நாட்டு மக்கள் நடத்திய துன்பமிழைக்காப் போராட்டத்தின்



வரலாற்றை அறிவுறுத்துகின்றது இக்கொடி. இது பொழுது அது நமது வெற்றிக் கொடியாக விளங்கு கின்றது. இந்தியாவின் பண்பாட்டுக்குகந்த சின்னமாக நடுவண் அமைந்துள்ள சக்கரம் துலங்குகின்றது. ஓயாது சுழன்றுகொண்டிருக்கும் அற ஆழியை அச்சக்கரம் குறிப் பிடுவதாக அறிஞர்கள் கருதுகின்றார்கள். கொடியிலுள்ள செம்மை நிறம் தியாகத்தையும் தைரியத்தையும் குறிக்கும்; வெண்மை நிறம் உண்மையையும் தூய்மையையும்

உணர்த்தும்; பசுமை நிறம் அன்பையும் ஆற்றலையும் புலப் படுத்தும். இவ்வாறு நமது தேசீயக் கொடி அரிய உட் கருத்துக்கள் பொதிந்ததாகும்.

இந்தியக் குடியரசின் முதன் மந்திரியாகிய உயர்திரு. ஜவாஹர்லால் நேரு நமது தேசீயக் கொடியைப் பற்றி விவரிக்கும்போது, "நமது சுதந்திரக் கொடி நம்மவரின் சுதந்திரத்திற்கு மட்டுமின்றி, அதைக் கண்ணுறும் எல்லோருடைய சுதந்திரத்திற்கும் அறிகுறியாக விளங்குகின்றது. எங்கெங்கே இந்தியர் வாழுகின்றனரோ, எங்கெங்கே நம் அரசியல் தூதர்கள் தங்குகின்றனரோ, எங்கெங்கே நம் நாட்டுக் கப்பல்கள் செல்லுகின்றனவோ அங்கெல்லாம் நமது தாயின் மணிக்கொடி செல்லும். அது போகுமிடங் களிலெல்லாம் சுதந்திரம், தோழமை என்ற சீரிய பண்புகளைப் பரப்பும்; உலகிலுள்ள ஒவ்வொரு தேசத் துடனும் நேசமாயிருக்க இந்தியா விரும்புவதைத் தெரி விக்கும். சுதந்திரத்தை நாடும் எல்லா நாடுகளுக்கும் இந்தியா உதவியளிக்கும் என்ற நற்செய்தியை நமது கொடி பறை சாற்றும்" எனக் கூறியுள்ளார்.

நமது நாட்டுக் கொடியை நன்மதிப்புடனும் மரியாதையுடனும் உபயோகிப்பது நமது கடமையாகும். கண்டவிடங்களிலும், கண்ட தருணங்களிலும் அதைப் பறக்கவிடுவது அதன் மதிப்பைக் குறைப்பதாகும். நமது சுதந்திர வாழ்வுக்கு ஓர் அறிகுறியாக விளங்கும் நம் தாயின் மணிக் கொடியைப் போற்றிப் பணிந்திடுவோமாக.

**"காற்றெடு பெருமழைக் கலந்தடித் தாலும்**
**கடுத்தவர் இருந்திடில் படையெடுத்தாலும்**
**போற்றிஇக் கொடியினை உயிரெனக் காப்போம்**
**பூதலம் வியந்திடும் புகழொடு பூப்போம்"**

*—அரசவைக் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை*

## பயிற்சி

[நமது நாட்டுக் கொடியைப் பற்றிய இப்பாடம் தேசப் பற்று ஊட்டவல்லது.]

அருஞ்சொற்கள்: கயல் - மீன்; துன்பமிழைக்காப்போர் - அஹிம்சைப் போர்; அற ஆழி - தருமச் சக்கரம்.

கருத்துணர்தல்:

1. பண்டைய தமிழ் நாட்டின் கொடிகள் எவை?

2. இந்தியக் குடியரசின் முந்நிறக்கொடியமைப்பின் உட் கருத்தை விளக்குக.

3. நமது முதல் மந்திரி நம் கொடியைப் பற்றி யாது கூறியுள்ளார்?

கட்டுரை:

நம் நாட்டுக் கொடி தோன்றி வளர்ந்து உருப்பெற்ற வரலாற்றினைக் கூறுக.

## 16. ஊன்றிக் கருத்துணர்தல்

ஊன்றிப் படித்து விடை கண்டறிக:

1. மலர்கள் எவ்வெவ் விதங்களில் நமக்கு மகிழ்ச்சி யளிக்கின்றன?
2. பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையோடியைந்து எவ்வாறு இன்ப வாழ்க்கை நடத்தினர்?
3. நானிலங்கள் எவை? அந்நிலங்களின் பெயர்கள் எவ்வாறு பெறப்படுகின்றன?
4. வனவிழா பற்றி நமது கடமை யாது?

இயற்கைப் பொருள்களின் வனப்பினை இனிது கண்டு மகிழ்தற்கு உகந்த இடம் பூம்பொழிலாகும். பூம்பொழி லென்பது அழகிய பூக்கள் நிறைந்த சோலையே. புட்பங்கள் காட்சிக்கு இனிய எழிலும், மோத்தற்கு நறிய மணமும், தொடுதற்குத் தண்ணிய மென்மையும் பயக்கின்றன. பூக்களை மலர்த்துவதற்கு வண்டுகள் செய்கின்ற ரீங்காரம் செவிக்கு இன்னோசை பயக்கும். பூக்களினின்றும் ஊறும் தேன், நாவிற்கு இன்சுவை தரும்.

மக்களுக்குள் நாகரிகம் பெருகி, மாட மாளிகை கூடகோபுரங்கள் கட்டப்படுவதற்கு முன்னே, பூங்காக் களிலே அவர்கள் வதிந்தனர். தழையினலே வீடுகள் அமைத்து, இலையினலே உடைகள் பின்னி, பூக்களினலே அலங்காரஞ் செய்துகொண்டு, கொடிகளிலே ஊஞ்சலாடி யும், குயிலோடு மாறு கூவியும், மயிலோடு மாருடியும், மான்களோடு குதித்துக் குலாவியும், பன்னிற மலர்கள் கொய்தும் இயற்கை வனப்பினை முற்றும் நுகர்ந்து இன்ப வாழ்க்கையினை நடத்தினர்.

பண்டைத் தமிழர் நிலங்களை நால்வகையாகப் பகுத்த காலையில், அவற்றிற்குரிய பெயரை அங்கங்கே காணப்படும் பூக்களினின்றும் அமைத்தனர். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலமெனப்படும். குறிஞ்சியென்பது மலைக்கண் மிகுதியாகக் காணப்படும் ஒரு வகைக் கோட்டுப் பூ. அப் பூவின் பெயரையே அதற்கிடமாகிய நிலத்துக்கு இட்டு வழங்கினர். இவ்வாறே முல்லையென்னும் கொடிப் பூ மிகுதியாகக் காணப்படும் காடும் காடு சார்ந்ததுமாகிய நிலத்தினை முல்லையென்றும், மருதம் என்னும் கோட்டுப் பூ மிகுதியாகக் காணப்படும் வயலும் வயல் சார்ந்ததுமாகிய நிலத்தினை மருதமென்றும், நெய்தலென்னும் நீர்ப் பூ மிகுதியாகக் காணப்படும் கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நிலத்தினை நெய்தலென்றும் வழங்கினர்.

மலர்களைச் சிறந்த மங்கலப் பொருள்களாக மக்கள் மதிக்கின்றனர். மகிழ்ச்சி மிக்க போதெல்லாம் மலர் சூடுவதும், பூமாலை யணிவதும் இந்நாட்டில் சிறப்பாக நிகழ்தல் யாவருமறிந்ததே. மலர் தூவித் தெய்வத்தினை வழிபடுதல் நாடோறும் நடக்கின்ற நம்மவர் செய்கை யன்றோ? ஒவ்வொரு கோயிலைச் சுற்றியாதல், அதற்கு அண்மையிலாதல் நந்தவனங்களை வைத்துப் பாதுகாத்தல் கடவுளுக்குச் செய்யும் திருப்பணிகளுள் ஒன்றாகக் கருதப் படுகின்றது. தற்காலத்தில் அரசாங்கத்தாரும் சிங்காரத் தோட்டங்களை மாநகர்களில் அமைத்துப் பராமரித்து வருகிறார்கள்.

நமது மனைகளிலும், குளக்கரைகளிலும், கோயில் அருகிலும் பூம்பொழில்களை யமைத்து வளர்த்துப் பாதுகாப்பது பயனுடைய ஒரு பணியேயாகும்.

நமது அரசியலார் வருடந்தோறும் புதிய மரஞ் செடிகள் நடுவதை ஒரு விழாவாக நாடெங்கும் கொண்டாட ஏற்பாடு செய்து வருவது பாராட்டத் தக்கதாகும். அவ்வித வன விழாவில் மாணவர்களும் ஈடுபட்டு மரஞ் செடிகளை வைத்து வளர்ப்பதைத் தேசப் பணியாக மேற்கொள்வது விரும்பத்தக்கதே.

---

# 17. சியவன முனிவர்

**படித்துக் கதை சொல்லல் :**

**வகுப்பிலுள்ள மாணவர் எல்லோரும் இந்தக் கதையைப் பத்து நிமிடத்துக்குள் மௌனமாகப் படிக்கவும். புத்தகத்தை மூடிக் கீழே வைத்துவிட்டு முதலில் ஒரு மாணவன் கதையை ஆரம்பித்துத் தனது சொந்த வார்த்தைகளில் ஒரு வாக்கியம் சொல்ல வேண்டும். அடுத்த மாணவன் அந்த வாக்கியத்தை யொட்டி இன்னொரு வாக்கியம் சொல்லவேண்டும். இப்படியே ஒவ்வொரு பையனும் வரிசையாகச் சொல்லிக் கதையை முடிக்கலாம்.**

நிலவளம் நீர்வளம் மிக்க கோசல நாட்டின்கண் எவ்வகை உறுப்புக்களும் ஒருங்கு நிறைந்த அயோத்தி மாநகரத்திலே சரியாதி என்ற மன்னன் செங்கோல் செலுத்தி வந்தான். அம்மன்னனுக்குச் சுகன்னி என்னும் பெயர் படைத்த ஒரே ஒரு புதல்வி இருந்தனள்.

அவனுடைய அரண்மனைக்கு அண்டையிலிருந்த சந்தனம், பாதிரி, வேங்கை, மகிழ், சண்பகம் முதலிய தாவரங்களடர்ந்த ஒரு பூஞ்சோலையின் நடுவண் அழகிய தாமரைத் தடாக மொன்றிருந்தது. அப்பொழிலின் ஒரு மருங்கில் சியவனர் என்ற முனிவர் நெடுநாளாகத் தவங் கிடந்தனர். அவர் அசைவின்றி இருந்தமையால், அவர்மீது ஒரு புற்று வளர்ந்து மூடி, அவரிருந்த இடம் தெரியாமற் செய்து விட்டது.

ஒரு நாள் சரியாதி மன்னன் தன் மனைவிகளுடனும் தன் அருமைப் புதல்வியுடனும் பூங்காவில் உலாவி வந்தபோது, சுகன்னி அங்குள்ள புற்றின் அருகே சென்று அதனுள் மெல்லிய ஓசை கேட்கப்பெற்று, அப்புற்றினுள்

யாது இருப்பதென்று அறிய விரும்பி, ஒரு முள்ளை எடுத்து அதனுட் புகுத்தினள். முள்ளை வெளியே எடுத்தபோது அதன் நுனியில் குருதி படிந்திருந்தமையால், அதனுள்ளிருக்கும் உயிர் ஒன்றினைத் தான் துன்புறுத்தியதாகக் கருதி வருத்தமுற்றனள்.

பின்னர், சுகன்னியும் மன்னனும் பிறரும் அரண்மனைக்கு மீண்டனர். மீண்டது முதல் அரண்மனையில் உள்ள யாவரும் வாத நோய் கண்டு நகர முடியாமல் வருந்தினர்.

வேந்தன் அமைச்சர்களை அழைத்து, அதற்குக் காரணம் வினவியகாலை அவர்கள் பொழிலகத்தே தவங் கிடக்குஞ் சியவன முனிவருக்கு யாராவது இன்னல் விளைவித்திருக்க வேண்டுமென்று இயம்பினர். அங்ஙனம் யார் செய்திருத்தல் கூடுமென்று மன்னன் கேட்கவும், வேலைக்காரர்கள் அனைவரும் தாங்கள் தீங்கு யாதுஞ் செய்யவில்லை யென்று கூறினர். அதுபொழுது சுகன்னி அரசன்பாற் சென்று, புற்றினைத் தான் முள்ளால் குத்தியதைத் தெரிவித்தாள். உடனே அரசன் புற்றை மெதுவாகப் பிரித்து அங்கிருந்த சியவன முனிவரை வணங்கி, அரண்மனையிலிருந்த மக்களுடைய நோயைத் தீர்க்கவேண்டுமென்று வேண்டினன். முனிவர், "அரசனே! முள்ளால் குத்தப்பட்ட என் கண் குருடாகி விட்டது. ஆயினும், அக் குற்றத்தை நான் பொறுத்துக்கொள்கிறேன். உன் புதல்வியாகிய சுகன்னியை எனக்கு மணம்புரிவித்து எனக்குப் பணிவிடை செய்வித்தால் உங்களது இன்னல் தீரும்" என்றனர். மன்னன் தனது செல்வப் புதல்வியைக் குருடராயும் கிழவராயுமிருந்த சியவன முனிவருக்கு மனைவியாகக் கொடுப்பதற்கு மனம் இசையப்பெறாது வருந்தினன்.

ஆனால் அவ்வாறு செய்யாது, தன்னைச் சார்ந்தவர்கள் படுந் துன்பத்தை நிவர்த்திசெய்ய இயலவில்லை. அத் தருணத்தில் சுகன்னி தான்செய்த குற்றத்திற்குத் தானே தண்டனை பெறுதல் தகுதி என்றெண்ணித் தன்னை முனிவருக்கு மணம்புரிவிக்குமாறு தந்தையை வேண்டி, அவ்வாறே செய்யப்பெற்று முனிவரின் இல்லக்கிழத்தியாயினள்.

பின்னர், சியவனரும் சுகன்னியும் கானகம் சென்று ஓர் ஆசிரமத்தில் தங்கினர். கற்பரசியாகிய சுகன்னி, தன் கணவரை ஒரு சிறிதும் இகழாது முழு அன்போடு அவர்க்குப் பணிவிடை யாற்றிவந்தாள். அவளது கற்பினை விண்ணவரும் வியந்தனர்.

தேவ மருத்துவர்களாகிய அசுவினி தேவர்களென்பார் சுகன்னியின் உருவழகினைக் கேள்வியுற்று, மானிட இளைஞர் வடிவங்கொண்டு அவள்முன் தோன்றி, "எழில் வாய்ந்த நீ, காட்டில் மரவுரி தரித்துக் கண்தெரியாத கிழ முனிவரின் பத்தினியாய் இருப்பதால் பயனென்னை ? எங்களுடன் போந்தால் சுகமாக வாழலாமே" என்றியம்பினர். சுகன்னி அவர்களது தீய சொற்களைக் கேட்டு உள்ளம் பதைத்து, உடல் நடுங்கி, "நீங்கள் சொல்வது பெருங் குற்றமென்பதை அறியீர்களோ ? மரியாதையுடன் போகாவிட்டால் நீங்கள் கெட்டொழிவீர்கள்" என்று சினந்து கூறினாள். அப்போது அவர்கள் அவளது கற்பைச் சோதிக்கவே தாங்கள் வந்ததாகவும், தங்களுக்குக் கெடுதற் சித்தமில்லையெனவும் கூறி, அவள் கணவரை அவளுக்கேற்ற இளைஞராக மாற்றும் ஆற்றல் தங்களுக்கிருப்பதாகத் தெரிவித்தார்கள். அவர்கள் கருத்தினை அவள் சியவன முனிவருக்கு அறிவித்தாள். அவர் அதற்கிசைந்து, அவர்களை அழைத்துவரும்படி கூறினர். அசுவினி தேவ

ரிருவரும் சியவனமுனிவர் ஆசிரமத்துக்குச் சென்று, அவரியற்றிய வந்தனை வழிபாடுகளை ஏற்றுக்கொண்டு, அவரை ஒரு தடாகத்திற்கு அழைத்துப் போய் அவரோடு தாமும் அதில் மூழ்கினர். மூழ்கி எழுந்தவுடன் மூவரும் அழகுமிக்க இளைஞர்களாகக் காணப்பட்டார்கள். மூவருக்கும் யாதோர் உருவ வேறுபாடும் தோன்ருமையால் சுகன்னி மிகுந்த மனக்கலக்கமுற்றனள். பின்பு அவள் தன் வழிபடு தெய்வத்தை நினைத்துத் துதித்துத் தன் கற்பு உண்மையாய் இருந்தால் தான் விட்டெறியும் அலங்கல் தன் கணவன் கழுத்திலேயே விழவேண்டுமென்று வேண்டிக் கொண்டு, ஒரு மலர் மாலையினைச் சுழற்றி எறிந்தாள். அது சியவன முனிவரின் கழுத்திலேயே விழுந்தது. அதனைக் கண்ட அசுவினிதேவர்கள், சுகன்னியின் அருங் கற்பைப் பாராட்டித் தம்முலகு ஏகினர். அவள் அளவற்ற மகிழ்ச்சியடைந்து, இளமை பெற்ற தன் கணவரோடு அயோத்தி சென்று, தந்தையரால் குதுகலத்தோடும் பெருங்களிப்போடும் வரவேற்கப்பெற்று இன்ப வாழ்க்கை நடத்தினள். இன்றும் இளமை கொடுக்கும் மருந்தொன்று சியவனப் பிராசம் என்ற பெயரோடு வழங்குகிறது.

## பயிற்சி

[இது பாகவத புராணத்திலுள்ள ஓர் இனிய கதை]

அருஞ்சொற்கள்: பொழில்-சோலை; மருங்கு-பக்கம், குருதி-இரத்தம்; இல்லக்கிழத்தி - மனைவி; மரவுரி - மரப் பட்டையால் செய்த ஒருவகை ஆடை.

கருத்துணர்தல்:

1. *சுகன்னியின் தன்னலமின்மை எதனுல் அறியப் படுகிறது?*
2. *சுகன்னியின் கற்பு எதனுல் புலப்படுகிறது?*
3. *அசுவினி தேவர்கள் யாவர்? அவர்கள் சியவன முனிவருக்குச் செய்த நன்மை யாது?*

# செய்யுட் பகுதி

## I. துதி மலர்

### கடவுள் வணக்கம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

—சேக்கிழார்

### தேவாரம்

நன்றுடை யானைத் தீயதில் லானை நரைவெள்ஏ(று)
ஒன்றுடை யானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே. 2

—திருஞானசம்பந்தர்

### திவ்யப் பிரபந்தம்

பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்;
அரங்கமா நகரு ளானே! 3

—தொண்டரடிப்பொடியாழ்வார்

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே
காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞானத்
தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே
மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே
நாககிரிப் பெருமாளே! 4

—அருணகிரிநாதர்

### ஏசுநாதர்

அன்பு நெறி சிறந்ததென
அகிலமுணர்ந் துய்ய
ஆண்டவனே! என் செய்தாய்!
அதைநினைத்தால் அந்தோ!
என்புருகும்; உயிருருகும்;
எண்ணமெலாம் உருகும்;
எம்மொழியால் இயம்பவல்லேன்
ஏழைமகன் அப்பா!
மண்ணுலகில் அவதரித்தாய்;
மக்களிடை வதிந்தாய்;
மறைமொழிந்தாய்; அவ்வளவில்
மனம் நிறைய இலேயோ?
பொன்னுடலை வதைத்துவிட்டாய்;
பொலியுயிரை நீத்தாய்;
பொறைஅன்பு நீஎன்னும்
பொருண்மைதெளிந் தேனே. 5

—திரு. வி. கலியாணசுந்தரனார்

## நாட்டு வாழ்த்து

ஓங்குநல் அறிவுச் செல்வம்,
உறுதிசெய் வீரச் செல்வம்,
தீங்கறு தொண்டுச் செல்வம்,
செய்திருத் தொழிலின் செல்வம்,
தூங்கறு முயற்சிச் செல்வம்,
துகளறு புகழின் செல்வம்,
பாங்குற நிலவி இந்தப்
பாரத தேசம் வாழ்க! 6

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

---

# II. நீதி மலர்

## 1. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 1

#### இன்பந்தருவது

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. 2

#### மக்கட் பேறு

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 3

#### அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 4

### உயிர் நிலைத்துள்ள இடம்

அன்பின் வழிய(து) உயிர்நிலை; அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு. 5

### சிறந்த அணிகலம்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு)
அணி; அல்ல மற்றுப் பிற. 6

### உலகத்திற் பெரியது

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 7

### அடக்கமுடைமை

எல்லார்க்கும் நன்றாம் பணிதல், அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 8

### ஒழுக்கமுடைமை

ஒழுக்க முடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 9

### மேன்மையும் பழியும்

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 10

### அழியாப் புகழுடையார்

ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம்: பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 11

### அழுக்காறுமை

அழுக்கா(று) எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 12

### தீவினை அச்சம்

இலனென்று தீயவை செய்யற்க; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 13

### ஒப்புறவு அறிதல்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். 14

### ஈகை

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்? தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 15

### புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு. 16

### கள்ளாமை

உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 17

### வாய்மை

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 18

### வெகுளாமை

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனால் வரும். 19

### இன்னா செய்யாமை

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 20

### அரசரின் இயல்பு

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்(கு) இயல்பு. 21

### கண்ணுடையவர்

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 22

### கற்றலின் பயன்

தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்(து) ஊறும் அறிவு. 23

### கேள்வி

எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 24

### அறிவுடைமை

அறிவுடையார் ஆவ(து) அறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 25

### குற்றங் கடிதல்

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு. 26

### பெரியாரைத் துணைக்கோடல்

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 27

### சிற்றினஞ் சேராமை

மனத்தானும் மாந்தர்க்(கு) உணர்ச்சி, இனத்தானும்
இன்னான் எனப்படுஞ் சொல். 28

### வலியறிதல்

பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 29

### காலமறிதல்

கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்தவிடத்து. 30

### இடனறிதல்

நெடும்புனலுள் வெல்லும் முதலை, அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 31

## தெரிந்து தெளிதல்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 32

## செங்கோன்மை

வேலன்று வென்றி தருவது; மன்னவன்
கோல்; அதூஉங் கோடா(து) எனின். 33

## ஊக்கமுடைமை

உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 34

## மடியின்மை

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும். 35

## ஆள்வினையுடைமை

அருமை உடைத்தென்(று) அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 36

## இடுக்கண் அழியாமை

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 37

## அமைச்சு

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட தமைச்சு. 38

## வினைத் தூய்மை

பழிமலைந்(து) எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. 39

## வினைத்திட்பம்

எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 40

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 41

நாடு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 42

நட்பு

நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 43

நட்பாராய்தல்

மருவுக மாசற்றார் கேண்மை; யொன் றீத்தும்
ஒருவுக ஒப்பில்லார் நட்பு. 44

குடிமை

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 45

மானம்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 46

பெருமை

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 47

சான்றாண்மை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண். 48

குடிசெயல் வகை

குற்றம் இலனாய் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 49

உழவரின் சிறப்பு

இரவார்; இரப்பார்க்கொன்(று) ஈவர்; கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 50

—திருவள்ளுவர்

## 2. நன்னெறி

### பிறர்க்குதவி

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் — பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 1

### கல்விச் செருக்கு

கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி — விடலே;
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 2

### தன்னைப்போல் பிறரை நினைத்தல்

பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவ ரென்க — தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 3

### கைம்மாறு வேண்டாமை

கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் — அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. 4

### பெரியர் சிறியரின் இயல்பு

முனிவினும் நல்குவர் மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் — நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான்; எட்டிபழுத்
தாயினும் ஆமோ? அறை. 5

—சிவப்பிரகாச சுவாமிகள்

# 3. திரிகடுகம்

### உண்மைச் சுற்றம்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்;
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 1

### நல்வினையைக் கட்டும் கயிறு

தானம் கொடுக்கும் தகைமையும் மானத்தால்
குற்றம் கடிந்த ஒழுக்கமும் — தெற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்கும் கயிறு. 2

### உமியைக் குத்திக் கைவருந்துபவர்

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்
இல்லது காமுற்(று) இருப்பானும் — கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப்பானும் இம்மூவர்
உமிகுத்திக் கைவருந்து வார். 3

### செல்வம் உடைக்கும் படை

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் — முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 4

### பிறந்தும் பிறவாதவர்

அருளினை நெஞ்சத்(து) அடைகொடா தானும்
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்
இறந்தின்னா சொல்லகிற் பானும் இம்மூவர்
பிறந்தும் பிறந்திலா தார். 5

—நல்லாதனார்

# 4. சதகம்

## 1. ஈயாதார் வாழ்வு

கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்
        கனிகள்உப காரமாகும்
சிட்டரும்அவ் வணம்தேடும் பொருளையெல்லாம்
        இரப்பவர்க்கே ஈந்து வாழ்வார்
மட்டுலவும் சடையாரே தண்டலையா
        ரேசொன்னேன் வனங்கள் தோறும்
எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதார்
        வாழ்ந்தாலும் என்உண் டாமே!

—தண்டலையார் சதகம்

## 2. செய்யவேண்டாதன

பெற்றதாய் தந்தைகள் சுற்றமே முதலான
        பெரியோரை முனிதல் வேண்டா;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
        பேர்கொண்டு திரிதல் வேண்டா;
உற்றவர்கள் போல்உட் பகையான வஞ்சகரை
        ஒருநாளும் நம்பல் வேண்டா;
ஒருவருக்கு இச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
        ஊமைபோல் நிற்றல் வேண்டா;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
        தான்போய் விலக்கல் வேண்டா;
தைரியந் தனில்விக்கிர மாதித்தன் என்னினும்
        தன்னையே புகழ்தல் வேண்டா;
மற்றென்றும் எண்ணாது செய்யல்வேண் டாமென்பர்
        மணவாள நாரா யணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே!
        வரதவேங் கடராயனே!

—திருவேங்கட சதகம்

# III. கதை மலர்

## 1. விருந்தோம்பல்

[பஞ்சதந்திரம்]

வனம்ஒன்றில் ஒருவேடன் வளர்குருவிக் கூட்டினொடும்
இனம்ஒன்று வேட்டைக்கரு விகளும்எடுத் தேதிரியக்
கனம்இருண்டு மழைபெய்யக் காற்றெழும்ப அவன்நடுங்கி
மனம்மருண்டோர் மரத்தின்கீழ் வந்திருந்தான் அப்போது. 1

தங்கும்அதன் மேல்இருந்த புருவொன்று தன்பேட்டை,
"எங்ககன்ற தோ?வனத்தில் யாரேனும் பிடித்தாரோ?
மங்கியதோ?" எனப்புகல, அதுகேட்டு வனசரன்தன்
அங்கையுறு கூட்டினுற்ற பெண்புரு அழுதுசொல்லும்: 2

'முன்வினையால் இதுபெற்றேன்; ஆயினும்நின் முனம்அடைந்த
இன்னவனுக் குபசாரம் புரி' எனலும், எரிகொளுவி
அன்னவனை அழைத்துடலின் குளிர்போக்கி, 'ஆகாரம்
என்னைநீ அருந்தெ'ன்று வீழ்ந்திறக்க இவன்நோக்கி, 3

'அன்பினுல் நம்பொருட்டு வீழ்ந்தஇதை அருந்திடில்
துன்பம்வரும்' எனப்பேட்டை விடுத்திடலும், சூழ்ந்ததுவும்
தன்புருடன் பிரிவதனுல் வீழ்ந்திறக்கத் தகும்இரண்டும்
இன்பமுறு தெய்வவுரு எய்திவான் உலகடைந்த, 4

இரக்கமொடு வேடுவனும் எரிவீழ்ந்து கதிஅடைந்தான்
தரைக்குள்உளம் தளர்ந்துசர ணர்த்தியென்று சார்ந்தார்க்கும்
புரக்கஅருள் செயில்தாமே போன்றவரி னும்வருமென்(று)
உரைத்துப்பொன் எச்சமிடும் பறவைகதை ஓதுமால். 5

—வீரமார்த்தாண்ட தேவர்

## 2. புத்தரும் குழந்தையை இழந்த தாயும்

[மகனை இழந்த தாய் புத்தரைக் காணுதல்]

மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள்—பெண்ணின்
தெய்வமெனத் தகும் சீருடையாள் 1

ஆறாகக் கண்ணீர் வடித்து நின்றாள்—கையில்
ஆண்மக வொன்றையும் ஏந்தி நின்றாள்
தேறாத உள்ளமும் தேற்றுவிக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றி நின்றாள். 2

[புத்தர் வினவுதல்]

சந்திரமதிபோல் நின்ற தையலை நோக்கி ஐயன்
'வெந்துயர் விளைந்ததென்னை? விளம்புக எனலும், அன்னாள்
நைந்துநொந் துருகி யுள்ளம் நயனத்தின் வழியா யோட
மைந்தனைக் காட்டி இந்த மறுமொழி கூற லுற்றாள். 3

[தாயின் மறுமொழி]

சிரித்தமுக மெனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடும் அவ்வேளை
விரித்தபட மெடுத்தரவொன் றடுத்தொருகை பற்றி
விளங்குமணிக் கடகமென வளைந்துகிடந்ததுவே 4

பால்மணம்மா றாதசிறு பாலகனும் அறியான்;
படஅரவை விளையாட்டுப் பண்டமெனக் கொண்டான்;
வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து
வருத்தமெழச் சிறுகுறும்பு செய்துவிட்டான் ஐயா! 5

சிறுபொழுது சென்றிடஎன் செல்வமக னுடலில்
சீதமிகப் பரந்துணர்வு தீர்ந்துவிட்ட தையா!
நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட தையா!
நீட்டிய கால் மடங்காது நிமிர்ந்து விட்ட தையா! 6

அன்பாக அரவிட்ட சிறுமுத்த மதனல்
ஆவிக்கும் இடையூறுண்டாமோ; என் ஐயா!
வன்பாரில் மகவிழந்து வாழ்வேனே ஐயா!
மலையேறிக் குதித்துயிரை மாய்ப்பேனே ஐயா! 7

கண்டாரில் மிக்கஉளக் கனிவுடையார் ஒருவர்
'காரிகையே! மலைமீது காவியுடை அணிந்து
முண்டிதமாய் அலையுமொரு முனிவர் அடி பணிந்தால்
முடியாத காரியமும் முடியும் என உரைத்தார். 8

## வேறு

காடும் மலையுங் கடந்துவந்தேன் உம்மைக்
கண்டு துயரெலாம் போக்கவந்தேன்
வாடும் மலர்ச்செண்டு போல்கிடக்கும்—இந்த
மைந்தன் உயிரெழச் செய்யுமையா! 9

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

# IV. வருணனை மலர்

## 1. மயில்

அழகிய மயிலே! அழகிய மயிலே!
அஞ்சுகம் கொஞ்ச, அமுத கீதம்
கருங்குயில் இருந்து விருந்து செய்யக்
கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்
தென்றல் உலவச் சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத்(து) ஊன்றி அங்கம் புளகித்(து)
ஆடு கின்றாய் அழகிய மயிலே!
உனது தோகை புனையாச் சித்திரம்;
ஒளிசேர் நவமணிக் களஞ்சியம் அதுவாம்!
உள்ளக் களிப்பின் ஒளியின் கற்றை
உச்சியில் கொண்டையாய் உயர்ந்ததோ என்னவோ!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

## 2. வெண்ணிலா

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே!—ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே!
வளர்ந்து வளர்ந்துவந்த வெண்ணிலாவே!—பின்னை
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே!—நீயும்
பாரில்வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!
ஆதாரம் ஒன்றில்லாமல் வெண்ணிலாவே!—நீயும்
அந்தரத்தில் நிற்பதேனோ? வெண்ணிலாவே!
சுற்றித் திரிவதுமேன்? வெண்ணிலாவே!—உனக்குச்
சொந்தஇடம் ஒன்றிலையோ? வெண்ணிலாவே!
பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே!—உன்றன்
பக்கம்வந்து சேருவனே வெண்ணிலாவே!

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

# V. பலவகைப் பாமலர்

## 1. ஆடு ராட்டே

### பல்லவி

ஆடுராட்டே சுழன் ருடுராட்டே

### அநுபல்லவி

சுழன்று சுழன்று சுழன் ருடுராட்டே—இனி
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே (ஆடு)

### சரணங்கள்

பாபம் குறையுமென்று ஆடுராட்டே —இனிப்
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே
கோபங் குறையுமென்று ஆடுராட்டே—நல்ல
குணங்கள் மிகுந்ததென்று (ஆடு)

ஏழைகள்கண் ணீர்சொரிய மிக்கவருத்தி—பல
எத்துக்கள்செய் தேபிழைக்கும் மனிதரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினால்—அவர்
வாழ்க்கை திருந்துமென்று (ஆடு)

உழுது நெய்துபல தொழில்செய்து—பொருள்
உதவும் வாணிபமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்களெல்லாம்—இனித்
தோல்வி யடையுமென்று (ஆடு)

ஆங்கிலம் படித்தமென் றகங்கரித்து—சொந்தம்
அக்கம்பக்கம் யாரெனினும் மதியாமல்
தாங்களே பெரியரென் றிருந்ததெல்லாம்—இனித்
தலைகுனிந்தோடுமென்று (ஆடு)

அன்னியர்கள் நூல் கொடுத்து ஆடைகொடுத்து—நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப் பல காளைகள் நெய்ய—நாம்
காத்துக்கொள்வோம் மானமென்று. (ஆடு)

—அரசவைக் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

## 2. ஆடையின் பெருமை

மேலாடை யின்றிச் சபைபுகுந் தாலிந்த மேதினியோர்
நூலாயி ரம்படித் தாலும் எண்ணுர் நுவல் பாற்கடலோ
மாலான வர் அணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே.

—நையாண்டிப் புலவர்

## 3. உழவு

ஏராலே சேருக்கி, எருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமையன்றிக்
காராலே காவேரி நதியாலே காசினியில்
ஆராலே பசிதீர்வார் அகலிடத்திற் பிறந்தோரே ?

—கம்பர்

## 4. வாழ்க்கைப் பயன்

ஒன்ருகக் காண்பதே காட்சி; புலன்ஐந்தும்
வென்ருன்றன் வீரமே வீரமாம்;—என்ருலும்
சாவாமல் கற்பதே கல்வி; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

—ஔவையார்

---

# குறிப்புரை

## I. துதி மலர்

1. கடவுள் வணக்கம்: சிவபிரானைப் பற்றிய இப் பா, சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் என்னும் நூலின் முதற் செய்யுளாகும்.

சேக்கிழார்: இவரது மறு பெயர் அருண்மொழித் தேவர். சோழ நாட்டை ஆண்ட குலோத்துங்கச் சோழரின் (அனபாயர்) அமைச்சராக இருந்தவர். சிதம்பரத்தில் நடராசப் பெருமான் சந்நிதியில் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றினர். இவரது காலம் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். (12-ஆம் நூற்றாண்டு)

அருஞ்சொற்கள்: நிலவு - பிறைச் சந்திரன்; நீர் - கங்கை நதி; வேணியன் - சடையையுடைய சிவபிரான்; சிலம்பு - காலணி; உலகெலாம் மலர் அடி - உலகங்கள் எல்லாம் மலரும் சிறப்பு வாய்ந்த பாதம்.

2. தேவாரம்: தே+வாரம்; தே - தெய்வம், வாரம் - ஒருவகை இசைப்பாட்டு. சிவபிரான்மீது திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூன்று சைவ நாயன்மார்கள் பாடியுள்ள தோத்திரப் பாடல்கள் தேவாரம் எனப்படும்.

திருஞானசம்பந்தர்: பிறப்பிடம்: தஞ்சை சில்லாவிலுள்ள சீகாழி. தந்தை: சிவபாத இருதயர்; தாயார்: பகவதியார். சம்பந்தர் உமையம்மையாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றவர்; அந்தணர் மரபு; காலம் 7-ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற்கள் : நன்றுடையான் - நன்மையினை உடையவன்; தீயதில்லான் - தீமையில்லாதவன்; சென்றடையாத திரு - சென்று அடைதற்கு அரிதாகிய மோட்சச் செல்வம்; நரை - வெண்மை; ஏறு - காளை மாடு; உமை - பார்வதி; குன்று - திருச்சிரா மலை.

3. திவ்வியப் பிரபந்தம் : வைணவ அடியார்களான பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின்மீது பாடியுள்ள பாமாலைகள் திவ்வியப் பிரபந்தம் எனப்படும்.

தொண்டரடிப்பொடி ஆழ்வார் : இவர் கும்பகோணம் தாலுகாவிலுள்ள திருமண்டங்குடியில் பிறந்தவர். திருவரங்கத்தில் வாசஞ் செய்தவர். வைணவ அந்தணர்; காலம்: 9-ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற்கள் : அச்சுதன் - அழிவில்லாதவன்; திருமால்; அமரர் ஏறு - தேவர்களுக்குள் சிறந்தவன்; அரங்க மாநகர் - ஸ்ரீரங்கம்.

4. திருப்புகழ் : முருகக் கடவுள்மீது அருணகிரிநாதர் பாடியுள்ள பாடல்களின் தொகுதி திருப்புகழ் ஆகும். இவரது ஊர் திருவண்ணாமலை. காலம்: கி. பி. 15-ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற்கள் : காலன் - யமன்; காசினி - உலகம்; அரியான் - காணுதற்கரியவன்; மாதவர் - சிறந்த தவத்தினையுடையவர்; நாககிரி - திருச்செங்கோடு.

5. ஏசுநாதர் : கிறிஸ்துவ மதத்தை ஏற்படுத்தியவர் ஏசு கிருஸ்துநாதர் ஆவார். இவர் ஆசியாக் கண்டத்தில் மேற்குப் பகுதியிலுள்ள பாலஸ்தீனம் என்னும் நாட்டில் அவதரித்தவர். கடவுள் தன்மை வாய்ந்த இவர் சிலுவையில் அறையப்பட்டு உலகம் உய்யுமாறு உயிர் நீத்தவர்.

திரு. வி. கல்யாணசுந்தரனுர்: இவர் சென்னையில் வாழ்ந்து வந்தவர். சிறந்த எழுத்தாளரும் சொற்பொழிவாளரும் ஆவர். தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பொதுநலப் பணிக்கும் தமது வாழ்க்கையை உரிமைப் படுத்தியவர். சமரச சன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் செந்நெறியாளர்.

அருஞ்சொற்கள்: அகிலம் - உலகம்; என்பு - எலும்பு; மறை-வேதம், பொறை-பொறுமை; பொருண்மை - பொருள்.

6. நாட்டு வாழ்த்து: இச் செய்யுள் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியது.

கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்: *11—5—1897-ல்* சிவகங்கையில் பிறந்தவர். இவரது இயற்பெயர் வேங்கடராமன். தந்தையார் ஜடாதரர். தாயார்: காமாட்சியம்மை இவர் யோக சாதனையுள்ளவர். இவர் பல துறைகளிலும் நூல்கள் இயற்றி செந்தமிழ்ப் பணி ஆற்றி வருகிறுர்.

அருஞ்சொற்கள்: துகள் - குற்றம்; பாங்கு - அழகு.

---

## II. நீதி மலர்

1. திருக்குறள்: இது குறள் வெண்பாக்களால் ஆகிய நீதி நூல். இந்நூல் பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்ருகும். எல்லோராலும் விரும்பி ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு நூலாகும். இதனுள் 1,330 குறட்பாக்கள் அடங்கியுள்ளன. இதன் ஆசிரியர் தெய்வப் புலவர் திருவள்ளுவர் ஆவார். காலம்: கி. பி. 2-ஆம் நூற்ருண்டு என்பர்.

அருஞ்சொற்கள்: 1. தனக்கு உவமை இல்லாதான் - ஒப்புயர்வு அற்ற கடவுள். 2. புலத்த - வேறுபட்டவை, துன்பந்தருபவை. 3. உவக்கும்-மகிழ்ச்சியுறுவாள்; சான்ருேன்- கலவ கேளவகளால் சிறந்தவன். 4. கணீர் - கண்ணீர்; பூசல் தரும் - வெளிப்படுத்தும். 5. அணி - ஆபரணம். 6. உயிர் நிலை - உயிர் நின்ற உடம்பு; என்பு - எலும்பு 7. ஞாலம் - உலகம்; மாண - மிகவும். 8. பணிதல் - அடங்கியிருத்தல். தகைத்து - சிறப்பினை யுடையது. 9. குடிமை - உயர்குடிப் பிறப்பாகும்; இழுக்கம் - ஒழுக்கத்திலிருந்து தவறுதல்; 10. எய்தா - அடையத் தகுதியில்லாத. 11. ஒறுத்தார்க்கு - தண்டித்தவர்க்கு. பொறும் துணையும் - உலகம் அழியுமட்டும். 12. அழுக்காறு - பொருமை; செற்று - அழித்து; தீயுழி - நரகத்தில்; உய்த்துவிடும் - போக்கும். 13. இலன்-வறியவன்; பெயர்த்து – மீண்டும். 14. நயனுடையான் - உதவி செய்பவன். 15. ஈத்து - கொடுத்து; வன்கணவர் - அருளற்றவர். 16. இசை - புகழ்; ஊதியம் - பயன். 17. உள்ளல் - நினைத்தல் 18. பொய்யா விளக்கு - பொய்யாமையாகிய விளக்கு. 19. வெகுளி - கோபம்; திய - தீமைகள். 20 இன்ன - துன்பம். 21. அஞ்சாமை - மனவுறுதி, எஞ்சாமை - இடைவிடாது நிற்றல். 22. என்பவர் - என்று சிறப்பித்துக் கூறப்படுபவர். 23. தொட்டனைத்து - தோண்டிய அளவாக. 24. எனைத்து ஆனும் - மிகச்சிறிய அளவினதாஞலும்; ஆன்ற-நிறைந்த. 25. ஆவது - வரக்கடவது; அஃது - அவ்வரக் கடவது. 26. இறை-அரசன். 27. தமர் ஆ-சிறந்த துணைவர் ஆகும்படி. 28. இன்னன் - இப்படிப்பட்டவன். 29. பீலி - மயிற்ருேகை;

சாகாடு-வண்டி; இறும்-முறியும்; சால - மிகவும் (உரிச்சொல்); பெயின்-ஏற்றினால். 30. ஒக்க-ஒத்திருக்க; கூம்பும் பருவம்-காலமல்லாத காலம்; சீர்த்த இடம்-சமயம் வாய்த்தபொழுது. 31. புனல்-நீர்; அடும் - கொல்லும். 32. கருமம் - காரியம்; கட்டளைக்கல் - உரைகல். 33. வென்றி - வெற்றி; கோல் - செங்கோல்; கோடாது - வளையாமல். 34. உள்ளம் - ஊக்கம். 35. மடிமை - சோம்பல்; குடிமைக்கண்-நற்குடியில் தோன்றியவனிடத்தில்; ஒன்னார்-பகைவர். 36. அசாவாமை - மனந்தளராதிருத்தல். 37. விழையான் - விரும்பாதவனாய்; இடும்பை - துன்பம். 38. வன்கண் - தொழில் செய்வதில் அசைவில்லாமை; ஆள்வினை - முயற்சி; மாண்டது - மாட்சிமைப்பட்டது. 39 மலைந்து - மேற்கொண்டு; கழிநல்குரவு - மிகுந்த வறுமை. 40. திண்ணியர்-மன வலிமையுடையவர். 41. பளிங்கு-கண்ணாடி; கடுத்தது - மிகுந்துள்ள குணம். 42. தள்ளா - குறையாத; தக்கார்-நல்ல வழியில் நடப்பவர். 43. நீரவர் - அறிவுடையவர்; கேண்மை - நட்பு; நீர - தன்மையின; பேதையார் - அறிவற்றவர். 44. மருவுக-கொள்ளுக; ஒருவுக-நீக்குக. 45. குன்றுவ - ஒழுக்கம் குறையும் செயல்கள். 46. கவரிமா - ஒருவகை மான்; மானம் வரின் - மானம் அழிய வந்தால். 47. கீழ் அல்லவர் - மேலோர். 48. நாண் - பழி பாவங்கட்கு நாணுதல்; ஒப்புரவு - யாவருக்கும் உபகாரம் செய்தல்; கண்ணோட்டம் - தாட்சணியம்; சால்பு - சால்பு என்ற பாரம்; ஊன்றிய - தாங்கிய. 49. உலகு - உலக மக்கள்; கை செய்து - கையால் உழவினைச் செய்து; மாலையவர் - இயல்பினையுடையவர்.

2 நன்னெறி: நன்மை + நெறி = நன்னெறி. நன்மையைப் பயக்கும் வழியைப் போதிக்கின்ற நூல். இது நாற்பது வெண்பாக்களால் ஆகியது. இதன் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் காஞ்சிபுரம் குமாரசாமி தேசிகரின் குமாரர். இவ் வீர சைவர் திருச்சிராப்பள்ளி சில்லா துறைமங்கலத்தில் இருநூறு வருடங்களுக்குமுன் வாழ்ந்தவர். இவர் இல்லறத்தை வெறுத்து விவாகமின்றித் தமது 32-வது வயதில் புதுச்சேரியையடுத்த நல்லாற்றூரில் சிவபதம் அடைந்தார்.

அருஞ்சொற்கள்: வேறு - அன்று; பேரும் (பேறு + ஆம்) - செல்வம் ஆகும். புயல் - மேகம்.

2. அடல் - வல்லமை; ஏறு - ஆண்சிங்கம்; அனைய - ஒத்த; முனிக்கரசு - அகத்திய முனிவர்.

புராணக் கதை: ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது. அதில் அசுரர் தலைவன் கடலிற் புகுந்து ஒளிந்தனன். அவனை வெளிப்படுத்தும் பொருட்டு, தேவேந்திரன் கேட்டுக்கொண்டவாறு அகத்திய முனிவர் கடலைக் கையால் அள்ளிப் பருகினாரென்பது வரலாறு.

3. தெரி - தேர்ந்தெடுக்கப்பட்ட; இழாய்-ஆபரணத்தையுடைய பெண்ணே; மண்டு - நெருங்கிய; கலுழும் - அழும்; எரியின் - தீயிலிட்ட; இழுது - நெய்.

ஒரு பெண்ணை முன்னிலையாக விளித்துப் பாடும் பாட்டு மகடூஉ முன்னிலை எனப்படும்; ஆணை விளித்துப் பாடும் பாட்டு ஆடூஉ முன்னிலை ஆகும்.

4. உகவாமல் - விரும்பாமல்; எயிறு - பல்.

5. முனிவினும் - கோபம் உள்ளபொழுதும்; முதுமை + அறிஞர் = மூதறிஞர்; கதலி - வாழை.

3. திரிகடுகம்: இதனைக் கடைச் சங்கப் புலவர் நல்லாதனார் என்பவர் இயற்றினார். சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று காரப்பொருள்களும் எவ்வாறு உடலுக்கு வரும் பிணியை அகற்றுகின்றனவோ, அவ்வாறு ஒவ்வொரு பாட்டிலும் கூறப்படும் மும்மூன்று கருத்துக்களும் உயிர்க்கு வரும் இம்மை மறுமைத் துன்பங்களை ஒழித்துப் பேரின்ப வீட்டைக் கொடுக்கும்.

1. தாள் ஆளன் என்பான் - முயற்சியை உடையவன் என்று சொல்லப்படுவன்; வேள் ஆளன் - உதவிசெய்யும் தன்மையுடையவன்; கோள் ஆளன் - (நுட்பமான பொருளை யும் மனத்தில்) கொள்ளுதல் உடையவன்; கேள் ஆக - நட்பினராக.

2. தகைமை - தன்மை; மானத்தார் - பழிக்கஞ்சும் தன்மையுடையவர்; கடிந்த - நீக்கிய; தெற்கென - தெளிய; ஆர்க்கும் - கட்டுகின்ற.

3. வெல்வது - சொல் வெற்றியை: வெகுண்டு - சினந்து நோம்பு - விரதம்; இல்லது - கிடைத்தற்கரிய பொருளை; காமுற்று-விரும்பி; கல்வி - பிறரது கல்வியில்; செவிக்குற்றம்- செவியினாலே குற்றத்தை.

4. தருக்கல் – செருக்கடைதல்; கொன்னே - வீணாக; வெகுளி - கோபம்; முன்னிய - நினைத்த; வெஃகும் - விரும்பும்; படை - ஆயுதம்.

5. அடைகொடாதான் - நிறைத்து வைக்காதவன்: துவ்வான் - (தானும்) அனுபவிக்காமல்; இறந்து - தன்னிலை கடந்து; இன்னா - துன்பம் தரும் சொற்களை.

சதகம்: இது நூறு பாடல்களைக் கொண்ட ஒருவகை நீதி நூல்.

1. தண்டலையார் சதகம்: இது 'திருத்தண்டலை நீணெறி' என்ற தலத்திலுள்ள சிவபெருமான்மீது பாடப்பட்ட நூல். இதன் ஆசிரியர் படிக்காசுப் புலவர் ஆவர். காலம்: 17-ம் நூற்றாண்டு

சிட்டர் - அறிஞர்; மட்டு - தேன்.

**2.** திருவேங்கட சதகம்: இந்நூலை இயற்றியவர் **நாராயண பாரதி**. இவரது ஊர் தொண்டை நாட்டிலுள்ள வண்ணெய் என்பர். இவர் வைணவ அந்தணர்.

முனிதல் - வெறுத்தல், கோபித்தல்; எண்ணாது - சிந்திக்காமல்; உறை - தங்குகின்ற; அலர் - தாமரை மலர்; மணவாளன் - கணவன்; வரதன் - (அடியார் வேண்டும்) வரங்களைக் கொடுப்பவன்; வேங்கடராயன் - திருவேங்கட மலையிலுள்ள திருமால்.

---

# III. கதை மலர்

**1.** விருந்தோம்பல்: இப்பகுதி **பஞ்சதந்திரம்** என்ற நூலில் அமைந்துள்ளதாகும். வடமொழியிலுள்ள பஞ்ச தந்திரம் என்ற நூலைத் தமிழில் ஆக்கியவர் **வீரமார்த்தாண்ட தேவர்** என்பவர். இவர் சமீப காலத்தில் வாழ்ந்தவர். இந் நூலில் பல நீதிக் கதைகள் அமைந்துள்ளன. விருந்தோம்பல்- விருந்தினரை உபசரித்தல்.

அருஞ்சொற்கள்: கனம் - மேகம்; மருண்டு கலங்கி; பேட்டை - பெண் புறுவை; வனசரன் - வேடன்; அங்கையுறு- உள்ளங்கையிலுள்ள; எரிகொளுவி - நெருப்பு மூட்டி; கதி - நற்கதி; சரணார்த்தி - அடைக்கலம்; புரக்க - காக்க; பொன்ற- அழிய.

2. புத்தரும் குழந்தையை இழந்த தாயும்: இக்கதைப் பகுதி ஆசிய ஜோதி என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூலை இயற்றியவர் கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை ஆவர்; இவரது வாழ்க்கை வரலாற்றை இவ்வாசகத்தின் உரை நடைப் பகுதியில் காண்க.

இக்கதைப் பகுதியில் தனக்கிருந்த ஒரே மகவை இழந்த ஒரு தாய், புத்தரை அடைந்து வணங்கி, பாம்பு கடித்து இறந்த தன் மதலையைக் காட்டி, உயிர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றாள்.

---

## IV. வருணனை மலர்

1. மயில்: இதை இயற்றியவர் புரட்சிக் கவி பாரதிதாசன். இவரது ஊர் புதுவை. இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம்.

அருஞ்சொற்கள்: அஞ்சுகம் - கிளி; புளகித்து - மகிழ்ச்சியால் மயிர் சிலிர்த்து; கடி - வாசனை, ஒளி.

2. வெண்ணிலா: மீன்கள் - நட்சத்திரங்கள்.

---

## V. பலவகைப் பாமலர்

1. ஆடு ராட்டே: பாரதநாடு சுதந்திரம் பெறுவதற்குக் காந்தியடிகள் ஆயுதமாகக் கொண்ட இராட்டையின் சிறப்பைக் கூறுவது இப்பாடல்.

அருஞ்சொற்கள்: எத்து-வஞ்சகம்; பங்கம் - இழிவுநிலை.

2. ஆடையின் பெருமை: மேதினி - பூமி; நுவல் - சொல்லப்பட்ட; மகளை - இலக்குமியை; ஆலாலம் - ஆலகால விஷத்தை; அரன் - சிவபெருமான்; எண்ணார் - மதியார்.

3. உழவு: பைங்கூழ் - பயிர்; காசினி - பூமி.

4. வாழ்க்கைப் பயன்: புலன் ஐந்து - ஐம்பொறிகள்; சாவாமல் - மறவாமல்; ஊண் - உணவு.

ஆவணக்காப்பக
132172
TB
03(01)
N33

---

Printed at The Homoeopathy Press, Kumbakonam.

2398

# POONTAMIL VACHAGAM

BOOK VII

Vidvan T. PATTUSAMI ODHUVAR
Vidvan G. RATHINAM PILLAI
Ponniah High School :: Tiruchirappalli

V. S. VENKATARAMAN & Co.
EDUCATIONAL PUBLISHERS
Sri Veda Vinayagar Street, KUMBAKONAM. | 144, Sri Ramakrishna Math Road, Mylapore : MADRAS-4.
Price : As. 14 = 87 Naye Paise